

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பராகுவேயில் நடைபெற்ற சுமோ மல்யுத்தப் போட்டியின்போது உலக சுமோ சாம்பியனான அமெரிக்க வீரர் இம்மானுவெலுக்கு செக்கோஸ்லோவாக்கிய பெண் சுமோ வீராங்கனையான கிளாரா ஜாலு பாராட்டுத் தெரிவிக்கிறார்.



"அதோ அந்தப் பறவை போல வாழவேண்டும்..." - ஊதிய உடம்புடன் வீதியில் வேடிக்கை காட்டுகிறார் ரஷ்ய நடிகர் ஒருவர்.




பிரேஸிலில் வாகனங்கள் கழுவுமிடத்தில் யானையும் கழுவப்படுகிறது.



இது செயற்கை அல்ல. 24 வயதுச் சீன இளைஞரின் உண்மைத் தோற்றம். நிறை 191 கி.கிராம். எடைகுறைப்பு மருந்துக்கான விற்பனை நிலையம் ஒன்றில் வந்து காத்திருக்கிறார்.





குடிப்பது எல்லாவுயிருக்கும் பொது; குடிகாரனாவது மனிதன் மட்டும்தான்!
குளிப்பதும் எல்லாவுயிருக்கும் பொது; குளிர் காய்ச்சல் மனிதனுக்குத்தான்!



நடைபெறப் போகும் உலகக் கிண்ண கால்பந்து போட்டியையொட்டி ஜப்பானில் கால்பந்து வடிவில் செய்து விற்கப்படும் போத்தல்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமுதக் கடலில்


அமுத வாசல் . . . . . . . . . . . . . . . . . . . . 2

வரிகளால் வாழும் வரிக்குதிரை . . . . . . 4

நெற்றிக்கண் . . . . . . . . . . . . . . . . . . . . . 5

அரசியல்

தென் மராட்சி இன்று . . . . . . . . . . . . . . 6

காஷ்மீர்

என்னதான் பிரச்சினை . . . . . . . . . . . . 9

சிறு கதை

ஓர் இரவில் . . . . . . . . . . . . . . . . . . . . . . 14

மலையகத்தின் கல்வி . . . . . . . . . . . . 17

பரிசுக் கதை

ஒரு கழுத்துச் சதங்கை . . . . . . . . . . 20

கழுத்தில் தொங்கும் பாராங்கல். . . . . . . 24

உதுவன்கந்த சரதியல் . . . . . . . . . . . 25

நீங்கள் தூவிய மலர்கள் . . . . . . . . . . 28

கனவான்கள் விளையாட்டு

கதை என்ன ஆச்சு . . . . . . . . . . . . . . 30

இந்த நாளில் அன்று . . . . . . . . . . . . 34

சிறு கதை

வாழ்க்கை நாடகமல்ல . . . . . . . . . . . 36

அது ஒரு காலம் . . . . . . . . . . . . . . . 37

குறுக்கெழுத்துப் போட்டி . . . . . . . . . 41

சினிமா:

நான் சினிமா இயக்குனர்

ஆனபோது . . . . . . . . . . . . . . . . . . . . . 42

மருத்துவம்:

HEALTH FILE . . . . . . . . . . . . . . . . . . . 47

நூல் அறிமுகம் . . . . . . . . . . . . . . . . 48




06

தென்மராட்சி இன்று


பொதுசன நூலகம்
18 MAY 2002
யாழ்ப்பாணம்


09

காஷ்மீர் என்னதான் பிரச்சினை






கனவான்கள் விளையாட்டு

30


பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்




42

நான் சினிமா இயக்குனர் ஆனபோது


உங்கள் ஆக்கங்கள் அபிப்பிராயங்களை
அமுது வரவேற்கிறது.
ஆசிரியர், 'அமுது'
இல: 35, டி.ஆர். விஜேவர்த்தன மாவத்தை,
கொழும்பு 10.
தொலைபேசி: 429496,
ஃபக்ஸ்: 429270

E-Mail: webmgr@sri.lanka.net



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரண்டு பக்கங்களில் கண்ணுக்கு குளிர்ச்சி!

பாதை திறந்தொரு பயணத்துடன் புறப்பட்ட அமுதே! அமுதக்கடலில் மூழ்கி முத்தெடுத்தேன். மின்வெட்டிலும் வெட்டும் மின்மினிகள் போல எந்தத் தடை வந்த போதும் நீ சோர வில்லை. வாசலைத் தாண்டி வந்து நெற்றிக் கண் பார்வையினால் எல்லாவற்றையும் தவிடு பொடியாக்கி விட்டாய்... மேலும் புதிய உத்வேகத்துடன் புறப்பட்டு வெற்றிபெற வாழ்த்துகிறேன்.

*- எம். எம். ஹபதுல்லா,*
*கல்பிட்டி.*

எனது 'கொம்புத்தேன்' என்ற சிறுகதையையும், 'பேராசை வேண்டாம்' என்ற கவிதையையும் அமுதில் பிரசுரித்திருந்தீர்கள். ஆதரவுக்கும் ஊக்கத்திற்கும் என் உளமார்ந்த நன்றிகள்.

*- எம். ஐ. எம். தாஹிர்,*
*கிண்ணியா - 6.*

மார்ச் இதழில் 'சர்வதேச பெண்கள்' தினத்தை நேர்த்தியாக, தரத்தில் என்றும் குறைவில்லாது வெளிவந்திருக்கிற அமுதே! சிறந்த கவிதைக்கு முதலிடம் கொடுத்து நீங்கள் தூவிய மலர்கள் இரண்டு பக்கங்களில் கண்ணுக்கு குளிர்ச்சியைத் தருகிறது. வாழ்த்துக்கள்.

*- ஆர். ரஜினி,*
*அட்டம்பிட்டிய.*

வரலாறு செய்த குற்றம் - சரதியலின் வாழ்க்கை வரலாற்றை அமுது வாயிலாகவே நான் அறிந்து கொண்டேன். இவ்வாறு வரலாற்றில் மாற்றி எழுதப்பட்ட சம்பவங்களை தொடர்ந்து அமுதுவில் சேர்த்துக் கொண்டால் சிறப்பாக இருக்குமல்லவா! செ. யோகநாதனின் 'நான் ஒரு தனி ஆள்' சிறுகதையை பார்த்தபோது இந்த இலையைப் போல, வாழ்வின் நினைவுகளிலே கசந்து போனவையெல்லாம் சருகாக உதிர்ந்து போனால் என்னவென்றே எனக்கும் தோன்றியது.

*- எம். மனோஜ்,*
*தலவாக்கலை.*




அழகிய முறையிலே அதிகமதிகமான விடயங்களை தாங்கி வந்து வாசகர்கள் மத்தியில் தனக்கென்று தனியானதோர் இடத்தினைப் பிடித்து தொடர்ந்தும் தன் பணியினால் படிப்போரை பரவசத்திற்குள்ளாக்கிக் கொண்டிருக்கும் அண்மைக்கால பத்திரிகை சஞ்சிகைகளுள் "அமுது' தனியானது என்பதை யாரும் மறுப்பதற்கில்லை.

*- திலீப் ஏ. சமது,*
*மூதூர் - 5.*

உன்னை அங்கம் அங்கமாக
ஆய்வு செய்கின்றேன்.
அனைத்துமே
சான்றாண்மைக்கு சார்புடையவை.
சமுதாயச் சந்தையில்
சரியான சரக்குகளை
சரியான வேளையில்
சந்தைப்படுத்துகின்றான்.
சரியாத உன் சேவை தொடர வாழ்த்துக்கள்.

*- இ. பதியுத்தீன்,*
*ஏறாவூர் 02.*

அம்சங்கள் அனைத்தும் மிகவும் அற்புதம்! அரசியல் மட்டுமல்ல, சிறுகதைகள், கவிதைகள், சினிமா என அனைத்தையும் ஒன்று விடாமல் அலசி ஆராய்ந்துவிடுவேன். ஆனால் மிகுந்த தாமதமாகவே வருகிறதே ஏன்?

*- ரவிக்குமார்,*
*எட்டியாந்தோட்டை.*

தங்களின் மாத வெளியீடான அமுது சஞ்சிகையை தவறாமல் படித்து வருகிறேன். கடந்த சில வருடங்களாக எழுத்தின் தன்மையாலும், பிரசுரமாகும் ஒவ்வொரு கதை, கட்டுரை, கவிதை, அரசியல் இன்னும் பல அம்சங்களால் கவரப்பட்டுள்ளேன்.

*- முஹம்மட்,*
*கல்பிட்டி.*

அமுதின் 'நெற்றிக்கண்' குறை நிறைகளை சுட்டிக் காட்டும் விதம் அபாரம். அரசியல் விடயங்களின் உண்மை நிலைகளை ஆழ்ந்து ஆராய்ந்து வெளிப்படுத்தும் அமுதின் பாணி மிகச் சிறப்பு. 'நீங்கள் தூவிய மலர்கள்' இரண்டு பக்கங்களில் ஆனது இதயம் கவர்கிறது. அமுதில் விளையாட்டுப் பகுதியும் ஆரம்பித்தால் சிறப்பாக இருக்கும்.

*- எஸ். செல்வானந்த,*
*வத்தேகம.*




மார்ச் இதழில் வெளிவந்த படைப்புக்கள் அனைத்தும் சிறப்பாய் அமைந்திருக்கிறது. 'இந்த நாளில் அன்று' வரலாற்றில் இடம்பெற்ற மறக்க முடியாத நிகழ்வுகளை பதிவு செய்திருக்கிறது. பாதுகாக்கப்பட வேண்டியதொன்றாய் அமைந்துள்ளது. பஸ்ஸின் கதை நமது அன்றாட வாழ்வில் நிகழும் சம்பவத்தை மட்டுமல்ல கடந்தகால பஸ்ஸின் வரலாற்றையும் படம்பிடித்துக் காட்டியுள்ளது.

*- செல்வி ஆர். ரஞ்சனி,*
*கொழும்பு 14.*

தங்கள் மாதாந்த சஞ்சிகையின் அபிமான வாசகன். கடந்த இரு வருடங்களாக தங்கள் சஞ்சிகையின் முழு விடயங்களையும் வாசித்து வருகிறேன். 'தமிழுக்கு அமுது என்று பெயர்' என்ற மகுடவாசகம் மிகவும் பொருத்தமானது. அமுதமாகவே அனைத்தும் உள்ளன.

*- பிரம்மஸ்ரீ ச.க. சுதர்சனக்குரு,*
*புத்தூர்.*

இராகவனின் 'கப்பற் கொள்ளை' சிறப்பு. சென்ற நூற்றாண்டின் பாணியிலேயே கதைகளை எழுதி வருவோர் மத்தியில் இராகவன், நவீன கதைஞராக மிளிர்கிறார். பாராட்டுக்கள்!

*- இரா. விஜயேந்திரன்,*
*மட்டக்களப்பு.*

பாலகர் முதல் பட்டப்படிப்பு முடித்த, பல்விழுந்த பாட்டி வரை நேசிக்கும் வாசிக்கும் ஒரே இதழ் அமுது என்பதில் யோசிக்க வேண்டிய தேவையில்லை. 'அமுது'வின் சேவை பாராட்டப்பட வேண்டியது. தொடரட்டும் அமுதுவின் பணி!

*- H.M. Suaib,*
*Nuraichcholai.*

பாதை திறந்தொரு பயணம் முதல் தப்ப முடியாத கனவுலகு வரை அமுதின் அனைத்து அம்சங்களும் வெகுஜோர்! வாசலைத் தாண்டிய கடிதங்கள் பகுதியையும், இன்னும் புதிய அம்சங்களையும் சேர்த்துக் கொண்டால் மென்மேலும் சிறப்படையும்.

*- அ. சுதர்ஷினி,*
*கொழும்பு 04.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையின்
முதலாவது
தேசிய தமிழ் சஞ்சிகை

# நல்லதோர் வீணை செய்தே....



## தமிழ் - முஸ்லீம் உறவில் வரலாற்று நிகழ்வு!

ஏப்ரல் 13ம் திகதி வன்னி - கிளிநொச்சியில் தமிழீழ விடுதலைப் புலிகளின் தேசியத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்களுக்கும், ஸ்ரீலங்கா முஸ்லீம் காங்கிரஸின் தேசியத் தலைவரும் அமைச்சருமான ரவூப்ஹக்கீம் அவர்களுக்கு மிடையில் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த சந்திப்பு நிகழ்ந்ததுடன் இரு தரப்பினருக்குமிடையில் புரிந்துணர்வு உடன்பாடொன்று ஏற்படுத்தப்பட்டது. அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் ஏற்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையைத் தொடர்ந்து இவ் உடன்படிக்கை கைச்சாத்தானது இனப்பிரச்சினைத் தீர்வுக்கும் சமாதான முயற்சிகளுக்குமான பயணத்தில் இன்னுமொரு அடியெடுப்பாகும்.

வன்னி சென்ற முஸ்லீம் காங்கிரஸ் தலைமைத்துவத்தை, விடுதலைப் புலிகளின் தலைமை, அரசியல் ரீதியாகக் கௌரவித்தது மட்டுமின்றி, அவர்களை மத, கலாசார ரீதியாகவும் பெருமதிப்பளித்து வரவேற்றமை இரு பகுதியினருக்கும் இடையில் கடந்த காலத்தில் இருந்து வந்த தப்பெண்ணங்களையும் பெருமளவு நீக்கியுள்ளது. குறிப்பாக தமிழ் மக்களுடன் பிட்டும் தேங்காய்ப்பூவும் போல ஒன்றித்து வாழ்கின்ற வடக்கு-கிழக்கு முஸ்லீம் மக்களின் மனதில் நம்பிக்கை வித்துக்களை ஊன்றியுள்ளது.

தனது அயல் வீட்டவனை மதிக்காதவன் அந்நியனின் மதிப்பை எதிர்பார்க்க முடியாது என்ற உண்மையை இந்த நாட்டின் அனைத்து மக்களும் அண்மைக் காலமாக மிகுந்த அனுபவ அறிவுடன் ஏற்று நடப்பது நம்பிக்கை ஒளியைத் தூண்டிவிட்டுள்ளது. அந்த வகையில் தமிழ் - முஸ்லீம் மக்களுக்கிடையிலான பரஸ்பர உறவும் வளர்ச்சி பெறுவது அவசியமானது.

இவ்விரு இன மக்களும் மொழியால் மட்டுமின்றி சிறுபான்மைத் தேசிய இனங்கள் என்றவகையிலும் ஒரே வகையான பிரச்சினைகளையே எதிர்நோக்குபவர்கள், அதேவேளையில் ஒரே வாழ்க்கைப் பிரதேசத்தைப் பொதுவாகக் கொண்டிருந்தாலும் தனித்துவம் மிக்கவர்கள்.
முஸ்லீம் மக்களின் தலைமைத்துவத்தை மதிப்பதின் தொடர்ச்சியாகவும் வளர்ச்சியாகவும் அம்மக்களின் தேசிய இனக் கோரிக்கைகளை அரசியல் ரீதியாக அங்கீகரித்து நடைமுறைப் படுத்துவதினூடாக தற்போதைய நல்ல நிலைமையை முன்னெடுத்துச் செல்ல இருபக்கத் தலைமைகளும் திடசங்கற்பம் கொள்வதே இன்றைய வரலாற்றுத் தேவையாகும்.

- ஆ-ர்.

நிர்வாக ஆசிரியர், தமிழ் பிரசுரங்கள்
என். எம். அமீன்

பக்க வடிவமைப்பு (கணனி):
ஜெறால்ட் எஸ். நடேசன்
எழுத்தமைப்பு (கணனி):
எஸ். எம். பிரேம்குமார்

அச்சிட்டு வெளியிடுவோர்:
அசோஸியேடட் நியூஸ் பேப்பர்ஸ் ஒ‥ப் சிலோன் லிமிடெட்
இல. 35, டி.ஆர். விஜேவர்த்தன மாவத்தை,
கொழும்பு 10.
Phone: 429496, Fax: 429270
E-Mail: webmgr@sri.lanka.net

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரிகளால் வாழும் வரிக்குதிரை

மயில் எல்லோராலும் ரசிக்கப்படும் பறவையாக இருப்பது போல வரிக் குதிரை எல்லோராலும் ரசிக்கப்பட க்கூடிய மிருகம். அதன் கறுப்பு, வெள்ளை அதற்கு அப்படியொரு கவர்ச்சியை அளிக் கின்றது.

வரிக்குதிரையைப் பார்த்தவுடன் எம க்கு குதிரையைப் போல அல்லது கழுதையைப் போலத்தான் தோன் றும். உண்மையும் அதுதான். கழுதை, குதிரை, வரிக்குதிரை எல்லாமே ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவையே. (equidae) இகூடே என்பது இதன் குடும்பப் பெயர்.

வரிக்குதிரை நம் இலங்கையில் இல்லை. இந்தியாவிலும் இல்லை. ஆபிரிக்காவில்தான் அதிகமாக இருக்கின்றன. அதுதான் வரிக்குதி ரையின் தாயகம். அடுத்து கென்யா, எதியோப்பியா, சோமாலியா ஆகிய நாடுகளிலும் காணப்படுகின்றன.

வரிக்குதிரை பரந்த வெளிகளில் தான் வாழும். அதுவும் கூட்டம் கூட்டமாக, குடும்பத்தாரோடு, சுற் றத்தாரோடு.

கூட்டமாக இருக்கும்போது ஏதோ சிறு வர், கண்காட்சியில் வரிசையாக இருப்பது போல இவையும் வரிசை குலையாமல் நின்று கொண்டிருக்கும். இது அவற்றின் அன்றாடக் கடமைகளில் ஒன்று. ஒருவரை ஒருவர் நாக்கினால் நக்கி சுத்தம் செய்து கொள்வதற்காகவே இப்படி நிற்கின்றன. வலது புறம் ஒரு குதிரை மற்ற குதிரையை நக்கி விட்டால் மற்றுமொரு குதிரை அதன் இடது பக்கத்தை நக்கி விடும். காலை நேரங்களில் ஒரே நக்கல்தான்.

வரிக்குதிரை ஒரு தாவரபட்சிணி. சுத்த சைவம். இலை, குலை, புல், கொடி இவை அதன் உணவுகள். ஒரு நாளைக்கு 9 கிலோவை அரைத்து உள்ளே தள்ளிவிடும்.

இப்படி நாளொன்றுக்கு ஒன்பது கிலோ உணவை அரிசி ஆலைபோல அரைத்துத் தள்ளுவதற்கு ஏற்ற வகையில் அவற்றின் பற்கள் அமைந்துள்ளன. இதனால் அந்த பற்கள்அடிக்கடி தேய்ந்துவிடுகின்றன. அதற் காக ஆலைகளில் பிளேடுகளை மாற்றுவது போல பற்களை மாற்ற வேண்டிய அவசிய மில்லை. பல் தானாகவே வளர்ந்து விடும், ஆயுள் பூராவும்.


வரிக்குதிரை தாவர உணவு இல்லாம லும் வாழக்கூடியது. ஒட்டகச்சிவிங்கி தனது முதுகில் கொழுப்பை சேகரித்து வைத்து தனது தேவைக்கு அவ்வப்போது எடுத்துப் பயன்படுத்திக் கொள்வது போல வரிக்குதி ரையும் தனது தோலின் கீழ் சேகரித்து வைத்துப் பயன்படுத்திக் கொள்ளும்.

வரிக்குதிரையின் சிறப்பம்சம் அதன் உட லிலுள்ள கறுப்பும் வெள்ளையுமான கோடு களதான். அந்தகோடுகள் எம்மைக் குழப்பி விடுகின்றன. ஏனைய மிருகங்களையும் குழப்பி விடுகின்றன. அந்தக் குழப்பத்திலிரு ந்து அவை மீள்வதற்கு முன் எதிரிகளிடமி ருந்து தப்பி விடுகின்றன. அந்த வரிகளா ல்தான் உயிர் தப்புகின்றன.

சிங்கம்தான் இதன் முக்கிய எதிரி. சிங் கம் பின்புறமாக வந்தாலோ அதன் பல்லுப் போய்விடும் இது உதைக்கும் உதையில். இறுதியில் வெல்வது வரிக்குதிரைதான்.

சிங்கம் மட்டுமல்ல மனிதனும் வரிக்குதி ரைக்கு எதிரிதான். இறைச்சிக்காகவும் இதன் அழகிய தோலுக்காகவும் வரிக்குதிரைகளை வகைதொகையின்றி வேட்டையாடி வருகின் றார்கள். இதன் தோல் பெறுமதி கூடியது. அதிகமான கலைப் பொருட்கள் செய்யப் பயன்படுத்தப்படுகின்றது.

இதன் காரணமாக வரிக்குதிரைகள் அருகி உலகில் மொத்தமாக 15000 தான் என்பதா கக் குறைந்து விட்டது.



– விஷ்மிதா

கழுதை, குதிரையைப் போல வரிக்குதிரை யை பழக்கி வீட்டில் வளர்க்க முடியாது. வேலை வாங்க முடியாது. முரட்டு சுபாவம் கொண்டது.

தாய்க் குதிரை 370 நாட்கள் வயிற்றில் கருவை சுமக்கும். குட்டி பிறந்த உடனே யே எழுந்து நின்று விடும். ஏன் ஓடவும் செய்யும். தாயின் அரவணைப்பில் இரண்டு வருடங்கள் வாழும். அதன் பிறகு அதன் வழி தனி வழி.

தாயின் பராமரிப்பில் இருக்கும் காலத் தில் பயணங்கள் போவதானால் குட்டியை நடுவில் விட்டு அம்மாவம் அப்பாவும் இரு புறத்திலும் இருப்பார்கள்.

வரிக்குதிரையின் ஆயுள் மனிதனின் ஆயு ளில் மூன்றில் ஒரு பங்குதான். சராசரி 20 வருடங்கள்.

வரிக்குதிரையை கிரேவிஸ் ஸீப்ரா என்று அழைப்பர். 1880ல் எதியோப்பிய மன்னன் அப்போதைய பிரான்ஸ்அதிபர் ஜீல்ஸ் கிரே விக்கு ஒரு வரிக்குதிரையை அன்பளிப்பாக வழங்கினார். அதிலிருந்து அது கிரேவிஸ் என்ற பெயரால் அழைக்கப்படுகின்றது. ●


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நமது பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அவர்கள் பதவியேற்றதும் முதலில் விஜயம் செய்த நாடு இந்தியாவாகும். இதன் நோக்கம் இந்தியாவுடனான பாரம்பரிய நட்புறவை எடுத்துக் காட்டுவது மட்டுமல்ல. புரையோடிப் போயிருக்கின்ற இலங்கையின் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு தனது அரசு எடுக்க உத்தேசித்துள்ள நடவடிக்கைகளை இந்தியத் தலைவர்களுக்கு விபரித்து அதற்கு அவர்களின் ஆதரவைப் பெறுவதற்குமாகும்.

இந்த நாட்டின் தேசிய இன முரண்பாட்டுப் பிணக்கில் ஈடுபட்டிருக்கும் இரண்டு பிரதான இனங்களான சிங்களவர்களும் தமிழர்களும் இந்தியாவையே பூர்வீகமாகக் கொண்டவர்கள். அவர்கள் பின்பற்றும் மதங்களான பௌத்தம், இந்து என்பனவும் இந்திய மண்ணில் ஊற்றெடுத்தவையே. ஒரு காலத்தில் இலங்கை இந்தியாவுடன் தரை-வழித் தொடர்பைக் கொண்டிருந்தமைக்கான வரலாற்றுச் சான்றுகளும் உள்ளன. தரைவழித் தொடர்பு இயற்கையின் ஊழித்தனத்தால் அழிந்த பின்பும், உணர்வு ரீதியான இணைப்புப் பாலம் நீடித்தே வந்துள்ளது.


ஆனால் உலகில் வல்லரசுகளின் தோற்றமும் நாடுகளின் சுதந்திரப் போராட்டங்களும் 20ம் நூற்றாண்டின் நடுப் பகுதியில் உலக அரசியல் வரைபடத்தை புதிதாக மாற்றி அமைத்தன. இலங்கையும் இந்தியாவும் சுதந்திர நாடுகளாயின. இரு நாடுகளிலும் இனப்பிரச்சினை பிரதான பிரச்சினை ஆகியது. பாக்குநீரிணைக்கு அப்பால் ஆறு கோடித் தமிழர்களின் இருப்பு இலங்கைத் தமிழர்களுக்கு மனோரீதியான தைரியத்தை வழங்க, அதுவே இலங்கையின் பெரும்பான்மை மக்களான சிங்களர்களுக்கு அச்சமாக மாறியது.

ஆனால் இலங்கையின் இனப்பிரச்சினையின் கூர்மையும் தீவிரமும் தமிழர்களின் 'நேசநாடான' இந்தியாவின் இளம் தலைவரும், நேருவின் பேரனும், இந்திராகாந்தியின் புதல்வருமான ராஜீவின் உயிரை இலங்கைத் தமிழர்களே பறிக்கும் துன்பியல் நிகழ்வுக்கு வரலாற்றுக் கறைபடிந்த செயலுக்கு இட்டுச் சென்றது.

ஆனால் வரலாறு தான் எவ்வளவு அதிசயிக்கத் தக்க பாதையில் நடைபோடுகின்றது! இந்தியாவை சென்ற நூற்றாண்டின் இறுதியில் எதிரியாக நோக்கிய சிங்களவர்களும் தமிழர்களும் இன்று இலங்கை இனப்பிரச்சினைத் தீர்வுக்கு உதவும்படி கோரிநிற்கின்றனர். இந்த நாட்டின் இந்த இரு இனங்களும் தமக்குள் உண்டான முரண்பாட்டை தாமே தீர்க்கத் தவறியதின் விளைவாகவே 1987ல் இந்தியாவின் உதவி எமக்குத் தேவைப்பட்டது. ஆனால் அந்த உதவியை குறுகிய நோக்கங்களால் நாம் இருவருமே சரியாகப் பயன்படுத்தத் தவறினோம்.

அந்த தவறின் விளைவாகவே இன்று நாம் சர்வதேச உதவியை (நோர்வேயின்) நாடி நிற்கின்றோம். ஆனால்

# இலங்கையால் நிராகரிக்க முடியாத இந்திய நட்புறவு




நக்கீரன்

அந்த நோர்வேயோ தனது ஒவ்வொரு நடவடிக்கையையும் இந்தியாவுக்கு அறிவிப்பதைக் கடமையாகச் செய்து வருகின்றது. நோர்வேக்குப் புரிந்த அந்த விடயத்தை எமது இரு இனத் தலைவர்களும் காலம் தாழ்த்தி இப்போதுதான் உணர ஆரம்பித்திருக்கின்றனர் போல் தெரிகின்றது.

எது எப்படியிருந்த போதிலும் எமது தேசியப் பிரச்சினை உள்நாட்டுப் பிரச்சினை என்ற நிலையிலிருந்து கடந்த நூற்றாண்டின் பிற்பகுதியில் பிராந்தியப் பிரச்சினையாக மாறியது. இப்பொழுது அது சர்வதேசப் பிரச்சினையாக மாறியுள்ளது. சர்வதேசப் பிரச்சினையாக மாறுவதென்பது நிச்சயமாக தீர்வுப் பாதையை நோக்கிச் செல்வது என்ற தவறான கருத்து எமது நாட்டு மக்களிடம், குறிப்பாக தமிழ் மக்களிடம் வேரூன்றியுள்ளது. ஆனால் அது ஒரு பக்க உண்மை மட்டுமே. பாதகமாகவும் மாறலாம் என்பதற்கு பாலஸ்தீனம் உதாரணமாக இருக்கின்றது. இதன் அர்த்தம் அனுசரணையாளர் பற்றிய ஐயப்பாடு அல்ல. இன்றைய உலகில் ஒவ்வொரு நாடும் குறிப்பிட்ட அரசியல் நோக்கங்களுடனும் தலைமைகளுடனும் இணைக்கப்பட்டுள்ளது என்பதே அதன் அர்த்தம்.

இந்தச் சூழ்நிலையில் இந்தியாவின் உதவியை இருதரப்பும் நாடுவது ஒரு நல்ல அறிகுறி. அதன் வெளிப்பாடாக பிரதமர் மட்டுமின்றி அவரது அமைச்சர்களும் எதிரணியைச் சேர்ந்த ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவும் இந்தியாவுக்கான விஜயங்களை மேற்கொண்டமை நல்ல முயற்சிகளாகும். எமது 'தாய் நாடு', அயல் நாடு என்பதற்கும் அப்பால் இந்தப் பிராந்தியத்திலுள்ள மிகப்பெரிய நாடு என்ற வகையிலும் இந்தியாவின் நட்பும் உதவியும் எமக்கு இன்றியமையாதது.

இலங்கையின் இனப்பிரச்சினை உள்நாட்டுப் பிரச்சினை என்ற போதிலும் எமக்குள்ள பூர்வீக, பூகோள நெருக்கம் காரணமாக இப் பிரச்சினையில் இந்தியாவின் பங்களிப்பு நிராகரிக்க முடியாதது. எமது பிரச்சினையின் தீர்வு ஒருபுறமிருக்க இந்தியாவின் பாதுகாப்பு, உள்நாட்டு ஸ்திரப்பாடு என்பனவும் எமது சிறிய நாட்டின் விவகாரத்தில் பெரிதும் சம்பந்தப்பட்டுள்ளது என்ற பூகோள அரசியலையும் நாம் நிராகரித்துவிட முடியாது. கடந்த காலத்தில் அவ்வாறான நிராகரிப்புப் போக்குகளால் ஏற்பட்ட கசப்பான பாடங்களை இலங்கையின் இரு இனத் தலைவர்களும் கவனத்தில் எப்பொழுதும் வைத்திருப்பது எமது நாட்டின் எதிர்கால நலன்களுக்கு அவசியமானது.

அந்த வகையில், இலங்கை அமெரிக்காவின் தாய்வானாக இருப்பதைவிட அமைச்சர் மிலிந்த மொறகொட கூறியது போல, (அவர் என்ன அர்த்தத்தில் கூறியிருந்தாலும்) சீனாவின் ஹொங் கொங்காக இந்தியாவுக்கு இருப்பதே வெளியார் தலையீடு இல்லாமல் இந்தப் பிராந்தியம் பாதுகாக்கப்படுவதற்கும் இலங்கையின் இனப்பிரச்சினை தீர்வதற்கும் அவசியமானதாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தென்மராட்சி இன்று...

படங்களும் தகவலும்:
ஆர். இராஜகுமார்

யாழ் மாவட்டத்தின் நுழைவாயிலாகவும் பெருநிலப் பகுதியாகவும் இருப்பது தென்மராட்சி. அனைத்து வளங்களும் சிறப்பாக அமைந்த நகரமாகவும் தென்னை வளம் கொண்டதாகவும் செழிப்புற இருந்தது.

அது ஒரு காலம்!

நாட்டின் யுத்தம் பொருளாதாரத்தை மோசமாக அழித்து வரும் வேளையில் குடாநாட்டின் கண்ணாக விளங்கும் தென்மராட்சியும் பெரும் அழிவுக்கு உள்ளாகி இருக்கின்றது.

அண்மையில் தென்மராட்சிப் பகுதிக்கு சென்றவேளை இதுவா தென்மராட்சி என தலையில் கைவைக்கும் அளவுக்கு அழிவுகளே தென்பட்டன. ஏ 9 பாதையூடாக முகமாலையில் உள்ள புலிகளது - இராணுவ சோதனைச் சாவடியைக் கடந்து தென்மராட்சியில் காலடி வைத்தோம். எங்கும் தென்னம் சோலையாக காட்சி தரும் எழுதுமட்டுவாள், மிருசுவில், முகமாலை போன்ற இடங்கள் எங்கும் இருந்த தென்னஞ்சோலைகள் எல்லாம் சுடுகாடாகவே காட்சி தந்தன.



சேதமடைந்த சாவகச்சேரி நவீன சந்தைக் கட்டிடம்

தென்மராட்சி மக்களின் ஆதாரம் ஆக இருந்த தென்னைகள் எல்லாம் செல்வீச்சுக்கள், குண்டு வீச்சுக்களால் எரிந்து முண்டமான மரங்களாகவே நிற்கின்றன. அதுமட்டுமல்ல எங்கும் ''மிதிவெடி அபாயம்'' என்ற பலகையே தொங்குவதால் நிலத்தில் கால் வைப்பதே பயங்கரம். அதனால் அழிந்து போன தோட்டங்களை மீண்டும் புத்துயிர் பெறச் செய்ய முடியாத நிலையில் இருக்கின்றனர்.

இவ்வாறு கொடிகாமம், ஓரளவுக்கு அழிவுகள் குறைவான இடமாக இருந்தாலும் முக்கியமான நகரம் மீளமுடியாத அளவுக்கு அழிந்துள்ளது.

பெரியதொரு நவீன சந்தைக் கட்டிடத்தைக் கொண்டிருந்த நகரம் சாவகச்சேரி. நகரில் உள்ள கடைகள் எல்லாம் இடிந்தும் அழிந்தும் காணப்படுகின்றன. கோயில்களும்கூட இடிந்த நிலையில். இப்பகுதிகளில் எவ்வளவு கடுமையான யுத்தம் நடைபெற்றிருக்கின்றது என்பதை கணிப்பிட இந்த கோயில்களே சான்று என்று கூறலாம். தேர்கள் எரிக்கப்பட்டும் குண்டு வீசி அழிக்கப்பட்டும் கிடக்கின்றன. சராசரியாக பத்துக்கும் மேற்பட்ட ஷெல் குண்டுகள் ஒவ்வொரு கோயில் மீதும் வீழ்ந்து அழித்திருக்கின்றது.

இப்பகுதியில் இருக்கின்ற அனைத்து தெருக்களும் காடுமண்டிக் காணப்படுகின்றது. பெரும் தெருக்களாக இருந்தவை எல்லாம் ஷெல் குண்டுகளாலும் 'கிபிர்' குண்டுகளாலும் அழிந்து போடப்பட்ட தாரே இல்லாது வெறும் ஒழுங்கைகள் போன்றே இருக்கின்றன. மட்டுவில் பகுதியில் 'கிபிர்' விமானங்கள் வீசிய குண்டுகளில் குழிகளே அவைகள். 25இற்கும் மேற்பட்ட பெரும் குழிகள் தோண்டப்பட்டு நீர்



சாவகச்சேரி நகர வீதி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊற்றுக்கள் தோன்றி இருக்கின்றன. 30 - 40 அடி ஆழமான பெரும் கிணறுகள் போன்றே காணப்படுகின்றது.



*சேதமடைந்துள்ள ஆலய உட்புறம்*

இதைவிட மனிதவாழ்வுக்கு ஒளியூட்டும் பாடசாலைகள் எல்லாமே அழிக்கப்பட்டிருக்கின்றது. மட்டுவில் மகா வித்தியாலயம் முற்றாகவே அழிந்து காணப்படுகிறது. இதை விட மட்டுவில் பகுதியில் இருக்கின்ற எல்லா பாடசாலைகளுமே இயங்க முடியாத அளவுக்கு இருக்கின்றன. பாடசாலை தளபாடங்கள், உபகரணங்கள் என எதுவுமே இல்லாத நிலையிலேயே இப்பாடசாலைகள் இருக்கின்றன.

தற்போது ஏற்பட்டுள்ள சமாதான முன்னெடுப்புக்களைத் தொடர்ந்து இப்பகுதிகளில் மக்கள் மீள குடியமர முயற்சித்



*மீளக் குடியமரும் மக்களின் நிலை*

தாலும் எந்தவிதமான அடிப்படை வசதிகளும் இல்லாத காரணத்தால் மக்கள் இன்னமும் மீளக்குடியமர அஞ்சுகின்றனர்.

நகரில் உள்ள ட்றிபேக் கல்லூரியின் அனைத்துக் கட்டிடங்களும் உடைந்து பாழடைந்தே காணப்படுகின்றன. வைத்தியசாலைக்குள் எவரும் நுழைய முடியாத அளவுக்கு இடிபாடுகள் இருப்பதால் தற்போது மீசாலைப்பகுதியில் தற்காலிகமாக வைத்தியசாலை இயங்குகின்றது. உதவி அரசாங்க அதிபரின் காரியாலயம் கூட இடிந்தே இருக்கின்றது.

வங்கிகள், பொது நிறுவனங்கள் என எல்லா கட்டிடங்களும் குண்டு வீச்சுக்களாலும் ஷெல் வீச்சுக்களாலும் தரைமட்டமாகவே கிடக்கின்றன. முன்னர் இருந்த சாவகச்சேரி நகர் இப்போது இல்லை. எந்த சன நடமாட்டமும் இல்லாத ஒரு பயங்கர பூமியாகவே காட்சி தருகின்றது. சந்தைக் கட்டிடப்பகுதி எங்கும் துப்பாக்கி ரவைகளின் அடையாளங்களே. எந்த ஒரு கட்டிடமும் சேதமாகாதவை என்று இல்லை. எல்லாமே இடிந்து மரங்கள், கொடிகள் எல்லாம் வளர்ந்து காடு போன்றே காட்சியளிக்கின்றன.

தென்மராட்சியில் ஆயிரக்கணக்கான கோயில்கள் இருக்கின்றன. தேவாலயங்



*சேதமடைந்துள்ள வீடு ஒன்று*

கள் இருக்கின்றன. சாவகச்சேரி நகரில் இருக்கும் கிறிஸ்தவ தேவாலயத்தின் சுவரும் கூட இல்லாத அளவுக்கு ஆலயம் மிக மோசமாக தாக்கப்பட்டிருப்பது பெரும் கவலையான காட்சி.

இந்துக் கோவில்களில் சாவகச்சேரி துர்க்கையம்மன், மருதடி விநாயகர், வேம்படி கந்தசுவாமி கோவில், தான்தோன்றீஸ்வர சிவன் கோவில், பன்றித்தலைச்சி அம்மன் கோவில் என பிரசித்தமான கோயில்கள் அனைத்துமே மிக மோசமாக இடிபாடுகளை அழிவுகளைச் சந்தித்திருக்கின்றன. ஆலயங்கள் இருந்ததை உறுதிப்படுத்தும் சிறு சிறு பகுதிகளே மிகுதியாக இருக்கின்றன.

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்



*சேதமடைந்துள்ள ஆலயம் ஒன்று*

## வாழ்வதற்கான இரண்டாவது சந்தர்ப்பம்

...எது எப்படியிருந்தாலும் ஒடுக்குமுறைகள், பகற் கொள்ளைகள், அபரிமிதங்களையே நாங்கள் வாழ்வாக எதிர்கொள்கிறோம். வெள்ளங்களும் பஞ்சங்களும் நோய்களும் இயற்கை உற்பாதங்களும் நூற்றாண்டுகளாய் எங்கள் மீது நிரந்தரமாய் திணிக்கப்பட்ட யுத்தங்களும் கூட சாவைத் தாண்டி வாழ்வு மீதான நிச்சயமான பிடிப்பை ஒழித்துவிட முடிவதில்லை.

இந்தப் பிடிப்பு ஒவ்வொரு வருடமும் வேகமாக வளர்கிறது. ஒவ்வொரு வருடமும் மூன்றாம் உலக நாடுகளில், இறப்பவர்களை விட ஏழு கோடியே நாற்பது லட்சம் பேர் அதிகமாகப் பிறக்கிறார்கள். அதாவது, நியுயோர்க் நகரத்தின் ஜனத்தொகை ஒவ்வொரு வருடமும் ஏழு மடங்காகப் பெருகும் நிலை போல.

அதேசமயம், இதுவரை பூமியில் வாழ்ந்த அத்தனை பேரையும், உயிரினங்களையும் நூற்றுக்கணக்கான முறை ஒருசேர அழித்தொழிப்பதற்கான ஆயுதங்களை இந்த வளர்ச்சி பெற்ற நாடுகள்தான் சேர்த்து வைத்துள்ளன.

இப்போது இந்தப் புதிய பயங்கர எதார்த்தத்துக்கு முகம்கொடுத்தாக வேண்டியிருக்கிறது. மனித வரலாற்றில் இதுவரை வெறும் கற்பனா ரீதியில் இருந்து வந்துள்ள இந்த விஷயத்தை, கதை சொல்பவர்களாகிய நாங்கள் எதிர்கொண்டாக வேண்டியிருக்கிறது.

இதற்கென மிகவும் வித்தியாசமான கனவுலகம் ஒன்றை உருவாக்க முனைவதற்கு இன்னும் காலந்தாழ்ந்து விடவில்லை.

அந்தக் கனவு உலகத்தில், யாரும், பிறர் எப்படிச் சாக வேண்டும் என்பதை, அந்தப் பிறருக்காகத் தீர்மானிக்க முடியாது. அந்த உலகத்தின் அன்பு என்பது முழுமையானதாக இருக்கும்; மகிழ்ச்சி என்பது உண்மையிலேயே சாத்தியப்பாடாகும். ஒரு நூற்றாண்டுத் தனிமையாகச் சபிக்கப்பட்ட இனங்களுக்கு, கடைசியில், வாழ்வதற்கான இரண்டாவது சந்தர்ப்பம் கிடைக்கும், நிரந்தரமாக.

*- லத்தின் அமெரிக்க எழுத்தாளரான காப்ரியல் கார்சியா மார்க்வெஸ், 1982-ஆம் ஆண்டு நோபல் பரிசுக்கான விருதைப் பெறும்போது நிகழ்த்திய உரையிலிருந்து...*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கு மிதிவெடிகளின் அபாயமும் இருக்கின்றது. மிதி வெடிகள் மட்டுமல்ல. இன்னும் எத்தனையோ விதமான வெடிபொருட்கள் இப்பகுதியில் கண்டுபிடிக்கப்படுகின்றது. வெடிக்காத நிலையில் பெரும் எண்ணிக்கையில் இருக்கும் வெடிகுண்டுகளை இராணுவத்தினர் செயலிழக்கச் செய்கின்றனர். அவ்வாறு கண்டு பிடிக்காது இன்னும் எத்தனையோ வெடி பொருட்கள் இருக்கலாம் என்ற பீதியே இப்பகுதி மக்களுக்கு இருக்கின்றது.



*மட்டுவில் மகாவித்தியாலயம்*

அண்மையில் இப்பகுதிகளுக்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அவர்கள் சென்று அழிவுகள், சேதங்கள் எல்லாவற்றையும் பார்வையிட்டார். பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆறுதல் கூறி உடனடியாக இப்பகுதிகளை புனரமைக்குமாறும் உத்தரவிட்டார். ஆனாலும் புனர்நிர்மாணங்கள் மந்தகதியிலேயே காணப்படுவதாக மக்கள் குறைகூறுகின்றனர்.

எந்த தொழிலும் செய்ய முடியாது வருமானம் எதுவும்இல்லாது கஷ்டப்படும் எங்களுக்கு அரசு தான் உதவிகள் வழங்க வேண்டும் என்று மக்கள் மிகுந்த ஆவலுடன் இருக்கின்றனர்.



*ஷெல் வீச்சில் சேதமடைந்துள்ள வீடு*

அண்மையில் இப்பகுதிகளுக்கு பல அமைச்சர்களும் சென்று புனர்நிர்மாணம் செய்வது பற்றித் திட்டங்கள் பல தீட்டி செயல்படுத்தவும் நடவடிக்கைகள் எடுத்துள்ளனர்.

எனவே வருங்காலத்தில் இப்பகுதிகள் புத்துயிர்பெற்று மீண்டும் அன்றாட வாழ்வு வளம்பெற வேண்டும் என்பதே எல்லோருடைய பிரார்த்தனையும் ஆகும். •

## மார்க்சியம் என்பது பாராயண நூல் அல்ல!

முற்போக்கு இலக்கிய இயக்கத்தின் முக்கிய பங்கினை வகிக்க ஒரு பெருவாய்ப்பு கிட்டியது. அந்தப் பணியை எந்தளவிற்கு செய்திருக்கிறேன் என்பது பற்றி எனக்குத் தெரியாது. ஆனால் எனது மனதார அதனைச் செய்தேன். முற்போக்கு வாதம் என்பது ஒரு முடிவல்ல. அது மார்க்சிய சிந்தனையின் ஒரு கட்டம். நான் முற்போக்கு இலக்கியத்திலிருந்து மார்க்சியத்தினால் கவரப்பட்டவன்.

1959 தொடக்கம் ஏறத்தாழ 1970 வரையில் இலங்கையின் இன ஒற்றுமைக்கும் ஐக்கியத்திற்கும் என இருந்த அரசியல் சூழல் 70களின் பின்னர் இல்லை. இந்த மாற்றத்தை மார்க்சிய கட்சியின் மாற்றத்திலிருந்து கண்டு கொண்டோம். 83இலிருந்து இனத்துவ அடிப்படையில் போர் நடைபெற்றுக் கொண்டிருந்தது. முற்போக்கு இலக்கியத்தின் கண்ணோட்ட முறைமை என்ன? அதை எப்படிப் பார்க்க வேண்டும்? அதனை தீர்ப்பதற்கு என்ன வழிவகைகளைக் கையாள வேண்டும்? துரதிர்ஷ்டவசமாக இந்த மார்க்சிய கட்சிகளின் வழிகாட்டல் அதில் போதுமானதாக இருக்கவில்லை.

என்னைப் பொறுத்தவரையில் மார்க்சியத்தினது தர்க்கம் தான் என்னை இன்று இந்த நிலைக்கு கொண்டு வந்திருக்கின்றது. என்னைக் கேட்டால் இன்று இந்நாட்டில் ஒழுங்கமைப்பு, எவ்வாறு அதிகாரம் பகிரப்பட வேண்டும் என்ற விடயம் பற்றி சரியாக ஆராயப்பட வேண்டும் என்று கருதுகிறேன். இப்படி கேட்பது முற்போக்கு இயக்கத்தினுடைய அடிப்படைகளுக்கு எந்த விதத்திலும் எதிரானதாக இருக்கும் என்று நான் கருதவில்லை.

இலக்கிய இயக்கம் இந்நாட்டின் ஓர் உண்மையான தேசிய இலக்கியத்தைக் கட்டியெழுப்பிற்று. யாழ்ப்பாணத்துக்கு அல்லது மட்டக்களப்போடு இருந்த தமிழ் இலக்கியத்தை முற்போக்கான ஈழத்து இலக்கியமாயிற்று. மலையக மக்கள், முஸ்லிம்கள், திருகோணமலை எல்லாப் பிரதேசங்களையும் ஒன்றிணைத்து 50களின் இறுதியில் 60களின் தொடக்கத்தில் ஒரு உண்மையான முற்றுமுழுதான ஈழத்து இலக்கியம் தோன்றியது. ஈழத்தில் தமிழ் பேசும் மக்களை இலக்கிய ரீதியாக சிந்தனை ரீதியாக ஒன்றுபடுத்திய காரணிகளில் முற்போக்கு இலக்கியத்திற்கும் ஓர் இடம் உண்டு. கேள்வி என்னவென்றால் அதைச் செய்த முற்போக்கு இயக்கம், இவர்களுடைய அரசியல் நிலைப்பாடு, அரசியல் இருப்பு பற்றி இவர்களுக்கு காட்டுகிற வழி என்ன? ஒற்றுமைகள் தொடர்ந்து இருக்க வேண்டுமானால் எப்படி இருக்க வேண்டும்? இதைப்பற்றிச் சொல்ல வேண்டும்.

மார்க்சியம் என்பது பாராயண நூல் அல்ல! திரும்பத் திரும்ப விளங்காமல் படிப்பதற்கான நூல் அல்ல. வரலாற்றைப் புரிந்து கொள்வதற்கான வரலாற்றின் போக்கைப் பரிந்துகொள்வதற்கான ஓர் ஆயுதம் மார்க்சியம். இந்தப் பிரச்சினை இங்கு மாத்திரமல்ல மத்திய கிழக்கிலும், சோவியத்யூனியனிலும், சீனா போன்ற நாடுகளிலும் வந்திருக்கின்றன. இந்தப் புரட்சி சோவியத் யூனியனில் நிரந்தரமானதாக இருக்கும் என்று நினைத்தோமோ அங்கும் எதிர்பாராத மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன.

மார்க்சியத்தின் தர்க்கம் அதனைப் புரிந்து கொள்ள வேண்டுவது பற்றி மிக ஆழமாகச் சிந்திப்பது அவசியம். இதனால்தான் மார்க்சியத்தை மீள் கண்டுபிடிப்புச் செய்தல் என்று சொல்கிறார்கள். அந்த ஒருமுயற்சி என் நிலையில் மிக மிக ஒரு சிறியது. அதாவது இன்றும் நான் அந்த மார்க்சிய கண்ணோட்டத்திலிருந்து விலகவில்லை. அதனை விட்டு வேறுமாதிரி சிந்திக்கவுமில்லை. மார்க்சியத்தை ஒரு பாராயண நூலாக சில மாறாத விதிகளின் தொகுப்பாக நான் பார்க்க விரும்பவில்லை. மார்க்சியம் அப்படி பார்க்கப்படவும் கூடாது. மாறுகிற தேவைகளுக்கேற்ப மாற்றங்களுக்கு முகம் கொடுப்பதும் அவற்றுக்கு மேலே செல்லவும் மார்க்சியம் சிறந்த வழி.

எனவேதான் என்னுடைய குரல் முற்போக்கு இயக்கத்தினுடைய அடுத்த கட்ட நடவடிக்கைகள் எவ்வாறு இருக்க வேண்டும் என்பது பற்றிய சிந்தனையை கிளப்புவனவே அன்றி பழையனவற்றை மீளப் பாடுவது இல்லை. பழைய பாடல் ஒரு தத்துவமான பாடல். அதற்காக ஏ.ஆர். ரகுமான் இல்லாமல் போகக்கூடாது. என்னைப் பொறுத்தவரையில் எப்படிப் பார்க்கிறேன் என்றால் ஏ.ஆர். ரகுமான் தியாகராஜபாகவதர் பரம்பரையினுடைய புது வருகை. மாற்றங்கள் காரணமாக தோன்றிய ஒரு புது தேவை. அதுபோன்று மார்க்சியத்தை சரியாக புரிந்துகொள்ள வேண்டும். வரலாறு மாறிவிட்டது வரலாற்றுத் தேவைகளை உணர்ந்து கொள்ள வேண்டும்.

***- பேராசிரியர் கா. சிவத்தம்பி அவர்களின் பேட்டியிலிருந்து...***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# காஷ்மீர்

## என்னதான் பிரச்சினை?

12ம் நூற்றாண்டில் இருந்து நன்கு அறியப்பட்டது காஷ்மீர். 19ம் நூற்றாண்டின் மத்தியில் மன்னராட்சி ஆங்கிலேயர்களால் நிறுவப்பட்டது. டோக்ரா வம்சம் 1947வரை ஆண்டது. கடைசி மன்னரான ஹரிசிங் இந்தியாவுடன் காஷ்மீரை இணைத்தார்.

**மக்கள் தொகை 70 லட்சம். (2000ஆம் ஆண்டு மதிப்பீடு)**

வரலாற்றில் எத்தனை மாறுதல்கள் ஏற்பட்டாலும் தாங்கள் காஷ்மீரிகள் என்கிற அடையாளத்தைக் காஷ்மீர் மக்கள் இழக்க விரும்புவதில்லை என்கிறார் ஒரு ஆங்கில வரலாற்றாசிரியர்.

1948ல் காஷ்மீர் இஸ்லாமியர் பாகிஸ்தானுடன் இணையவோ அல்லது தனி நாடாகவோ மாற விரும்பியபோது இந்து பண்டிட்கள் இந்தியாவுடன் இணைய விரும்பினர். இந்திய அரசியல் நிர்ணய சட்டசபை உறுப்பினராக இருந்த ஷேக் அப்துல்லா இந்தியாவுடன் இணைவதையே விரும்பினார். காஷ்மீர் மன்னரும் ஒப்புக்கொள்ளவே டெல்லியில் ஒப்பந்தம் கையெழுத்தானது. பின்னர் பிரித்தானிய நாடாளுமன்ற ஒப்புதலும் பெறப்பட்டது. ஆனால் காஷ்மீரைத் தன்னுடன் இணைக்க விரும்பிய பாகிஸ்தான், 1969, 71, 99 ஆகிய ஆண்டுகளில் நேரிடையாகப் போரில் குதித்தது. மூன்றிலும் தோல்விடைந்தது.


ஜவஹர்லால் நேரு


ஹரிசிங்

**பொதுக் கருத்துக் கணிப்பு**

இந்தியப் பிரதமர் நேரு காஷ்மீர் மக்களுக்கும் ஐ.நா.வுக்கும் பொதுக் கருத்துக் கணிப்பு நடத்துவதாக வாக்குறுதியளித்தார். இந்தியாவுடன் காஷ்மீரை இணைத்தது சரியா? தவறா? என்பதுதான் அதன் சாராம்சம். இதை ஐ.நா.சபையில் தீர்மானமாகவும் கொண்டு வந்தனர். அதன்படி கருத்துக் கணிப்பு நடத்தப்பட வேண்டும். ஆனால் இதுவரை கருத்துக் கணிப்பு பல்வேறு காரணங்களால் நடத்தப்படவேயில்லை.


ஷேக் அப்துல்லா

ஆனால் பலமுறை தேர்தல்கள் நடைபெற்றுள்ளன. அவற்றிலெல்லாம் 50% மக்களுக்கு மேல் வாக்களித்துள்ளனர். இதையே இந்தியா காரணங்காட்டி இந்தியாவுடனான காஷ்மீரின் இணைப்பு இறுதியானது என்கிறது. இருப்பினும் சில வருடங்களுக்கு முன்பு 'அவுட்லுக்' பத்திரிகையின் கருத்துக்கணிப்பு வேறு கதையைக் கூறுகிறது. பெரும்பாலான மக்கள் தனிநாடு கோரிக்கையை ஆதரிக்கிறார்கள் என்கிறது.

அரசியல் பிரிவு 370, தனி அந்தஸ்து மூலம் காஷ்மீர் மக்கள் தங்களை தாங்களே ஆள உரிமையளிக்கிறது. இராணுவம், நிதி, தொலைத்தொடர்பு, அயல்நாட்டு கொள்கை போன்றவை தவிர மற்றவை காஷ்மீர் அரசே வைத்துக்கொள்ளும். இதையே 'மாநில சுயாட்சி' 'முழுமையான கூட்டாட்சி' முறை என்ற பெயர்களில் இந்தியாவின் தமிழ்நாடு, பஞ்சாப் மாநிலங்களும் கேட்கின்றன.

**எல்லைக் கட்டுப்பாட்டுக் கோடு**

இந்தியாவும், பாகிஸ்தானும் பிரிக்கப்பட்டபோது இந்தியாவின் மேற்குப்புற மாநிலங்களான குஜராத், ராஜஸ்தான், பஞ்சாப், காஷ்மீரின் ஒரு பகுதி போன்றவை சர்வதேச எல்லைப் பகுதியை கொண்டவைகளாக விளங்கின. இந்தியாவுடன் காஷ்மீர் இணைக்கப்பட்டபோது வடமேற்கு காஷ்மீரின் ஒரு பகுதி பாகிஸ்தான் வசம் போனது. இதுவும் இந்தியாவின்பகுதியே என்றது இந்தியா. எனவே, இப்பகுதியில் எது எல்லைக்கோடு என்பதில் சிக்கல் எழுந்தது.

1949 கராச்சியில் ஐ.நா. உதவியுடன் பிரிக்கப்பட்ட எல்லைப் பகுதிகளை எல்லைக் கட்டுப்பாடு கோடு என்றழைத்தனர்.

**பாகிஸ்தான் அரசியல்**



1947ம் ஆண்டு ஆகஸ்ட் 14ம் திகதி பாகிஸ்தான் ஒரு புது நாடாக தோன்றியது. இக்குழந்தைக்கு பிறப்பிலிருந்தே பிரச்சினை. 1947ல் இருந்து 1958வரை அரசியல்நிர்ணய சட்டம் வரைவதில் ஏகப்பட்ட குழப்பங்கள், சிக்கல்கள். முதலில் ஒரு அரசியல் நிர்ணய சபை நாட்டைஆண்டது. அதற்கு இரண்டு பணிகள், அரசியல் நிர்ணய சட்டத்தை வரைவது, அது அமுல்படுத்தப்படும் வரை சட்டங்களை இயற்றுவது. அது தவிர மாகாணங்களுக்கு அதிகாரப் பகிர்வு குறித்தும், எது இஸ்லாமிய நாடாக பாகிஸ்தானை காட்டும் என்பதிலும் சர்ச்சை.

1954ல் அப்போதைய கவர்னர் ஜெனரல் அரசியல்நிர்ணய சபையைக் கலைத்துவிட்டு 1956ல் மாற்றப்பட்ட அரசியல் நிர்ணய சபையையே தேசிய சட்ட சபையாக மாற்றினார். பாகிஸ்தான் இஸ்லாமிய குடியரசாக அறிவிக்கப்பட்டது. எனினும், பிரதேச வேறுபாடுகள் (மேற்கு மற்றும் கிழக்கு பாகிஸ்தான் இடையே) இனப்பிரச்சினைகள் மதச் சண்டைகள் (ஷியா-சுன்னி) சிக்கல்களைத் தீர்க்க முடியவில்லை. எனவே, குடியரசு தலைவர் இஸ்கந்தர் மிர்சா 1958ல் சட்டசபையை கலைத்து விட்டு இராணுவ ஆட்சியை கொண்டு வந்தார்.


அயூப்கான்

அதே மாதத்தில் இராணுவ தலைவர் அயூப்கான் குடியரசுத் தலைவரை ஓரங்கட்டி விட்டு தானே குடியரசு தலைவரானார். அயூப்கான் புதிய ஜனநாயக அமைப்பைக் கொண்டு வந்தார். அதற்கு 'அடிப்படை ஜனநாயகம்' என்று பெயர். 1962ல் அயூப்கான் குடியரசு தலைவர் ஆட்சி முறையைக் கொண்டு வந்தார். பலமில்லாத தேசிய சட்டசபையும் இருந்தது. 1969 ஆண்டு இதுவும் காலாவதியானது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அயூப்கான் பதவி விலகி யாகியா கானிடம் ஆட்சியை ஒப்படைத்தார்.

யாகியா கான் நாட்டை ஜனநாயகப் பாதையில் அழைத்துச் செல்ல 1970ல் தேர்தலை நடத்தினார். கிழக்குப் பாகிஸ்தானில் வெற்றி பெற்ற முஜிபூர் ரஹ்மானும், மேற்கில் பூட்டோவும் பதவிக்கு போட்டியிட்டனர். முஜிபூரை பாகிஸ்தான் பிரதமராக்க யாரும் ஒப்புக்கொள்ளவில்லை. புதிய அரசியல் சட்டம் செயல்பட பூட்டோவும் ஒப்புக்கொள்ளவில்லை.


யாகியாகான்

போர் வெடித்தது.

இந்திய தலையீட்டால் வங்காள தேசம் உருவாக, யாகியாகான் பதவி விலகி பூட்டோவிடம் பதவியை ஒப்படைத்தார். பூட்டோ குடியரசுத் தலைவர் மற்றும் இராணுவ தலைமை நிர்வாகியானார். சில மாதங்களில் இராணுவ ஆட்சியை நீக்கி புதிய இடைக்கால அரசியல் நிர்ணய சட்டத்தை உருவாக்கினார். இது இந்திய அரசியல்நிர்ணய சட்டத்தில் உள்ளது போல் குடியரசுத் தலைவர், பிரதமர், சம உரிமையுள்ள மாநிலங்கள் மற்றும் சமமான மத உரிமைகள் (இஸ்லாம்) ஆகியவற்றைக் கொண்டது. பிரதமருக்கு செயல் அதிகாரங்கள் அதிகம் என்பதால் பூட்டோ பின்னர் பிரதமர் பதவியை ஏற்றுக்கொண்டார்.


பூட்டோ

எதிர்க்கட்சிகளை அடக்கி ஒற்றை கட்சி ஆட்சி முறையை கொண்டுவர விரும்பியதில் தடுமாறிய பூட்டோ 1977ல் தேர்தல் நடத்தினார். தேர்தல்களில் முறைகேடுகள் நடந்ததாக கூறி எதிர்க்கட்சிகள் கலவரத்தில் ஈடுபட்டன. பூட்டோவின் மகத்தான வெற்றி கேள்விக்குறியானது. உள்நாட்டுக் குழப்பத்தைப் பயன்படுத்தி மீண்டும் இராணுவம் ஆட்சியைப் பிடித்தது. ராணவத் தளபதி ஷியா உல் ஹக் நாட்டை ஆளத் தொடங்கினார்.


ஸியா-வுல்-ஹக்

ஜெனரல் ஸியா-வுல்-ஹக் அடுத்த 11ஆண்டுகளுக்கு அசைக்க முடியாத நபராக விளங்கினார். பழைய அடிப்படை ஜனநாயக அமைப்பை மீண்டும் வேறுவடிவத்தில் செயல்படுத்தினார்.

1985ல் அரசியல் நிர்ணய சட்டம் மீண்டும் மாற்றப்பட்டது. 1985ல் கட்சி சார்பற்ற தேர்தலை நடத்தி மாகாண, மத்திய சட்டசபைகள் அமைத்த பிறகு தனது பழைய சகாவான முகம்மது கான் ஜுனோஜோவை பிரதமராக்கினார். இருவருக்கும் ஒத்துவரவில்லை. மீண்டும் 1988ல் எல்லாவற்றையும் கலைத்தார் ஷியா.

திடீரென்று விமான விபத்தில் ஷியா இறக்க, குலாம் இஷாக் கான் இடைக்கால குடியரசு தலைவரானார். இவர் முறைப்படி தேர்தலை நடத்தி பெனாசீர் பூட்டோவை பிரதமராக்கினார். பின்னர் இஷாக்கான் குடியரசு தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார்.


ஸியா-வுல்-ஹக்

நவீன இஸ்லாமிய உலகின் முதல் பெண் பிரதமர் பெனாசீர். சிறப்பாகவே ஆட்சி செய்ய ஆரம்பித்தாலும் முழுமையான பெரும்பான்மை இல்லாததால் கூட்டணி கட்சிகளை நம்பிப் பிழைக்க வேண்டியிருந்தது. உள்நாட்டு பிரச்சினைகள், ஆப்கான் போர், இந்தியாவுடன் சச்சரவு, ஊழல் குற்றச்சாட்டுகளால் தனது ஆட்சியை தானே கெடுத்துக் கொண்டார் பெனாசீர்.

1990ல் மீண்டும் தேர்தல். இம்முறை நவாஸ்ஷெரீப் ஆட்சியைப் பிடித்தார்.

நவாஸ் ஷெரீப், ராஜீவ் காந்தியைப் போல பொருளாதார சீர்திருத்தங்கள் செய்தார். எனினும் குடியரசு தலைவருடன் மோதல் போக்கை மேற்கொண்டதால் 1993ல் இவர் ஆட்சி கலைக்கப்பட்டது.

## 1948 - 2001

### 1948

காஷ்மீர் இந்தியாவுடன் இணைந்தது. இந்தியா,பாகிஸ்தான் என பிரிந்த இரு நாடுகளில் எதனுடன் சேர்வது என சிந்தித்து வந்த வேளையில் பாகிஸ்தான் ஆதரவில் பதான்கள் எனும் மலையின மக்கள் ஸ்ரீநகருக்கு படையெடுத்தனர். படையெடுத்து கணிசமான பகுதியையும் பிடித்துக் கொண்டனர். காஷ்மீர் மகாராஜா ஹரிசிங் இந்தியாவுக்கு ஆதரவு கேட்டு கடிதம் எழுதினார். இந்தியா படைகளை அனுப்பியது. காஷ்மீரை இந்தியாவுடன் சேர்க்க அரசர் முடிவெடுக்க, அதனை ஆதரித்தார் செல்வாக்கு மிகுந்த இஸ்லாமிய தலைவர் ஷேக் அப்துல்லா. டெல்லியில் இணைப்பு ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது. மகாராஜா சார்பாக அப்போதைய காஷ்மீர் பிரதமர் மெஹர்சந்த் மகாஹன் கையெழுத்திட்டார். இந்திய அரசின் சார்பாக கவர்னர் ஜெனரல் மவுண்ட் பேட்டன் கையெழுத்திட்டார்.

### 1953

இந்திய அரசியல் நிர்ணய சட்டம் காஷ்மீருக்கு சிறப்பு அந்தஸ்து வழங்கியது. அதன்படி பாதுகாப்பு, நிதி, தொலைதொடர்பு, அயல்நாட்டு விவகாரம் போன்றவை மத்திய அரசிடம் இருக்கும். மீதமெல்லாம் காஷ்மீரிடம். அதற்கென தனி அரசியல் நிர்ணய சட்டம், கவர்னரை தாங்களே தேர்ந்தெடுத்துக் கொள்வது, இந்திய உச்ச நீதிமன்றம் மட்டுமே உயர்ந்த சட்ட அமைப்பாக இருத்தல் போன்றவை. இவையெல்லாம் 1950ம் வருடம் வரை பேசி முடிக்கப்பட்டன.

ஆனாலும் அடிப்படை உரிமைகள் எந்தளவிற்கு அனுமதிக்கப்படவேண்டும், அது மாநில அரசியல் நிர்ணய சட்டத்தில் இருக்குமா? இந்திய அரசியல் நிர்ணய சட்டப்படி இருக்குமா? நிலச்சீர்திருத்தங்கள், சமூக சீர்திருத்தம் போன்ற அம்சங்களில் சிக்கல்கள் ஏற்பட்டதால் அவை தடைபட்டன. நேருவும், ஷேக் அப்துல்லாவும் பேசி 1953ல் ஓர் ஒப்பந்தம் செய்துகொண்டனர். எனினும், 1954ல் ஷேக் அப்துல்லா இந்திய எதிர்ப்பு போக்கில் செல்வதாக கருதி அவரை கைது செய்ய உத்தரவிட்டார் நேரு.

### 1954 - 1964

தேசிய மாநாட்டு கட்சியில் மற்றொரு தலைவரான பக்ஷி குலாம் முகம்மது பிரதமரானார். இவர் ஆட்சியை மக்களும், பிற அரசியல் கட்சிகளும் ஏற்றுக்கொள்ளவில்லை. உள்ளூரில் அரசியற் குழப்பம் இருந்தது. இவர் மற்றும் இவரது குடும்பத்தினர் மீது ஊழல் புகார் தொடுக்கப்பட்டது. நிலைமை மோசமாகவே இவரது ஆட்சி கலைக்கப்பட்டது.

### 1964

முற்போக்கு சிந்தனை கொண்ட குலாம் முகம்மது சாதிக் பிரதமரானார். திறமையாக, நல்லாட்சியை தந்தவர் என பெயர் பெற்றார். 1964ல் பிரதமர் நேரு ஷேக் அப்துல்லாவை அழைத்து காஷ்மீர் பிரச்சினைக்குத் தீர்வு காண பாகிஸ்தானுக்கு அனுப்பி வைத்தார். திடீரென்று நேரு மறைந்ததால் பாதியிலேயே அம்முயற்சி கைவிடப்பட்டது. 1967ல் ஏற்பட்ட மதக் கலவரங்களால் அவர் ஆட்சி கலைக்கப்பட்டது.

### 1972 - 1983

1972ல் தேர்தல் நடத்தப்பட்டது. ஷேக் அப்துல்லா முதல்வரானார். 1975ல் மீண்டும் இந்திரா காந்தியுடன் ஓர் அதிகாரபகிர்வு ஒப்பந்தம் செய்துகொண்டார் ஷேக் அப்துல்லா.

### 1983

ஷேக் அப்துல்லாவின் மறைவிற்குப் பிறகு அவர் மகன் ஃபரூக் அப்துல்லா முதலமைச்சர் ஆனார். காங்கிரஸ்கட்சி அவர் கட்சியை உடைத்து குலாம் முகம்மது ஷா என்பவரின் கீழ் புதிய ஆட்சியை அமைக்க உதவியது.

### 1987


காங்கிரஸுடன் ஏற்பட்ட மோதல்களை அடுத்து ஷா ஆட்சி கவிழ்கிறது. காங்கிரஸ் ஃபரூக்குடன் இணைந்து செயல்படுகிறது. ஃபரூக் தேர்தலில் வெற்றி பெற்று மீண்டும் முதல்வராகிறார். பாகிஸ்தான் ஆதரவுடன் தீவிர வாதம் தலைதூக்குகிறது. மக்களின் விருப்பங்கள் முழுமையாக நிறைவேற்றப்படாததால் தீவிரவாதிகள் செல்வாக்கு ஓங்குகிறது. மத்திய அரசு ஜக்மோகனை ஆளுநராக நியமிக்கிறது. மாநிலஅரசு இதை ஏற்க மறுத்து விலகியது. மீண்டும் குடியரசுத் தலைவர் ஆட்சி 1996 வரை நீடிக்கிறது.

### 1996 - 2001

96ல் நடைபெற்ற தேர்தலில் வெற்றிபெற்று ஃபரூக் மீண்டும் ஆட்சியமைக்கிறார். ஆட்சிக்காலம் முடிவடையும் சமயத்தில் மீண்டும் மாநில சுயாட்சி தீர்மானத்தை காஷ்மீர் சட்டசபையில் நிறைவேற்றுகிறார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசு கலைக்கப்பட்டது சரியல்ல என்று உச்ச நீதிமன்றம் கூறியதால் மீண்டும் ஷெரீப் பதவியேற்க வாய்ப்பு வந்தது. எனினும், இராணுவம் தலையிட்டு குடியரசு தலைவர், ஷெரீப் இருவரையும் பதவி விலக வைத்தது. ஒரு காபந்து அரசு அமைக்கப்பட்டது. தேர்தல் நடத்தப்பட்டது. பெனாசீர் இரண்டாவது முறையாக ஆட்சியை கைப்பற்றினார்.


*நவாஸ் ஷெரீப்*

புதிய குடியரசு தலைவராக ஃபாரூக் லெகாரி தேர்ந்தெடுக்கப்பட்டார். பெனாசீர், லெகாரியிடம் குடியரசு தலைவருக்கான சிறப்பு அதிகாரங்களை விட்டுக் கொடுக்க நாசூக்காக தூண்டினார். இதற்கிடையே அவருடைய குடும்பத்திலேயே எதிர்ப்பு உருவானது. தாயாரும் சகோதரரும் பெனாசீருடன் மோதலில் இறங்கினார்கள்.

மீண்டும் அரசியல் சிக்கலில் ஆழ்ந்தது தேசம். அடுத்து ஒரு தேர்தல். 1996ல் நவாஸ்ஷெரீப் ஆட்சிக்கு வந்தார். லெகாரியுடனும், தலைமை நீதிபதியுடனும் மோதல். இருவரையுமே பதவியை விட்டுத் துரத்தி சாதனை படைத்தார். எனினும் 1999ல் கார்கில் போர் தோல்வி எதிரொலியில் ராணுவ தலைவர் முஷாரப்பை அதிரடியாக மாற்ற நினைக்க, முஷாரப் அவரை 'புரட்சி' கரமாக பதவியை விட்டு விரட்டினார்.

முஷாரப் பழைய அடிப்படை ஜனநாயக அமைப்பு பக்கமே போக விரும்புவார் போல் தெரிகிறது. தேர்தலில் போட்டியிட அரசியல்வாதிகளே இல்லை என்கிற நிலையில் உள்ளது பாகிஸ்தான். எனினும் ஜனநாயக ஆட்சியை அமுல்படுத்துவேன் என்று கூறிவருகிறார் முஷாரப். அக்டோபர் 2002ல் பொதுத் தேர்தல்களை நடத்துவதாக உறுதி கூறியிருக்கிறார் முஷாரப். அமெரிக்கா மற்றும் கொமன் வெல்த் நாடுகளின் வற்புறுத்தலும், உள்ளூர் பொருளாதார பிரச்சினைகளை தீர்க்க சர்வ தேச அமைப்புகளின் நிதியுதவி அவசியம் என்பதும் இதன் பின்னணியில் உள்ளவை. கால்பந்து விளையாட்டில் உதைபடும் பந்துபோல பாகிஸ்தானில் ஜனநாயகம் உதைபடுவதாக ஒரு மூத்த இந்திய பத்திரிகையாளர் ஒருமுறை எழுதினார். அது உண்மைதான் என்றே தெரிகிறது.


*பேர்வஸ் முஷாரவ்*

## தீவிரவாத இயக்கங்கள்

ஏராளமான தீவிரவாத இயக்கங்கள் செயல்பட்டு வந்தாலும், ஒருசிலதான் பலம் பொருந்தியவை. செயல்பட்டு வருபவை.

**ஹிஸ்புல் முஜர்ஹிதீன்:**



ஜம்மு காஷ்மீர் ஜமாத்-இ-இஸ்லாமியின் தீவிரவாத பிரிவு - பாகிஸ்தான் ஆதரவு அமைப்பு. சையத் சலாஹுத்தீன் இதன் தலைவர். 1989ல் இருந்து செயல்படுகிறது. பாக். ஆக்கிரமிப்பிலுள்ள காஷ்மீரத்திலிருந்து தேவையான உதவிகள் கிடைக்கின்றன. ஆசாத் காஷ்மீர், பள்ளத்தாக்கு, ஆப்கான், அரேபியா ஆகிய பகுதியிலிருப்பவர்களை கொண்டது இந்தத் தீவிரவாத இயக்கம். சென்ற வருடம் போர் நிறுத்தம் அறிவித்து பின்னர் 'வாபஸ்' பெற்றுக்கொண்டது.

**தே ஹ்ரிக்-இ-ஜிகாத்:**

பேராசிரியர் அப்துல் கனி பட் கட்சியான முஸ்லிம் கொன்பரன்ஸ்ஸின் தீவிரவாத பிரிவாக அறியப்பட்டுள்ளது. 1997ல் துவங்கப்பட்டது. கார்கில் போரின்போது விறுவிறுப்பாக செயல்பட்ட அமைப்பு, தனி காஷ்மீர் பெற்று பின்னர் பாகிஸ்தானுடன் இணைய விருப்பம். காஷ்மீர், ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான் ஆகிய இடங்களிலிருந்து ஆட்கள் நிரம்பியுள்ளனர்.

**அல் பாதார் முஜாஹிதீன்:**

ஆப்கான் போரில் பங்கேற்ற அமைப்பு. ஹர்கத்துல் அன்சார் என்ற பெயரில் இயங்கி வந்தது. 5 சுற்றுலாப் பயணிகள் கடத்தப்பட்ட சம்பவத்திற்கு பிறகு அமெரிக்கா இதன் மீது தடைவிதித்தது. பிறகு, தற்போதைய பெயரில் இயங்கி வருகிறது. ஒசாமாவை ஒழிக்க அமெரிக்காவின் ஏவுகணை தாக்குதலில் இதன் ஏராளமான உறுப்பினர்கள் மாண்டனர். இதன் தலைவர் மௌலானா மசூத் ஆசாரை விடுவிக்கவே, இந்திய விமானம் கடத்தப்பட்டது என்பார்கள். இன்றும் சுறுசுறுப்பாக இயங்கி வருகிறது. நிறைய பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் நாட்டவர் நிரம்பியுள்ளனர்.

**ஜெய்ஷ்-இ-முகம்மது:**

விமான கடத்தலின்போது விடுவிக்கப்பட்ட மசூத் அசார் பாகிஸ்தான் சென்ற பிறகு துவங்கிய அமைப்பு இது. வேகமாக வளர்ந்து வரும் அமைப்பு. மற்றொரு அமைப்பான ஹர்ஹதுல் முஜாஹிதீனிலிருந்து நிறைய பேர் இதற்கு கட்சி மாறுகிறார்கள். ஆனாலும் இதன் காஷ்மீர் செயல்பாடுகள் வளரவில்லை.

**லஷ்கர்-இ-தொய்பா:**

ஒரு இலட்சம் வேரை புனிதப் போருக்கு தயார்படுத்தியுள்ளதாக கூறிக்கொள்ளும் இவ்வமைப்பு முதன் முறையாக தற்கொலைப்படையையும் நிறுவியுள்ளது. சமீபத்தில் டில்லி செங்கோட்டையில் தாக்குதல் நடத்தியதும் இவ்வமைப்புதான். இந்தியாவை அழிக்க உறுதிபூண்டுள்ளதாக கூறுகிறார்கள்.

**ஜமாய்த்-அல்-முஜாஹிதீன்:**

சமீபத்திய இந்திய-பாக். பேச்சுவார்த்தைகளை எதிர்க்கும் இவ்வமைப்பு 1990லிருந்து செயல்படுகிறது. வன்முறை (போர்) மூலமே காஷ்மீரை அடையமுடியும் என்கிறது.

## இந்தியத் தலைவர்கள்

**ஜவகர்லால் நேரு:**



1947ம் ஆண்டு ஆகஸ்ட் 14-15 நள்ளிரவிலிருந்து ஜூன் 3, 1964ல் மறையும் வரை சுமார் 16 ஆண்டுகள் இந்திய பிரதமர். பாக். ஆக்கிரமிப்பு காஷ்மீர், பொது கருத்துக் கணிப்பு, காஷ்மீர் இந்தியாவுடன் இணைப்பு ஆகியவற்றில் உறுதியான நிலைப்பாடுகள வைத்திருந்தார். 1958ல் காஷ்மீர் இணைப்பு இறுதியானது என்று உறுதிபட அறிவித்தார். இவருக்கு அடுத்து பதவிக்கு வந்த பலரது கொள்கை இவரது கருத்துக்களை ஒட்டியே இருந்தது.

**லால்பகதூர் சாஸ்திரி:**



நேருவின் மறைவுக்குப் பிறகு இந்தியப் பிரதமராக பதவியேற்றவர். யதார்த்தவாதி. கொள்கை தடைகள் பற்றி அலட்டிக் கொள்ளாதவர். இந்தியப் பொருளாதாரத்தில் முதுகெலும்பாக இருக்கும் விவசாயத்தை வளர்க்கவே இவர் விரும்பினார். காஷ்மீருக்காக போரையும் பேச்சுவார்த்தையையும் ஒருசேர முதன்முறையாக நடத்தியவர்.

**இந்திராகாந்தி:**



லால்பகதூர் சாஸ்திரியின் திடீர் மரணத்தை அடுத்து நேருவின் மகளான இந்திரா பிரதமரானார். போர் என்றாலும் தயார், பேச்சுவார்த்தை என்றாலும் தயார் என்ற நிலையை மேற்கொண்டார். சிம்லா பேச்சுவார்த்தைக்குப் பிறகு உள்ளூர்ப் பிரச்சினைகளில் கவனம் செலுத்தியதால் காஷ்மீர் விஷயத்தில் பாகிஸ்தான் நீக்குப் போக்கை கடைப்பிடிப்பதை இவரால் கண்டிக்க முடியவில்லை.

இவர் 71ம் ஆண்டு போரில் தீவிரம் காட்டியபோது 'துர்கா தேவி' போன்று தோற்றம் அளிப்பதாக இன்றைய பிரதமர் வாஜ்பாய் அப்போது நாடாளுமன்றத்திலேயே வர்ணித்தார். மீண்டும் 1980 முதல் 1984 வரை பிரதமராக இருந்தபோது பாகிஸ்தானில் ஸியா ஆட்சி நடைபெற்று வந்தது. ஜியா பிடிவாதக்காரராக இருந்ததால் பேசமுடியாத சங்கடங்கள் இவருக்கு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மொரார்ஜி தேசாய்:**

ஸியாவுடன் காஷ்மீர் பற்றி பேசினார். எனினும் ஜனதா அரசு கவிழ்ந்ததால் பேச்சு பாதியில் நின்றது. மொரார்ஜி தன்னை அமெரிக்க சார்புடையவராக காட்டிக் கொண்டதால் ஸியாவுடன் (இவரும் அமெரிக்க ஆதரவாளர்) பேசி ஓர் உடன்பாடு காண்பது எளிதானது என்று அப்போது கருதப்பட்டது. பின்னாளில் ஸியா இவருக்கு பாகிஸ்தானின் மிக உயர்ந்த விருதான நிஷான்-எ-பாகிஸ்தானை வழங்கி கௌரவித்தார்.

**ஷேக் அப்துல்லா:**



1930களுக்குப் பிறகு காஷ்மீர் அரசியலில் தீவிரமாக ஈடுபட ஆரம்பித்தார். ஷேக் அப்துல்லா. தேசிய மாநாடு என்கிற கட்சியின் தலைவராகவும் விளங்கி வந்தார். இந்திய அரசியல் நிர்ணய சட்டத்தை வகுக்க அமைக்கப்பட்ட அரசியல் நிர்ணய சபையில் உறுப்பினராக ஆக்கப்பட்டார் ஷேக் அப்துல்லா. காஷ்மீர் மன்னராட்சி பகுதி என்பதால் மன்னருக்கு ஆலோசகர் பதவியிலும், பின்னர் பிரதமர் பதவியிலும் நியமிக்கப்பட்டார். இந்தத் தகுதியே பின்னர் இந்திய இணைப்பின்போது அவருக்கு செல்வாக்கை தேடித்தந்தது.

காஷ்மீருக்கு கொடுக்கப்பட்ட சட்டப்பிரிவு 370 தெளிவாக தன்னாட்சி அதிகாரங்களை குறிப்பிடாததால் ஷேக் அப்துல்லாவிற்கு பல தர்மசங்கடங்கள் நேர்ந்தன. சங்கடங்களை தீர்க்க சமாதானத்தையும்விட, சண்டையையே அதிகம் விரும்புபவர் போல் ஷேக் அப்துல்லா நடந்து கொள்வதாக நேரு கருதினார். காஷ்மீர் பிரச்சினையை உலகப் பிரச்சினையாக்கும் முயற்சியில் ஷேக் அப்துல்லா ஆர்வம் காட்டியது மேலும் நிலைமையை சிக்கலாக்கியது. விளைவு 20 ஆண்டுகளுக்கு மேலாக சிறையில் இருந்தார் ஷேக் அப்துல்லா. ஆனாலும் தேசியவாதியாக அவர் பின்னாட்களில் புகழப்பட்டதுதான் ஆறுதல் அளித்தது.

**ராஜீவ்காந்தி:**



இந்திராவின் படுகொலைக்குப் பிறகு பிரதமரான ராஜீவ் காந்தி மிகுந்த செல்வாக்கோடு ஆட்சியில் இருந்தாலும், காஷ்மீர் விஷயத்தில் நிறைய தடுமாற்றங்கள் நிகழ்ந்தது. ஃபரூக் ஆட்சிக் கவிழ்ப்பு, பிறகு அவருடன் சேர்ந்து கூட்டணி, 90களுக்கு முன்பு தீவிரவாதம் தலைதூக்கியபோது சரிவர கையாளாமல் விட்டது போன்றவற்றை குறிப்பிடலாம். எனினும், ஸியாவுடன் ஒரு சுற்றுப் பேச்சுவார்த்தை நடத்தினார். ஸியாவின் மரணம் பேச்சுக்களைத் தடுத்துவிட்டது.

**வாஜ்பாய்:**

தாஷ்கண்ட் பேச்சுவார்த்தையை, இந்தியா போரில் வெற்றியை விட்டுக்கொடுப்பது போலாகும் என்று கூறி எதிர்த்தவர். போர் மூலமாக காஷ்மீர் பிரச்சினையை தீர்த்துவிடமுடியுமென வலியுறுத்தி வந்தது அவரது ஜனசங்க கட்சி.

1978ல் மொரார்ஜியின் அரசாங்கத்தில் வெளியுறவுத்துறை அமைச்சராகி சீனாவுக்கும், பாகிஸ்தானிற்கும் அமைதிப் பயணம் மேற்கொண்டவரும் வாஜ்பாய்தான். லாகூர் பஸ் பயணம், கார்கில் போர், முஷாரப்புடன் ஆக்ரா பேச்சுவார்த்தை, காஷ்மீரின் தீவிரவாதிகளின் அதிடிரடிப் போர் என இவரது காலத்தில் காஷ்மீர் பிரச்சினை பல்வேறு திடீர் திருப்பங்களைச் சந்தித்து வருகிறது.



**ஃபாருக் அப்துல்லா:**

தனது தந்தையான ஷேக் அப்துல்லாவின் அரசியல் பாசறையில் பயின்ற ஃபாருக், அவரைப் போன்றதொரு இந்திய தேசியவாதி. அவர் தந்தையின் கட்சியான தேசிய மாநாட்டு கட்சியின் இன்றைய தலைவர். 63 வயது நிரம்பிய இவர் நான்கு முறை காஷ்மீர் முதல்வராகியுள்ளார்.

இவரது காஷ்மீர் கொள்கை, பாக். ஆக்கிரமித்துள்ள காஷ்மீரை அதற்கு கொடுத்துவிடுவது, கட்டுப்பாட்டு எல்லைக் கோட்டை சர்வதேச எல்லைக் கோடாக ஏற்றுக்கொள்வது. மேலும் சட்டப்பிரிவு 370 இன்படி 1953ற்கு முந்தைய அதிகாரங்களைக் காஷ்மீருக்கு வழங்க வேண்டுமென்பதும் இந்திய அரசிற்கு வைக்



கும் 'உரிமையுள்ள' கோரிக்கை. இவரது மகன் உமர் அப்துல்லா இன்றைய வாஜ்பாய் அரசில் அமைச்சர். இவரைத் தவிர முன்னாள் உள்துறை அமைச்சர் முஃப்தி முகம்மது கையத், மார்க்ஸிஸ்ட் எம்.எல்.ஏ. யூசுப் தாரிகாமி ஆகியோரும் இந்திய ஆதரவாளர்கள். இதில் தாரிகாமி ஓரளவு மக்கள் ஆதரவு பெற்றவர். முஃப்தியின் கட்சிக்குச் சில இடங்களில் மட்டும் ஆதரவு. இரண்டு எம்.எல்.ஏ க்களைக் கொண்ட பி.ஜே.பி.க்கு ஜம்மு பண்டிட்கள் மத்தியில் நல்ல செல்வாக்குண்டு.

கடந்த ஐம்பது ஆண்டுகளில் ஃபரூக் அப்துல்லா குடும்பம் தவிர காஷ்மீரில் பிற இந்திய ஆதரவாளர்கள் யாரும் வளரவில்லை எனலாம். இது இந்தியாவிற்கு பாதகமானது என்பது நிதர்சனம்.

கடந்த பத்தாண்டுகளில் மட்டும் காஷ்மீர் தீவிரவாதச் செயல்களில் 24,000 பேர் இறந்திருக்கிறார்கள்.

### அமைதிப் பேச்சுக்கள்

**1949**
கட்டுப்பாட்டு எல்லைக்கோடு அமைக்க ஐ.நா. உதவி. இந்தியாவில் நேருவும், பாகிஸ்தானில் லியாகத் அலிகானும் தலைவர்கள்.

**1963**
நேரு, அயூப்கான் இடையே ரகசிய பேச்சுவார்த்தைகள் நடந்தன. நல்ல முடிவு கிடைக்கவில்லை.

**1966**
தாஷ்கண்ட் பேச்சுவார்த்தை. அயூப்கான், லால்பகதூர் சாஸ்திரி ஒப்பந்தம் கையெழுத்தானது.

**1972**
பூட்டோ, இந்திரா காந்தி தலைவர்களாக இருக்கையில் சிம்லா பேச்சுவார்த்தை. 1949 ஒப்பந்தம் போன்று காஷ்மீர் பிரச்சினையை பேச்சுவார்த்தைகள் மூலம் மட்டுமே தீர்த்துக் கொள்ள உதவும் உடன்பாடு எட்டப்பட்டது.

**1978**
மொரார்ஜி தேசாய் (வாஜ்பாய் வெளியுறவுத்துறை அமைச்சர்), ஸியா-வுல்-ஹக் இடையே வர்த்தகம், கலாசாரம், தகவல் தொடர்பு பற்றிய ஒப்பந்தங்கள் ஏற்பட்டன.

**1980, 81, 82**
ஸியா, இந்திராகாந்தி (நரசிம்மராவ் வெளியுறவுத்துறை அமைச்சர்) சில சுற்று பேச்சுவார்த்தைகள். இந்தோ-பாக். 'இணைப்புக் கமிஷன்' அமைப்பு.

**1988**
சார்க் மாநாடு. ராஜீவ் காந்தி, பெனாசீர் இடையே அணுசக்தி மையங்களை குறித்த பேச்சுக்கள்.

**1990**
வெளிவிவகாரத்துறை செயலாளர்கள் அளவில் பேச்சுவார்த்தை. 1992ல் பேச்சுக்கள் நிறுத்தம்.

**1997**
குஜ்ரால், நவாஸ் ஷெரீஃப் ஐ.நா. மாநாட்டு சந்திப்பு. பேச்சுவார்த்தைகள் குறித்த எட்டு விவகாரங்களை அடையாளங் காண முடிவு.

**1999**
வாஜ்பாய், நவாஸ் ஷெரீஃப். லாகூர் பஸ் பயணம், கூட்டறிக்கை வெளியீடு.

**2001**
வாஜ்பாய், முஷாரஃப் ஆக்ரா பேச்சுவார்த்தை. பலன் இதுவரை தெரியவில்லை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹுர்யத் மாநாடு

இது 26 மத, சமூக அரசியல் கட்சிகள் அமைப்புகளின் சங்கமம். 1993ல் அமைக் கப்பட்டது. அமெரிக்க அதிபர் பில் கிளின் டனின் இந்திய வருகையின் போது பிரபல மானது. இன்றைய காஷ்மீர் மக்களின் ஒரே பிரதிநிதியாக தன்னை அடையாளங் காட்டும் முயற்சிகளில் ஈடுபட்டு வருகிறது. அதிகாரபூர்வமாக இந்திய அரசு இதனை அங்கீகரிக்கவில்லை. எனினும் இதனுடன் அமைதிப் பேச்சுவார்த்தைக்கு தயார்.
இதன் தலைவர்கள் பல பேர். அவர்களுக் குள் ஒத்த கருத்து கிடையாது. 9 பேர் கொண்ட உயர்மட்ட குழுதான் முடிவெடு க்கும் அதிகாரம் படைத்தது. இவர்களில் ஒருபகுதியினர் பாகிஸ்தான் ஆதரவு தலை வர்கள். மற்றவர்கள் 'சுதந்திர' காஷ்மீரு க்கு குரல் கொடுப்பவர்கள். இதுதான் கருத்து வேறுபாட்டின் மையம். இதன் தலைவர்களில் நன்கறியப்பட்ட பெயர்கள், பேராசிரியர் அப்துல்கனி பட், அப்துல் கனி லோன், யாசீன் மாலிக், ஷபீர்ஷா, சையது அலி கீலானி, அப்பாஸ் அன்சாரி, உமர் ∴பாருக், ஹமீது ஆகியோர். இவர் களில் ஷா, மாலிக், உமர் ∴பருக் போன் றவர்கள் மக்கள் செல்வாக்கு படைத்த வர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

**சையத் அலி ஷா கீலானி:**



71வயது நிரம்பிய கீலானி ஒரு பாக் ஆதரவாளர். முன்னாள் ஆசிரியரான இவர் 1989ல் தனி நாடு போராட்டத்தில் ஈடுபட ஆரம்பித்தார். அதற்காக 90களின் ஆரம்பத்தில் தனது சோபோர் தொகுதி சட்டசபை உறுப்பினர் பதவியைத் துறந்தார். ஜமாத்தே இஷ்லாமியின் முன்னாள் தலைவர். காஷ்மீர் பிரச்சினையை மத அடிப்படையிலான பிரச்சினையாக பார்ப்பவர். பாகி ஸ்தானுடன் காஷ்மீர் இணைக்கப்படுவதை ஆதரிக் கிறார். இந்தியாவுடனான பேச்சுவார்த்தையில் பாகி ஸ்தானையும் இணைக்கவேண்டும் என்பது இவரது பிரதான கோரிக்கை.



**யாசீன் மாலிக்:**

ஒரு காலத்தில் ∴பாஷன் மொடலாக இருந்தார். பின் னர் ஜம்மு காஷ்மீர் விடுதலை முன்னணியில் சேர்ந்து தீவிர வாதியானவர். 1990ல் கைது செய்யப்பட்டவர். தனி நாடு கேட்பவர். வயது 34 தான். இவரது ஜம்மு காஷ்மீர் விடுதலை முன் னணி செல்வாக்கு இழந்துவிட்டது. உயிர் பிழைத் துள்ள மிகச் சில பழைய தீவிரவாதிகளில் ஒருவர். ஹுர்யத்தில் முக்கிய மிதவாதி.

## போர்கள்

**1948**
பதான்கள் படையெடுப்பு; காஷ் மீர் இந்தியாவுடன் இணைப்பு. இணைப்பை மக்களிடம் கலந் தாலோசிக்கவில்லை என பாக். குற்றச்சாட்டு.

**1965**
காஷ்மீரை கைப்பற்ற பாக். முயற்சி. காஷ்மீருக்கான முதல் இந்தோ-பாக் போர். போரில் பாக். தோல்வி.

**1971**
கிழக்கு பாகிஸ்தான்மீது பாக். இராணுவ நடவடிக்கை. இந்தி யா கிழக்கு பாகிஸ்தானுக்கு ஆதரவு. வங்காளதேசம் பிறந் தது. பாக். இராணுவம் சரண் அடைந்தது.

**1988 - 2001**
பாக். ஆதரவு முஜாஹுதீன்கள் ஜிகாத் போர். பயங்கரவாத சீர் குலைவு நடவடிக்கைகள்.

**1999**
கார்கில் பகுதியில் ஊடுருவல் போர். மூன்றாவது முறையாக பாக். இராணுவம் இந்தியாவி டம் தோல்வி.

– ரமேஷ்

**அப்துல் கனி லோன்:**



வக்கீலாக இரு ந்தவர். மக்கள் மாநாட்டு கட்சி யின் தலைவர். 1970களில் அங் கு அமைச்சராக இருந்தவர்.
ஹுர்யத்தின் பிரதம சிந்தாந்தவாதி. காஷ்மீரின் குப்வாரா, சிந்த்வாரா பகுதிகளில் செல்வாக்குள்ளவர். மிதவாதி என்றாலும் இந்தியாவிடம் ஐ.நா. தீர்மானங்களை நடைமுறை ப்படுத்த வற்புறுத்துபவர்.

**அப்துல் கனி பட்:**



கல்லூரிப் பேராசி ரியர். இன்றைய ஹுர்யத் தலைவர். பாக். வசமுள்ள காஷ்மீரின் ஆளும் கட்சியான முஸ்லிம் மாநாட்டு கட்சியின் தலைவர். கொஞ்சம் வித்தியாசமாக தீர்வு சொல்பவர். ஜம்மு, லடாக் காஷ் மீருக்கு வேண்டாம் என்றும் மக்கள் கருத்துக் கணிப்பு நடத்தப்பட வேண் டும் என்றும் கூறுகிறார்.

**மௌலவி அப்பாஸ் அன்சாரி:**



'இதெஹாதுல் முஸ்லிம மின்' என்கிற போராட்ட குழுவின் தலைவர். இஸ் லாமின் ஸியா பிரிவு தலைவர். வெளியுலகில் அதிகம் சஞ்சரிக்காத இவர் முன்னாள் பாக். ஆதரவாளர். தற்போது தனிநாடு கோரிக்கை யை வலியுறுத்துகிறார்.



**மிர்வாய்ஸ் உமர் ∴பருக்:**

மிர்வாய்ஸ் என்றால் மதத் தலைவர் என்று பொருள். வயதுப்படி ஹுர்யத்தின் கடைக்குட்டி. வயது 26 தான். இவரது தந்தையான மௌலவி ∴பாருக் சுட்டுக் கொள்ளப்பட்டட பிறகு அவரது இட த்தை நிரப்பினார். வயதில் சிறியவர் என்றா லும் மௌலவி அந்தஸ்தால் 'ஹுர்யத்தின் முதல் தலைவரானார்'. ஸ்ரீநகரின் முடிசூடா ராஜா என்கிறார்கள். ஹுர்யத்திற்கு முன் அவாமி போராட்டக் குழுவின் தலைவர். தனி நாடு கோரிவரும் மிதவாதி.



**ஷேக் அப்துல் அஸீஸ்:**

ஒரு காலத்து ஒன்றுபட்ட கட்சியான மக்கள் லீக்கின் இன்றைய உடைந்த ஒரு பிரிவின் தலைவர். பாக். ஆதரவாளர். தீவிரவாதி யாக இருந்து மிதவாத அர சியலுக்கு வந்துள்ளவர்.



**ஷபீர் ஷா:**

ஹுர்யத்தை விட்டு வெளி யேறியவர். காஷ்மீரின் விடு தலைப் போராட்டத்தில் இந் துக்கள், புத்த மதத்தவர் எல்லோரையும் இணைக்கவேண்டும் என்று கூறு கிறவர். இந்த மாதிரியான வேற்று கருத்துக்க ளால் ஹுர்யத்தின் பாக். ஆதரவாளர்களுடன் ஒத்துவரவில்லை. மக்களிடையே மதச்சார்பற்ற 'இமேஜ்'ஜால் புகழ் பெற்றவர். நீண்டநாள் சிறை வாசம் அனுபவித்தவர் என்பதால் காஷ்மீரின் 'நெல்சன் மண்டேலா' என அழைக்கப்படுகிறார். தனிநாடு ஆதரவாளர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை

# ஓர் இரவில்

உக்குவளை அக்ரம்

என் முகத்தை சுற்றி பல ஈக்கள் மொய்த்துக் கொண்டிருந்தன. வலதுபுற ஊத்த கானின் நாத்தம் கொடல பொரட்டி எடுத்தது. பக்கத்தில உரியானோடு பொடியன் 'பீ' பேண்டு கொண்டிருந்தான். நாய் தருணத்திற்காக வாலை ஆட்டிக்கொண்டு நின்றது. நாய் ரெண்டடி வரும்போதெல்லாம் பொடியன் ''அம்மா''ன்னு பயத்தில கத்தினான்.

காதில வச்சிருந்த பீடித்துண்டை ஒதட்டில வைச்சி இடுப்புல சுருட்டியிருந்த நெருப்பட்டியிலிருந்து, குச்சியெடுத்து... பொட்டியில ஒரசினேன் ''ஸ்'' சிணுக்கத்தோடு, பீடி உறவு கொண்டது நெருப்புடன்.

இன்னும் பல ஈ முகத்துக்கு நேரே வந்து ஆடிப்பாடியது. செலது கன்னத்துல உக்கார கைகளை ஆட்டி வெரட்டினேன். அராங்குட்டியான ஈக்கள் காதருகே ''ய்ய்ய்ங்ங்..'' கத்தி காதில மோதி பயந்தோடியது. ''ச்சே...'' கோபம் வந்தது, அந்த சின்ன உசுரு மீது.

''பாக்குமரமா ஒயர்ந்துருக்க... ஒடம்பும் வயசும் வளர்ந்துருக்கே ஒழிய, குடும்பத்து மீது அக்கறை இருக்கா... எத்தன வருஷத்துக்குத்தான் அங்கிட்டு இங்கிட்டு வேல பார்த்து உன்ன காப்பத்தறது''. வெத்திலை நெற்றிகிள்ளி, சுண்ணாம்பும் பாக்கும் சேர்த்து, போயிலையுடன் உள்ளே தள்ளினாள். ''கொந்துராக்தர் சபேசன் முதலாளிண்ட காலப்புடிக் காத கொறயாக கெஞ்சி அவர்ட்ட எடுபிடி வேலைக்கு சேர்த்துட்டன். நீ என்னடான்னா.. அவரு ஏதோ சத்தமா பேசிட்டார்ன்னு அடிக்க போயிருக்க...'' வெற்றிலை வாயிற்குள் சாம்பாராகி சிவப்புக் கோடாய் உதட்டோரம் நழுவியது.

ஒன்றைக் கவர்ந்து விட்டேன் என்றால் ஒரு கிழமையோ... ரெண்டு கிழமைக்கோ... என் வாழ்க்கை வண்டி நகர்ந்துவிடும். ஜன்னலை திறந்து விட்டேன் என்றால்... உள்ளே நுழைந்து விடலாம். அதற்கான அவகாசத்தை என் புலன்கள் துப்பறிந்தன.

''நாம ஏழைடா... தெனமும் வேல செய்தாதான் வயிறு நெறையும். நமக்கெல்லாம் கோபம் வரக் கூடாது. அதிகாரம்,கோபம் காசு உள்ளவங்கட குணம். ஏழை கோபப்பட்டா வயிறு பட்டினி கெடக்கணும்''.

தேங்காய்ப் பாலுக்குள் சோற்று பருக்கைகள் அமிழ்ந்திருந்தன. வெங்காய, கொச்சிக்காய் துண்டுகளும் அதனுள்ளே மிதந்தன. கெட்டுப்போன வாசம் மூக்கத் துளைத்தது. பசியின் ஆக்கிரமிப்பு... என் வயிற்றுக்குள் தேவாமிர்தமாக இறங்கியது.

அம்மா சொன்னது இன்னும் மனசரிச்சுது. அவ செத்த பிறகு என் வாழ்க்கையே தடம்மாறியிருந்தது. இருந்தும் நேற்றைய இரவு சம்பவம் எனக்குள் பூகம்பத்தைத் தோற்றுவித்திருந்தது.

குரங்கு பிய்த்த அப்பமாக... நெலா வானத்துல நெளிஞ்சது. அடிக்கடி தன்னை மறைக்கும் மேகத்தோடு, கோபத்தால் தவித்தது. நெலாவின் பரிதவிப்பு பரவசமூட்டியது நட்சத்திரங்களுக்கு.

''சர சர... சர்...சர்...'' காய்ந்த சருகில் ஏதோ உதிர்ந்ததா ஊர்கின்றதா... சப்தம் என் செவிகளை கூர்மையாக்கின. இதயத்துள் பயம் உடலை வெடவெடக்க வைத்தது. பயத்தின் சாரல்... பெருமூச்சாக வெளிப்பட்டது.

மீண்டும் அதே, சப்தம். மெல்ல திரும்பினேன். விழிகளை சுழற்றினேன். மாமரம் புதுப்பெண்ணாக கூந்தல் நிறைத்திருந்தது மாம்பூக்களை... கிளை அதிர்வில் உதிர்ந்த பூக்களின் சப்தம் எனக்குள் பயத்தை உருவாக்கியதை நினைந்து வெட்கத்துடன் எனக்குள் மலர்ந்தேன்.

தூரத்தே, நான்கைந்து நாய்கள் தமக்கிடையில் ஒற்றுமையின்றி.. உறுமலுடன் எதையோ, குதறிக் கொண்டிருந்தன. அவைகளின் பார்வையில் என்னுருவம் பதியுமாயின் சிலந்தி வலையில் சிக்குண்ட மின்னுட்டாம் பூச்சியாகிடும் என் வாழ்க்கை. மரங்களுக்கிடையில் சப்தமின்றி பாதம் வைத்து நகர்ந்தேன்.

வரிசையாய் சின்னச்சின்ன வீடுகள். சூழலுக்கேற்ப எனக்கானதாக எதுவும் இருக்கவில்லை.

இதுவரை பல திருட்டுக்கள். என்னை உயிர்காத்து, நகர்த்தியிருந்தன. பகலில் கும்பகர்ணனாகவும், இரவில் வெளவாலாகவும் சிறகடிக்கிறேன். இது என் உலகமாக ஐந்தாண்டுகள். எவரின் துன்ப துயரமும் என்னை பாதித்ததில்லை. என் வாழ்வு. இருப்பு, சூன்யமாய் படர்ந்திருக்க இரவு மனிதனாக வாழ்கிறேன்.

தொலைவில் பாலைவனத்து தனிமரமாய் ஓர் குடிசை. மண்ணெண்ணை விளக்கின் சுடர் கலங்கரையானது. மெல்ல இருளுக்குள் இருளாகி வீட்டை நோக்கி விரைந்தேன்.

வீடு மண் சுவர்களால் உறுதியாயிருந்தது. தகரங்கள் கூரையில் பரத்தி விடப்பட்டிருந்தது. மண்சுவர் பைசா கோபுரமாக சரிந்திருந்தது. கூரைக்கும் சுவருக்குமிடையே உள்ள விரிசல் எனக்கு நம்பிக்கையூட்டியது. ஒற்றை ஜன்னல்... ஜன்னலோடு காதல் கொள்ளும் ரம்புட்டான் மரத்தின்கிளை. மரத்திலேறி.. வீட்டினுள்ளே... நோட்டம் விட்டேன். குப்பி லாம்பின் வெளிச்சத்தில், மங்கலாகத் தெரிந்த பொருட்களில் பெறுமதியான வைகளும், பெறுமதியற்றவைகளும் வீட்டை அலங்கரித்துக் கொண்டிருந்தன.



ஒன்றைக் கவர்ந்து விட்டேன் என்றால் ஒரு கிழமையோ... ரெண்டு கிழமைக்கோ... என் வாழ்க்கை வண்டி நகர்ந்துவிடும். ஜன்னலை திறந்துவிட்டேன் என்றால்... உள்ளே நுழைந்து விடலாம். அதற்கான அவகாசத்தை என் புலன்கள் துப்பறிந்தன.

''ஹ... ஹ...ம்மா..'' யாரோ உள்ளே இருமும் சப்தம்.

என் நகர்வை அவதானித்தா எச்சரிக்கை விடுக்கிறார். எனக்குள் வியர்த்தது. மீண்டும் ஈனமான முனகல். இதயத்தை வெளியேற்றிவிடும் பிரயத்தனத்தில் இருமலின் அதிர்வு இருந்தது. உயிர் வாழ்தலுக்கான, கடைசிப் போராட்டமாக அந்த நிகழ்வு என்னை தகர்த்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விழித்திருக்கும் வீட்டில் எனக்கென்ன வேலை, தப்பித்துக்கொள்ள எச்சரித்தது மனசு. இல்லை, ஏதோ.. நடக்கப் போகுது, பார்த்துட்டு போவோம். இன்னொரு பலவீன மனசு வேடிக்கை பார்க்கச் சொன்னது.

கைலாம்புடன் உள்ளேயிருந்து, பெண்ணொருத்தி... சுருண்டிருந்த உருவத்தின் அருகில் வந்தமர்ந்தாள்.

நெஞ்சுப் பகுதி மேலும் கீழுமாக எகிறிகொண்டிருந்தது. சுவாசம் ''க்ரு..க்..ஸ்ஸ்..'' இன்னும் பலவிதமான ஓசைகளோடு இயங்கிக் கொண்டிருந்தது.

''நெஞ்சை நீவி விடவா... சூடம் எண்ணெய் இருக்கு, நெஞ்சில தடவினா மூச்செடுக்க லேசா இருக்கும்''.

''வேணாம் பாத்திமா.. என் நம்பிக்கை தோற்றிருச்சு, ஒடம்பின் சூடு கொறஞ்சி விறைச்சி கொண்டு வருது''

கருக்கொண்ட மேகமானாள் பாத்திமா... துயரம் நெஞ்சை அடைத்தது. எண்ணெயை பூசி நீவிக் கொண்டிருந்தாள்.

''இன்னும் எத்தன நேரம்ன்னு தெரியாது இந்த கட்ட மரத்துபோக...'' வார்த்தையின்றி உலர்ந்தது பாத்திமாவின் நாவு.

''குடும்பம், பிள்ளைகள்ன்னு வாழ்க்கையின் சுமைகளை சுமத்தி விட்டு பிரியப்போறேன். வரண்டு போன வாழ்வை மட்டும் உங்களுக்கானதாக மீதம் வைத்து... உங்கள நிர்க்கதியாக தவிக்க விட்டுட்டு பிரியப் போறேன்.

''அப்படியெல்லாம் பேசாதீங்க'' விம்மலுக்கிடையில் வார்த்தை உடைந்து வெளிவந்தது.

நான் மௌத்தாகிட்டா... நீங்க நான்கு மாதம், பத்து நாள், இத்தா இருக்கணும்.

தலையாட்டினாள்.



புள்ளகளின் தேவை, வீட்டை பராமரிக்க வேண்டியவள் நீங்களாக இருக்க போவதனால் மார்க்கம் அனுமதித்தப்படி, இத்தா கடமை இருக்கும் நாட்களில்... நீங்கள் வெளியில் சென்று உழைக்கலாம். பகல்

**எனக்கு புரிந்து போனது. அந்த இசுலாமிய பெரியவர் இன்னும் சில நிமிடங்களில் செத்துடுவாருன்னு... எனக்குள் அலையடித்தது.**

இரவாகும் முன் வீட்டிற்குள் அடைந்திடணும். மார்க்க சட்டதிட்டம் தெரியாத சிலதுகள், பழிசொல்லும். இருண்ட மனங்களின் கேலிகளை புறந்தள்ளி, நீங்க வாழணும்.

கிளையிலிருந்து ஏதோ பறவையின் 'பீ' பச்சக்கன்னு முகத்தில் விழுந்து ஒட்டிக் கொண்டது. கையால் முகத்தைத் துடைத்தேன். சகிக்க முடியாத நாத்தம், சுவாசமெங்கும் பரவியது. மீண்டும் விழிகள் வீட்டுக்குள் ஊடுருவியது.

மத்தவங்கட கஷ்டத்துல திருப்திபட்டு, வீண்பழி, குற்றம் சுமத்த பழகிவிட்டது நாம் வாழும் சூழல். தூரநோக்கற்று, தெளிவான சிந்தனைகளற்று கறைபடிந்து போன மனங்களுடன், அரைகுறை விடயதானத்தோடு பண்ணும் உபதேசம், உங்களை அறியாமையின் சிறைக்குள் சிறையிலிட முயற்சிக்கும். கல்லுக்குள் துளைவிடும் வேரென படர்ந்து வியாபிக்கணும் வாழ்வில் நீங்கள்.

அல்குர்ஆனும் - நபியவர்களின் வாழ்வும், சுன்னாவும் உங்கள் வாழ்வின் போதனையாகவும், முன்னேற்றத்தின் படிக்கற்களாகவும் ஏற்று கடைப்பிடியுங்கள்''

நிறுத்திவிட்டு,

''லாஇலாஹ இல்லல்லாஹு

முஹம்மதுர் ரஸூலில்லாஹி'


அவரின் வாய் மந்திரமாக உச்சரித்தது. அந்த பொம்பள அதிர்வடைந்தாள். முகத்தில் சோகம் அப்பிக்கொண்டது. மூச்சுவிட கஷ்டப்பட்டார். வயிற்றுப்பகுதி மேல் நோக்கி விரிவடைந்தது. பின்னர், சுவாசம், நெஞ்சுப் பகுதியை அடைந்து மேல்நோக்கியும், கீழ் நோக்கியும் ஏறி இறங்கியது.

பெறகு, தொண்டை என்று நகர்ந்தது. இருந்தும் அவர் சொல்வதை நிறுத்திவிடாமல் தொடர்ந்து கொண்டிருந்தார்.

எனக்குப் புரிந்து போனது. அந்த இசுலாமிய பெரியவர் இன்னும் சில நிமிடங்களில் செத்துடுவாருன்னு... எனக்குள் அலையடித்தது. மெல்ல மரத்தைவிட்டு இறங்கி அடியெடுத்தேன்.

மரணம் அண்மித்த வேளையிலும், நம்பிக்கையுடன் காலனை வரவேற்ற கடவுள் பக்தி. இழப்பின் பின்னான வாழ்வை.. மனைவிக்கு நெறிப்படுத்திய... அந்த உருவம். எனக்குள் சலனத்தை தோற்றுவித்தது.

வியர்வை மண்மீது சிந்திடாமல், உழைப்பின் உன்னதம் மறந்துபோன நான்... மனிதனாக உருவெடுக்க அருகதையற்றவன். எதிர்காலம் தன்முன்னே சூன்யமாய் உருக் கொண்டு நிற்கின்ற வேளை, அந்த குடும்ப



தலைவியின் நம்பிக்கை எனக்கில்லாமல் போனதேன்?

எங்கோ... உறக்கம் கலைந்த சேவல் கூவியது. மசூதியிலிருந்து அதிகாலை வணக்கத்துக்கு அழைப்பு கேட்டது.

★ ★ ★

''டேய் இன்னுமா... ஒக்காந்திருக்கே...'' பொடியனின் தாய் சத்தம் போட்டாள்.

என் நினைவு கலைந்தது. அம்மா சொன்னபடி இனி ஒழுங்கா வேல செஞ்சி குடும்பத்த காப்பாத்தணும். அநியாயமாக இதன் பொறகு யாருடய பொருளையும் களவெடுப்பதில்ல... இனி வியர்வை சிந்தி வாழ்வேன். பீடியின் நெருப்பு உதட்டை பொசுக்கியது. பதறி துப்பினேன்.

பொடியனின் தாய், அவனை சுத்தம் செய்து கொண்டிருந்தாள்.

நாய் ''லக்... லக்'' நக்கத்தொடங்கியது. 'ச்சீ..தி...தி...' பொடியனின் தாய் வெரட்டினாள். வாலை ஆட்டியவாறு, ஓடாத நாயை நோக்கி, விட்டெறிந்தாள் கல்லொன்றை... நாய் மல வாயை மூடியவண்ணம் எடுத்தது ஓட்டம்.

அந்த இசுலாமியர் செத்த விடயத்த... ஊராருக்கு ஒலிபெருக்கியில் மசூதியிலிருந்து தெரிவித்தது குரலொன்று.

தெளிந்த மனதுடன் அவ்விடத்தை விட்டு, அடியெடுத்தேன். அந்த பெரியவரின் இறுதி கிரியைகளில் கலந்து கொள்வதற்கு.

சுகந்தமான காற்று என்னை ஆரத்தழுவி உரசியவாறு, என்னுடன் நகர்ந்து வந்து கொண்டிருந்தது.

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆறுதல் பரிசுக் கவிதை

NIPU அமுது படைப்பாற்றல் போட்டி

# மீண்டு வரும் காலம்

நேற்றுப் போலிருக்கிறது
நம்கனவுகள் தீப்பற்றிய நினைவுகளை எண்ண!
அன்று
நமது சுவாசங்கள் நமக்கு தாய்நாடானது
வரலாறு நமது உணர்வுகளானது
உயிரை வதைத்து, வாழ்வை விதைத்தோம்
உடன்பிறந்தார் உதிரத்தில்
விடுதலைப் பூசைக்கு அபிஷேகம் செய்தோம்

ஆயின், என்ன
விடுதலை நமக்கு விலங்காயிற்று

நூற்றாண்டுகால தாகத்தை தணிக்கின்ற
ஊற்றாய் பெருகி, பின்
காற்றாய் பரவிடும்
போராட்டம் தந்த 'அதிகார எச்சங்கள்'
மேய்ப்பர்களுக்காயிற்று

மூன்றாம் முறையாய் குடிகள்
அடிமைகளாயினர் -

வடபுல கர்ப்பத்தின் தொப்புள்க் கொடியறுத்தவர்
இழிவுகள் நமது சேகரமாயிற்று!
இன்னும்,
நமது வாழ்வும் வளமுள்ள தேசமும்
வெறுங் கனவுகள் ஆயிற்று

நேற்றுப் போலிருக்கிறது
நம்கனவுகள் தீப்பற்றிய நினைவுகளை எண்ண!

'இன்றைய பொழுது'கள் நமக்கு
இப்படியானது -

நமது கூட்டுக்கு நாமே கல்லெறியாதவரை
காலம் யாரையும் காயப்படுத்தாதுதான்

இருந்தும்,
தொலைதலில் தானே தேடல் நமக்கு
எரிதலில் உயிர்த்த பீனிக்ஸ் பறவையாய்
மீண்டு(ம்) வருமொரு காலம் -
மனிதர்கள் போரிடும் காலம் -

அதன்போது,
கடவுளும் நம்மை விரும்பக்கூடும்!

- ஏ. ஜீ. எம். ஸதக்கா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலையகக் கல்வி?

அன்று

இன்று

நாளை

29.03.2002

அட்டன் தொண்டமான் தொழிற் பயிற்சி கல்லூரி கேட்போர் கூடத்தில் புதிய பண்பாட்டு அமைப்பினால் மலையக கல்வி ஆய்வரங்கு நடைபெற்றது.

மலையக கல்வி மேம்பாட்டுக்காக குறுகிய மற்றும் நீண்ட காலத் திட்டங்களை வகுக்கும் அரசாங்க கல்விசார் ஆலோசகர்களுக்கும், மற்றும் திட்ட அமுலாக்கலின் போது அரசியல் தலைமைகளுக்கு அழுத்தம்கொடுப்பதற்காகவும், மலையக கல்வி மாநாடு ஒன்றை விரைவில் நடத்தும் நோக்கத்திலுமே இது நடத்தப்பட்டது.




பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

மலையக கல்வித்துறை சார்ந்த பேராசிரியர்கள், புத்திஜீவிகள், கல்வி அதிகாரிகள், அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் சமூக நலனில் ஆர்வமிக்க பெரும்பாலானோர் முழுநாள் கருத்தரங்கில் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

மலையகக் கல்வித்துறையானது, காலத்தின் தேவைக்கேற்பவும் கல்வி வளர்ச்சியின் வேகத்திற்கு ஏற்பவும் ஈடுகொடுக்க முடியாமல் போனதற்கான காரணிகளை நன்கு ஆராய்ந்து அதனைத் தீர்ப்பதற்கான முயற்சியினை மேற்கொள்வதற்காகவே ஆய்வரங்கு நடத்தப்படுவதாக வரவேற்புரை நிகழ்த்திய **பொன். பிரபாகரன்** கூறினார்.

**பேராசிரியர் சோ.சந்திரசேகரம் அவர்கள் 'உயர் கல்வியும் மலையகமும்' என்ற தலைப்பிலான தனது உரையில்,**

''உலகளாவிய ரீதியில் சமூகங்களின் வளர்ச்சிக்கு கல்வியே பெரிதும் காரணமாய் அமைந்துள்ளது. நவீன தகவல் மைய நூற்றாண்டு காலப்பகுதியில் அறிவுசார் ஊழியர்களாகவே இனம்காண்கிறோம். உலக் மயமாக்கம் எவ்வாறு தனது காலத்திற்கு ஏற்றவிதத்தில் மாறி வருகிறது என்பதை உணர்ந்து கொள்ளவேண்டும்.

1942களில் இலங்கையில் பல்கலைக்கழகம் தொடங்கிய காலம் தொட்டு மலையக கல்வியில் பின்தங்கிய நிலைமையே காணப்படுகிறது. சராசரி இலங்கையர் 7 ஆண்டு வரை படித்தவராகவும், ஆசியாவில் கொரியர்கள் 9 ஆண்டுவரை படித்தவராகவும், இந்தியர் 2 ஆண்டு படித்தவராகவும் அதே வேளை இலங்கையில் வாழும் இந்தியத் தமிழர் 4 - 5 ஆண்டுகள் படித்தவராகவும் இருக்கின்றனர்.

மலையகப் பகுதிகளில் இன்றைய ஆரம்பக் கல்விமுறையானது முன்னேற்றம் அடைந்து காணப்படுகிறது. அடிப்படைக் கல்வித் தகுதிகளைப் பெறுவதன் மூலமே ஒருவன் வாழ்க்கையின் உயர் நிலையை அடைகிறான்'' என்றார்.

**சிரேஷ்ட விரிவுரையாளரான திரு. மா. கருணாநிதி அவர்கள் 'பொதுக் கல்வியும் மலையகமும்' என்ற தலைப்பில் ஆய்வுரை நிகழ்த்தினார்.**

''1820களில் பெருந்தோட்டப் பாடசாலைகள் தொடங்கப்பட்டது. 1960களில் ஆரம்பக் கல்வியானது சற்று வளர்ச்சிப் போக்கை காட்டியது. 1977 களில் அரசியல் விழிப்புணர்வு மாற்றங்களால் வளர்ச்சியடைந்தது. 1977, 82, 84 காலப்பகுதியில் தோட்டப் பாடசாலைகள் அரசாங்க நிர்வாகத்தின் கீழ் வந்ததும் ஆரம்பக்கல்வியின் ஆசிரியர் தரத்திலும் அபிவிருத்தியிலும் சிறு மாற்றங்கள் ஏற்பட்டன.

உலகில் 100 மில்லியனுக்கு மேற்பட்டவர்கள் எழுத்தறிவற்றவர்களாக இருக்கின்றனர். இதில் 60 மில்லியன் பெண்கள்.

இலங்கையில் ஆரம்பக்கல்வியை 650 முதல் 765 வரையான பாடசாலைகளில் 1 - 5 ஆண்டு வரை ஆரம்ப கல்வியைத் தொடர்வதற்கான பெருந்தோட்ட பாடசாலைகள் இருந்தன. இலங்கையைப் பொறுத்தவரையில் சுமார் 92 வீதமானோர் எழுத்தறிவு உள்ளவர்கள். 1920களில் 40வீதமாகவும், 2002ல் 92 வீதமாகவும் எழுத்தறிவு வளர்ச்சியடைந்துள்ளது.

இடைநிலைக் கல்வி 6 - 8 ஆண்டுவரையும், கனிஷ்ட இடைநிலை, 8 - 11 ஆண்டுவரையும், சிரேஷ்ட இடைநிலை, 12 - 13 ஆண்டுவரையும் மற்றும் பல்கலைக்கழக நிலை எனவும் குறிப்பிடப்படுகிறது.

60 - 77களில் இடைநிலை கல்வியானது ஆரம்பக்கல்வியை விட சற்று வளர்ச்சி குறைந்தே காணப்பட்டது. 56வீதமான மாணவர்கள் ஆரம்பக் கல்வியை தொடர்கின்றனர். 39.4 வீதமான மாணவர்கள் சிரேஷ்ட கல்வியிலும் 4 சத வீதமான மாணவர்கள் பல்கலைக்கழகக் கல்விக்கும் தெரிவு செய்யப்படுகின்றனர்.

மலையகத்தில் இரத்தினபுரி, பதுளை, களுத்துறை, கேகாலை பகுதிகளில் உள்ள பாடசாலைகளின் கல்வி அபிவிருத்தியில் முன்னேற்றம் காணப்படவில்லை. கண்டிப் பகுதியில் ஓரளவு முன்னேற்றம் காணப்படுகிறது. சாதாரண தரத்தில் 46வீத மாணவர்கள் சித்தியடைந்தவர்களாக இருக்கின்றனர். சாதாரண தரப்பரீட்சைக்குத் தோற்றுவோரில் கணிதம், விஞ்ஞானம், ஆங்கில பாடங்களில் மாணவர்கள் சித்திபெற முடியாத நிலையில் உயர்கல்வியை கற்பதில் தடை ஏற்படுகிறது" என்று அவர் கூறினார்.

**சமூக அபிவிருத்தி அமைச்சின் பணிப்பாளரான திரு.கே. நவரட்ணம்,**

''காலத்திற்கு காலம் அரச கொள்கைகளின் அடிப்படையிலும் பின்தங்கிய மாவட்டங்களில் வெட்டுப்புள்ளிகளின் அடிப்படையிலுமே உயர்கல்விக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவர்கள் தெரிவுகள் நடைபெறுகின்றன.

பின்தங்கிய மாவட்டங்களில் கொள்கை நடைமுறைப்படுத்தலில் ஏற்படும் முரண்பாடுகளாலும் அரசியல் தலையீடுகளாலும் துரதிருஷ்டவசமாக மலையக மாணவர்களை தெரிவுசெய்வதில் தடைகள் ஏற்படுகிறது.

உலக மட்டத்தில் 18-25 வயது வரையிலானவர்கள் உயர்கல்வி வயதெல்லையை கொண்டிருக்கின்றனர். ஐக்கிய அமெரிக்காவில் 50%மாகவும், இந்தியாவில் 5%மாகவும் இலங்கையில் 1%மாகவும் மாணவர்கள் உயர் கல்வியை கற்பதற்கான வாய்ப்புக் கிடைக்கின்றது.

1970 முதல், திறமை அடிப்படையை நீக்கி தரப்படுத்தலில் புதிய அளவுகள், மாவட்ட அடிப்படையில் காட்டப்படும் பாரபட்சம் இவைகளால் மலையக மாணவர்களின் உயர்கல்வித் தகுதியில் முன்னேற்றம் காணப்படவில்லை. பெரும்பான்மையினரில் மிகவும் பின்தங்கிய மாவட்ட மாணவர்களுக்கு கொடுக்கும் சலுகைகள் எதுவும் மலையக மக்களுக்கு வழங்கப்படுவதில் இழுபறி நிலையே காணப்படுகின்றது.

தற்போது பாடசாலைகளை தரம் பிரித்து வெட்டுப்புள்ளிகள், பெறுபேறுகள், முன்னுரிமை வழங்குவதன் அடிப்படையில் மாணவர்களை தெரிவு செய்யும் முறையை நடைமுறைப்படுத்தத் திட்டமிட்டுள்ளனர். அவை செயல்வடிவம் பெறவில்லை. அவ்வாறு குறைதீர்க்கும் நடவடிக்கை மூலமாகவேனும் மாணவர்களை தெரிவு செய்தல் முறையிலாவது மாணவர்களின் கல்வித்தரத்தை மேம்படுத்தக்கூடியதாய் இருக்கும்" என்றார் அவர்.

**பேராசிரியர் மு. சின்னத்தம்பி 'தொழில்சார் மற்றும் தொழில்நுட்ப கல்வியில் மலையகம்' எனும் பொருளில் ஆய்வை சமர்ப்பித்தார்.**

''மலையகத்தில் கணிதம், ஆங்கிலம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களில் மாணவர்கள் சித்தி பெறத் தவறுவதால் தமது கல்வியைத் தொடரும் வாய்ப்பை இழந்து விடுகின்றனர். குறிப்பிட்ட பாடங்களைப் படிப்பிக்க போதிய ஆசிரியர் பற்றாக்குறை நிலவுகின்றது.

பெருந்தோட்டப் பகுதி மாணவர்கள் தமது கல்வியை சாதாரண தரம் வரையில் மட்டும் நின்றுவிடாது தொழில்நுட்ப ரீதியான துறையில் ஆர்வம் காட்டினால் எதிர்கால சந்ததியினருக்கு நல்ல முன்னுதாரணமாக அமையும். பெரும்பான்மையானோர் குடும்ப வறுமை காரணமாக படிப்பை தொடர வாய்ப்பில்லாமல் கொழும்பு, கண்டி போன்ற நகர்ப்புறங்களுக்குச் சென்று தொழில்செய்ய வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது. தொழில்துறை சார்ந்த பயிற்சிகளை கற்பதன் மூலம் சுயதொழிலில் முன்னேற கூடுதல் வாய்ப்புக் கிடைப்பதை உணர்வதில்லை.




**56வீதமானவர்கள் ஆரம்பக் கல்வியில், 39.4 வீதமானவர்கள் சிரேஷ்ட கல்விக்கு, 4 சத வீதமானவர்களே பல்கலைக்கழகக் கல்விக்கு...**

ஆசிய அபிவிருத்தி நிறுவனம் 50 ஆயிரம் அமெரிக்க டொலர்களை மலையக கல்விக்கென ஒதுக்கியது. அரசு சார்பற்ற நிறுவனங்கள் மலையக கல்விக்கு குறிப்பிடத்தக்க பங்களிப்பினை செய்துள்ளன. ஆசிரியர்கள், கல்வி அதிகாரிகள் காத்திரமான முறையில் பங்களிப்பை செய்து வருவதாக" கூறி உரையை முடித்துக்கொண்டார்.

**'ஆசிரியர் கல்வி வாய்ப்புக்களும் மலையகமும்' என்ற தலைப்பில் ஸ்ரீபாத கல்வியியல் கல்லூரியின் பீடாதிபதியான சு. முரளீதரன் பேசுகையில்,**

''மலையகத்தின் பாடசாலைகளில் ஆரம்ப காலத்தில் வெளிமாவட்ட ஆசிரியர்கள் கற்பித்து வந்தனர். நாட்டில் ஏற்பட்ட இன முரண்பாடுகளால் வடகிழக்கைச் சேர்ந்த பட்டதாரி ஆசிரியர்கள் மலையகத்தில் தொடர்ந்து சேவைசெய்ய முடியாது சொந்த இருப்பிடங்களுக்கும், வெளிநாடுகளுக்கும் செல்லும் சூழ்நிலை தோன்றியது. இதனால் மலையகத்தில் ஆசிரியர் பற்றாக்குறை நிலவியது.

மலையகத்திலும் அரசியல் ரீதியில் மாற்றங்கள் ஏற்பட்டன. 1980களில் க.பொ.த.உயர்தரத்தில் சித்தியடைந்த 402 பேர் ஆசிரியராக சேர்த்துக் கொள்ளப்பட்டனர். சாதாரணதர பரீட்சையில் கணிதம், விஞ்ஞானம் ஆங்கிலம் ஆகிய பாடங்களில் சித்தியடைந்த மாணவர்களையும் இணைத்து மேலும் ஆயிரக்கணக்கில் ஆசிரியர் தேர்வுகள் நடைபெற்றன. ஆசிரிய தொழிலானது மலையகப் பகுதியில் படித்து வேலையற்றிருந்த இளைஞர்களுக்கு கிடைத்த வரப்பிரசாதம். இதனால் சமூக மாற்றங்களும் ஏற்பட காரணமாய் அமைந்தன. மலையகத்தில் முழுமையாக ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய முடியாவிட்டாலும் ஓரளவிலேனும் முன்னேற்றம் காணப்பட்டது.

மாணவர்களை உயர்கல்விக்கு தயார் செய்வதில் போதிய அனுபவங்களை ஆசிரியர்கள் கொண்டிராததால் சாதாரண தரத்திற்கு மேல் மாணவர்களால் உயர்கல்வியை தொடர முடியாது போனது. இதனால் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளில் இணைந்து பயிற்சிபெற நடவடிக்கை எடுக்கப்பட்டது. ஆரம்பத்தில் வடக்கு கிழக்கு பகுதிகளுக்கே சென்று கற்கவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. நாட்டில் தோன்றிய அரசியல் குழப்ப நிலைகளால் அதுவும் பெரியளவில் நன்மையை தரவில்லை. முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசா படித்து வேலையற்றிருந்த மலையக இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பை ஏற்படுத்தும் நோக்கில் ஆசிரிய நியமனங்களை வழங்கினார்.

ஆசிரிய தொழிலுக்கு மலையகத்திற்கென ஒரு ஆசிரியர் பயிற்சிக்கல்லூரியை திறந்தால் எல்லாவிதத்திலும் நன்மை பயக்கும் என கருதிய காலஞ்சென்ற அமைச்சர் சௌமியமூர்த்தி தொண்டமான் அவர்களின் முயற்சியால் பண்டாரவளையில் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டது. பின்னர் போதிய இடவசதிகள் இல்லாமையால் தலவாக்கலை தமிழ் மகாவித்தியாலயத்தில் இயங்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

சுமார் மூன்று வருடங்களாக செயற்பட்டு வந்த அக்கல்லூரியிலும் போதிய இடவசதிகள் இல்லாமையால் அங்கிருந்து கொட்டகலை எதன்சைட் தோட்டத்தில் தேயிலைத் தொழிற்சாலையாக இயங்கிய கட்டிடத்தில் செயல்பட தீர்மானிக்கப்பட்டு இன்றுவரை அங்கு பயிற்சிகள் தொடர்ந்து நடக்கின்றன. காலப்போக்கில் கொட்டகலை நகரின் அருகில் ஒரு இடத்தை தெரிவு செய்து நிரந்தரமாக மலையகத்தில் பயிற்சிக் கல்லூரி ஒன்றை நிறுவுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கற்கைநெறிகளை மேற்கொண்ட மாணவர்களின் தொகை 1992ல் 207 பேராகவும், 1995ல் 247, 1996ல் 116, 1997ல் 163, 1998ல் 159 பேராகவும் இருந்தது.

1996ல் 116ஆக குறைவதற்கு காரணம் அப்போது சாதாரண தரப்பரீட்சையில் சித்தியெய்திய மாணவர்களையும் பெருந்தோட்ட பாடசாலைகளுக்கு ஆசிரியராக இணைத்துக்கொள்ள அரசு எடுத்திருந்தமையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலையகப் பகுதிகளில் சாதாரண தரத்தில் மாணவர்கள் விஞ்ஞானம், கணிதம், ஆங்கிலப் பாடங்களில் சித்திபெற தவறிவிடுகின்றனர். இதனால் உயர் கல்வி கற்பதற்கான ஒரு தடை ஏற்படுகிறது. அந்த பாடங்களை கற்பிப்பதற்கு பட்டதாரி ஆசிரியர்களின் பற்றாக்குறையால் அங்கு வெற்றிடம் ஏற்படுகிறது. தேர்வு செய்யும் முறையிலும் பாரபட்சம் காட்டப்படுகிறது.

**'கல்வி முகாமைத்துவ நெருக்கடிகளும் மலையக தமிழ் பாடசாலைகளும்' தலைப்பில் மஹரகம தேசிய கல்வி நிறுவகத்தின் பணிப்பாளரான டீ. தனராஜ் ஆய்வுரையை நிகழ்த்தினார்.**

''மாவட்டத்தின் சில பாடசாலைகளில் மாணவர் தொகையைவிட ஆசிரியர்களின் தொகை அதிகமாக காணப்படுகிறது. கல்வியில் பின்தங்கிய மாவட்டங்களில் ஆசிரியர் பற்றாக்குறை மிகையாகவுள்ளது. களுத்துறை பகுதி பாடசாலைகளில் தமிழ் மொழி தெரியாத அதிபர்கள் இருக்கின்றனர். இது எவ்வாறு? அப்பாடசாலைக்கருகில் அவர், குடியிருப்பதால் இவ்வாறான ஏற்பாடு. இந்த விநோதமான செயற்பாடுகளெல்லாம் இந்த நாட்டில்தான். தமிழ் மொழி ஆசிரியர் பற்றாக்குறை எல்லா மாவட்டங்களிலும் நிலவுகிறது. ஆனால் தேவைக்கதிகமாக சிங்கள மொழி ஆசிரியர்கள் பெருமளவில் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள்.

மலையக பாடசாலைகளில் 5000 இற்கு மேற்பட்டோர் ஆசிரியர்களாக இருக்கின்றனர். கல்விமுறைமையானது தேசிய மட்டம், மாகாண மட்டம், வலயம், பிரதேசம், பாடசாலை என்ற ரீதியில் திட்டங்களைக் கொண்டிருக்கின்றது...'' ஆய்வுகளை சமர்ப்பித்த தோடு மலையக கல்வி முன்னேற்றத்திற்கு தனது சில தீர்வுகளையும் முன்வைத்து பேசினார்.

மற்றும், அரசியலமைப்பு பேரவையில் இந்திய வம்சாவளி தமிழர் பிரதிநிதியும், இலங்கை மனித உரிமைகள் செயலாளர் நாயகமுமான **ஆர்.எஸ். கருணாகரன்** அவர்கள் 'கல்வி முகாமைத்துவ நெருக்கடியில் மலையக தமிழ் பாடசாலைகள்' என்ற ஆய்வுரையை நிகழ்த்தினார்.

**சட்டத்தரணி பி. ராஜதுரை** தலைமையில் மலையக கல்வி ஆய்வரங்கு நிறைவுபெற்றது. நிறைவில், ஆய்வரங்கில் முன்வைக்கப்பட்ட பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான வழிவகைகள் பற்றிய எதிர்கால தீர்மானங்கள் பொன். பிரபாகரனால் முன்வைக்கப்பட்டது. அவை பின்வருமாறு:

* மலையகத்தின் கல்வி அபிவிருத்திக்கு கணித விஞ்ஞான பாடங்களை கற்பிக்க விஞ்ஞான கல்லூரி ஒன்றை நிறுவுதல்.
* மலையகத்தின் பாரம்பரிய இசைநடன கலைகளை பாதுகாக்கும் வகையிலும், இசைநடனக் கலையை கற்பிக்கவும் கல்லூரி நிறுவுதல்.
* ஊவா, சப்ரகமுவ மாகாண மலையக மக்களின் கல்வி அபிவிருத்திக்கு தனியான கல்வியியற் கல்லூரிகள் நிறுவப்பட்டு ஆசிரியப் பயிற்சி வழங்கப்பட வேண்டும்.
* விஞ்ஞான, கணித கல்வியை முன்னேற்ற ஏனைய பகுதிகளிலிருந்து தமிழ்மொழி விஞ்ஞான கணித ஆசிரியர்களை நியமித்தல்.
* மலையகமக்களின் 200 வருட பாரம்பரியத்தை வெளிப்படுத்தும் பண்பாட்டு கலையம்சங்கள் படைப்புக்கள் ஆக்கங்கள் ஆகியவற்றை கொண்ட மலையக தொல்பொருள் காப்பகம் ஒன்றை நிறுவுதல்.
* மலையக நூல்களை சிறப்பாகவும், ஏனைய நூல்களை பொதுவாகவும் கொண்ட நூலகமொன்று நிறுவப்படல் வேண்டும்.
* தேசிய கல்வி நிறுவனம், தேசிய கல்வி ஆணைக்குழு, பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு என்பவற்றுக்கு மலையக தமிழர்களும் நியமிக்கப்படுதல் வேண்டும்.
* மலையகத்தமிழ் மாணவர்களின் பட்டப்படிப்புக்காக மலையகத் தமிழ் பல்கலைக்கழகம் நிறுவ முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.
* மலையக நகர்களில் தமிழ் மகளிர் கல்லூரிகளை நிறுவுதல்.
* மலையக ஆசிரியர் மாணவர் பெற்றோரிடையே முரண்பாடுகளை களைந்திடும் வகையில் குழுக்களைத் தெரிவு செய்தல்.
* கல்வி நிர்வாக செயற்பாடுகளில் அரசியல் தலையீடுகள் ஏற்படும் வேளைகளில் அவற்றை சுமுகமாக தீர்ப்பதற்கு பக்கசார்பற்ற சுயாதீன குழுக்கள் செயல்பட குழு நியமிக்கப்படல் வேண்டும்.






ஒவ்வொரு ஆய்வின் முடிவிலும் கருத்துக்கள் ஆலோசனைகள் பெறப்பட்டு அவற்றையும் இணைத்து செயல்படுத்த தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. இறுதியாக நன்றியுரையை **அ. ஜெகன்தாசன்** நிகழ்த்தினார்.

இதன் தொடர்ச்சியாக, மறுநாள் ஹட்டன், ஸ்ரீ மாணிக்கப் பிள்ளையார் ஆலய பிரதான மண்டபத்தில் மக்கள் கலாசார விழாவும் இடம்பெற்றது. புதிய பண்பாட்டு அமைப்பும், சரிநிகர் பத்திரிகையும் இணைந்து நடாத்திய சிறுகதை, கவிதை, கட்டுரைப் போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கு சான்றிதழ்களும், பரிசிலும் வழங்கப்பட்டன.

அதேபோல் மலையக முன்னேற்றத்துக்கு தம்மை அர்ப்பணித்த பல பெரியவர்கள் அறிஞர்களுக்கு நினைவுப் பரிசு வழங்கப்பட்டும் கௌரவிக்கப்பட்டனர். மற்றும் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

மலையகத்தில் அரசியல் தலையீடு இன்றி இவ்வாறான ஒரு மாபெரும் விழாவினை நடாத்தியிருக்கும் ஏற்பாட்டாளர்களை பாராட்டவேண்டும். ஏனெனில் எதற்கெடுத்தாலும் மூக்கை நீட்டிக்கொள்ளும் அரசியல்வாதிகள் தங்களின் அரசியல் சாயலை வெளியிடுவார்களே தவிர, மலையகக் கல்வி சார்பாகவோ, அம்மக்களின் உண்மையான தேவை தொடர்பாகவோ பேசியிருக்க வாய்ப்பிருக்காது. ஊடகங்களும் அவர்களின் பொன்மொழிகளையே தூக்கிவைத்துக்கொண்டு பிரச்சாரப்படுத்துவார்கள். உண்மையாக இந்த ஆய்வரங்கின் நோக்கம் எட்டப்பட்டிருக்காது.

அவ்வளவு கவனமாக நிகழ்ச்சியினை ஒழுங்கு செய்த ஏற்பாட்டாளர்கள் ஒரிடத்தில் தவறியது ஏன் என்று தெரியவில்லை. இந்த கலாசாரவிழாவில் ஊடக அனுசரணை என்ற ஒன்று அவ்வளவு ஆர்ப்பாட்டமாகத் துருத்திக் கொண்டிருக்க வேண்டியது தேவைதானா?

அவர்களுக்கு ஒன்றை ஏற்பாட்டாளர்கள் உணர்த்தியிருக்க வேண்டும். பலவகைகளிலும் உதவி புரிந்துள்ள பலர் - பல நிறுவனங்கள் தமக்கான இடத்தில் இருந்து வாழ்த்தியிருக்கிறார்கள் என்பதை.

**- பி. வீரசிங்கம், ச. ஜீவா.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஒரு கிழத்துச் சதங்கை

— ச.சாரங்கா

கிழவன் படுத்திருந்தான். ஒரு மனித சஞ்சாரமற்ற பிரதேசத்தில் தன்னிச்சையாய் வளர்ந்திருக்கும் ஒரு விருட்சத்தின் வேரினைப் போல இசைகேடாய்க் கிடந்தான். தோல் சுருங்கி எலும்போடு படிந்திருப்பினுங் கூட இளமையில் அவனுக்கே உரியதாகி அவனைப் பெருமிதமும் கர்வமுங் கொள்ள வைத்த கம்பீரம் சற்றே எஞ்சிக் கிடந்ததாய் பட்டது. சிறுகீற்றாய் திறந்திருக்கும் கண்களில் ஒருவித மிரட்சியும் வெறிச்சோடிய தன்மையும். வாய்மூடிக் கிடந்தது. இவன் எப்படியானவன் என்று தெரிந்து விடாதிருக்கவும் இவனுள் ஏதோ இருக்கிறது என்ற ஆர்வத்தை தூண்டவும் வைக்கின்ற மௌனம் சுவாரசியமானது. பரந்த மார்பில் முன்பொருநாள் விகசித்த ஆண்மை வெண்ணிற ரோமமாய் அடர்ந்திருந்தது. பழைய மங்கல் வேட்டியை ஒருவித அலட்சியத்தோடு சுற்றியிருந்தான்.

சடுதியாய் யாரோ அடித்து எழுப்பிவிட்டது போன்ற உத்வேகத்துடன் எழுந்தான். சுற்றும் முற்றும் பார்த்தான். தேடல் விழிகளில் மட்டுமின்றி உடல் முழுதும் பரந்திருந்தது. அவன் தேடிய 'அது' அவனிலிருந்து விலகி உருண்டு சற்றே அப்பாலாய்க் கிடந்தது. எடுத்து அதில் கோர்த்திருந்த நூல்சேர்த்து மணிக்கட்டில் கட்டினான். இடது கையும் பற்களும் உதவின. மேலும் கீழுமாய்க் கை குலுக்கி வலமும் இடமுமாய்க் கை நகர்த்தி ஆட்டினான். அதிலிருந்து நாதம் எழுந்தது.

''சல்... சல்... சலங்.... சலங்க்...''

அந்த ஒலி காதிற்படர சொல்ல முடியாத ஒரு திருப்தியை உணர்ந்தது போலக் கண்களை மூடிக்கொண்டான். ஒரு கனவுலகிற்குரிய அரைமயக்க நிலை.

''டேய் முழிச்சிட்டுதா... டோய்...'' சிறுவன் ஒருவன் குரலெடுத்தபடி ஓடினான்.

''சதங்கைப் பைத்தியம்... சதங்கைப் பைத்தியம்... முழிச்சிட்டுதடா... டேய்'' சிறுவனின் குரல் காற்றோடு சேர்ந்து மறைய முன் அவனையும் மோதிற்று.

''சதங்கைப் பைத்தியம்...''

கிழவன் அவ்வார்த்தையைச் சொல்லிப் பார்த்தான். வாழ்வோட்டத்தின் கடைசிச் சுற்றில் உலகம் அவனுக்கு வழங்கிவிட்டிருந்த பட்டம் அது. அந்த ஒற்றைச் சதங்கை அவனுக்கு உயிரிலும் இனியது. அதனுள் எத்தனை ஆயிரம் உதிர்ந்த தங்கக் கனவுகளை அடைத்து வைத்திருக்கிறான் என்பதைப் புரிந்து கொள்ளாமலே சமூகம் அவனது நிலைக்கு 'சதங்கை' என்ற அடையைப் பிரிக்க முடியாது இணைத்து விட்டது.

உண்மையில் சதங்கை ஒலி அவனுடன் பேசிற்று. ஆழ்ந்த அன்புடைய ஒரு பழைய சினேகிதனைப் போல அவன் கடந்தகாலத்தை அடிக்கடி மீட்க உதவிற்று. அவனை ஒரு கனவுலகினுள் அமிழ்த்தி நிஜ உலகின் வக்கிரங்களையும் வேதனைகளையும் மறக்கச் செய்தது. இழப்புக்களை அது நினைவூட்டிய போது அவனுக்கு அழுகை வந்தது. அவ்வாறான பொழுதுகளில் சதங்கையைக் குலுக்கியபடியே அழுவான். சிலவேளைகளில் மௌனமாய்த் துன்பமுற்றுச் சோருகின்ற இவனை அது ''வெளில வாடா மச்சான்...'' என்று அழைக்கும். இறந்த காலத்தின் இனிய உறவுகளை பெருமிதமும் சந்தோஷமும் நிறைந்த அவனது வாழ்வைப் பற்றிப் பேசும். மனதிற்கினிய மனைவியைப் பற்றியும் அவள் போலவே தங்க நிறத்தில் வந்த அன்பு மகனைப் பற்றியும் செங்காரி, கறுப்பி, வெள்ளைச்சியம்மா, பொன்னி, சீதா எனப் பல்வேறு பெயரில் வாழ்ந்த அவனது பட்டிமாடுகள் பற்றியும் சொல்லும். அவனுக்குச் சிரிப்பு வரும். வாய் விட்டுச் சிரிப்பான். ''கடைசி வரைக்கும் என்னோடை இருக்கிறது நீ மட்டுந் தானேடா...'' என்று சொல்லி சதங்கையை முத்தமிடுவான். அன்பு வார்த்தைகள் பலதுஞ்சொல்லி அரற்றுவான். சில வேளை மண்ணில் புரண்டு அழுவதுண்டு. இவ்வளவுக்கும் சதங்கை ஒலித்துக் கொண்டே இருக்கும்.

''சல்... சல்... சலங்க்.... சலங்க்...''

முட்டாள் சனங்களுக்கு சதங்கை அவனுடன் பேசும் பாஷை புரிவதில்லை. அவனுக்கு அதைப்பற்றி அக்கறையும் இல்லை.

இந்த உலகந்தான் அவனைப் பைத்தியக் கோட்டிற்கு அப்பால் தள்ளிற்றா அல்லது உலகத் துன்பங்களுக்கு முகங்கொடுக்க முடியாத பலவீனத்துடன் அவனே அவ்வுலகினுள் புகுந்து கொண்டானா தெரியாது. முன்பு போல் இல்லாது அவனது நடைமுறைகள் இப்போது தனித்துத்தான் போய்விட்டன. உலகின் நியாயங்கள் அவனுக்குப் புரிபடவில்லை. அவனது நியாயங்கள் உலகிற்குப் புரியவில்லை. இடை''முரண்'' அவனை இரக்கமே இல்லாது 'பைத்தியம்' என ஒதுக்கித் தள்ளி விட்டது. அவன் தனது தனித்துவத்தை இழந்து விட்டதாய் உலகம் பேசிற்று. அவனுக்கு இது அதிசயமாய் இருக்கும். ''இந்த நாட்டில் தனித்துவத்தை இழக்காது இன்னும்... வாழ்பவர்கள் இருக்கிறார்களா?'' அவனுள் கேள்வி கிளரும். விடை இன்றியே மறுகணத்தில் விலகும்.

இப்போது அவனை அடையாளப்படுத்துவது இரண்டு விஷயங்கள் தான். ஒன்று அவனது மாறுபாடான நிலை. இரண்டாவது வயதும் ஆண்மையும் இணைந்த கலவை. முன்னையது 'பைத்தியம்' என்றும் பின்னையது 'கிழவன்' என்றும் அவனைச் சுட்டும். அவன் 'அவராக' தனக்கென பெயர் கொண்ட காலமும் ஒன்றிருந்தது உண்மை.

★ ★ ★

மட்டுவில் மண். கிராமிய வாசனை கடுமையாய் வீசும் தென்மராட்சி பெற்றெடுத்த சிறுகுழந்தை. தென்றல் சாலையோரப் பூக்களின் தலை தடவிப்போகும். பூவாசம் சுமக்கும். மணியோசை தெய்வீகஞ் சிருஷ்டிக்கும். பச்சைப் பசேலென வயல் பரந்து கிடக்கும். நெத்தலியும் கருத்திரளியும் மணலையும் வாய்காலுக்குள் துள்ளும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழகுஞ் செழிப்புமாய் அன்று அந்த ஊர் இருந்தது.

'சிவசுப்பிரமணியம்' என்பதன் சுருக்கமாய் 'சிவன்' என்பதே அவனது பெயர் எனினும் னகரம் மகரமாகவே பெரும்பாலும் உச்சரிக்கப்பட்டது.

''சிவம்... எழும்படா... தாத்தாக்கு உதவியாய் வயலுக்குப் போகவேணுமடா...'' இப்படித்தான் அவனது சிறு வயது விடியல்கள் புலர்ந்தன. அதிகாலைக் கருக்கலில் தாத்தாவோடு உற்சாகமாய் நடப்பான். தென்னந்தோட்டம் அவர்களுக்குச் சொந்தமாய் இருந்தது. சிவலைக் காளை மாட்டு வண்டிலில் தேங்காய் ஏற்றி சாவகச்சேரிச் சந்தைக்குக் கொண்டுசென்று விற்பது வழக்கம்.

கரடுமுரடான கிராமத்து வீதியில் கழுத்துச் சதங்கைகள் - வெண்டயங்கள் - குலுங்க மாடுகள் கம்பீரமாய் நடக்கும். சந்தோஷமாய்க் குலுங்கிச் சிரிக்கிற சின்னஞ்சிறுமிகள் போல அவை கிலுங்கும். வீடு வந்த பிறகு களைத்து நிற்கிற மாடுகளின் வாய் நுரை துடைப்பான். சிறிதும் அச்சமில்லை. அருவருப்பில்லை. அவற்றின் கழுத்தைக் கட்டிக் கொஞ்சுவான். அவை தலைகுனிந்து அவனது பாசவருடலை ஏற்கும். பரம்பரை விவசாயக் குடும்பம் அவனது. செய்தொழிலில் கடும் உழைப்பு கௌரவமான வாழ்வு தரும் என்பதை அவன் உணர்ந்தே இருந்ததால் சோராதிருந்தான். சோம்பலைச் சேராதிருந்தான். காலம் அவனைக் கைகொடுத்து உயர்த்திற்று.

தாத்தா 'போன' பிறகு அப்பா இல்லாத குடும்பத்துக்கு 'சிவம்' தான் பொறுப்பு. ஒரே தங்கையை நல்ல இடத்தில் 'கொடுத்து' ஒன்று இரண்டென நின்ற பசுக்களையும் கன்றுகளையும் பதினைந்து வரை ஆக்கி 'பட்டிக்காரச் சிவத்தார்' என்ற கௌரவமும் பெற்ற பிறகே 'கல்யாணத்தில்' இறங்கியதால் சற்றே பிந்திய தொடக்கந்தான் குடும்ப வாழ்வுக்கு. சுய உழைப்பில் திரண்ட சொத்துக்களோடு கௌரவம் நிறைந்த வாழ்வு ஆஜானுபாகுவான அவரது நடைக்கு ஒரு ராஜகம்பீரத்தைக் கொடுத்திருந்தது.

மகன் பிறந்த பதினாலு ஆண்டுகளின் பிறகும் கூட துடிப்பும் சுறுசுறுப்பும் நிறைந்த இளைஞனாகவே அவர் இருந்தார். அரசியலுடன் அதிகம் கலக்காத தானுண்டு தன்வேலையுண்டென்ற வாழ்வு அவருடையது. நிச்சயமாய் சுயநல வட்டத்தினுள் நிற்பவர் இல்லை. தனக்கு அப்பாலான விஷயங்களை அவர் கருதுவதில்லை அவ்வளவுதான். கிராமப்புறத்துக்கே உரிய வெகுளித்தனத்தோடு ஆனால் சமர்த்தாக மனைவி அமைந்தது அவர் அதிர்ஷ்டம். இனிய வாழ்வு.

**கரடுமுரடான கிராமத்து வீதியில் கழுத்துச் சதங்கைகள் — வெண்டயங்கள் — குலுங்க மாடுகள் கம்பீரமாய் நடக்கும். சந்தோஷமாய்க் குலுங்கிச் சிரிக்கிற சின்னஞ்சிறுமிகள் போல அவை கிலுங்கும். வீடு வந்த பிறகு களைத்து நிற்கிற மாடுகளின் வாய்நுரை துடைப்பான். சிறிதும் அச்சமில்லை. அருவருப்பில்லை.**

''இஞ்சாருங்கோப்பா...''

மனைவி தான் புருஷனைப் பெயர் சொல்லி அழைக்கும் பண்பில்லாத மண்.

''என்னப்பா...''

''கொஞ்சம் எழும்பி வாங்கோ. கற்பூரம் சுத்திப் போட வேணும். வயல் விளைச்சலோடை வரேக்கை பக்கத்து வீட்டு மாமி பார்த்துட்டுச் சொன்னா, நோய் நொடியில்லாத உழைப்பாம். குமரனுக்கு அண்ணன்காரன் போல இருக்கிறியளாம்...''

பெருமிதமும் நாணமும் சுடரும் அப்பாவித்தனமான மனைவியின் முகம். அகன்ற பெரிய விழிகளில் பாசமும் பரிவும் வழிவதைக் காணலாம். இதைத்தான் இந்தக் காலத்து இளசுகள் 'காதல்' என்கிறார்களோ என்னமோ.

அன்பு மகன் குமரனை அருகில் வைத்துக் கொண்டு இரண்டு வருஷங்களுக்கு முன் வாங்கிய வெண்ணிறக் காளை மாட்டு வண்டிலைச் செலுத்துவார். வயல், தோட்டம், அங்கு வேலை செய்யும் தொழிலாளர் சகலமும் பார்த்து 'என் உழைப்பு... என் மண்...' என்று பெருமிதப்பட்டு வீடு வருகையில் சொல்லுவார்.

''என்ரை குட்டி இளவரசனுக்குத் தானே இதெல்லாமும்...'' மகன் சிரிப்பான்.

அவனுக்கு அனுபவங்களோடு வாழ்வைக் கற்பித்தவர் அவர்.

''எப்பிடியப்பா? இத்தனை சொத்தும் சேர்ந்து எங்கடையாச்சுது''

''ம்... காலத்தோடை சேர்ந்து ஓடத் தெரிஞ்சிட்டா இதெல்லாம் விஷயமே இல்லை... நீயும் பெரிசா வளர்ந்தாப் பிறகு... உழைக்கலாம்''

''அது எப்பிடியப்பா...?'' பிள்ளை புரியாமல் தந்தை முகம் பார்க்கும்.

''ஓய்வு ஒழிச்சல் இல்லாத சுறுசுறுப்பு வேணும். எங்களை நாங்கள் வித்தியாசப்படுத்திக் காட்டுறதுக்கு கடுமையாய் உழைக்க வேணும். உக்கி அழிஞ்சாப் பிறகும் ஊரிலை நாலுசனம் நம்மைப் பற்றி நல்லாக் கதைக்கவேணும். காலத்தை வெல்லவேணும் அப்பன்''



ஒரு எறும்பு வரிசையின் ஒழுங்கை, அவற்றின் சுறுசுறுப்பை, மற்றவை போலில்லாது செஞ்சிவப்பாய்ச் சுடர்கிற செவ்வாய்க்கிரகத்தை எல்லாம் பிள்ளையும் தந்தையும் வியந்து பார்ப்பார்கள்.

அந்த ஊர் அழகியது. அந்த மண் இனியது. அந்த வாழ்வு சந்தோஷம் நிறைந்தது.

* * *

ஆறுதல் பரிசுக் கதை

NIPU அமுது

படைப்பாற்றல் போட்டி

நாடு தன்பாட்டுக்குப் பிரச்சினைகளோடு வாழ்ந்திருந்தது. ஆள்பவர்கள் மாறிக் கொண்டிருந்தாலும் ஆட்சிக்கெதிரான யுத்தம் தொடர்ந்து கொண்டே இருந்தது. அது மக்களையும் மண்ணையும் மூடிப்பரவிற்று. தென்மராட்சி மண் குண்டுச் சத்தங்களால் அதிரத் தொடங்கிற்று. எங்கும் ஒரே பரபரப்பு. யுத்தம் எங்கிருந்து வருகிறது? அது எத்திசை நோக்கி நகரப் போகிறது? எதுவும் தெரியாமலேயே தம் பெறுமதிமிக்க சொத்துக்களை வாகனங்கள் மூலம் நகர்த்தும் மக்கள் கூட்டம். இடையிடையே இடம் பெயரும்படி கோரும் சட்டபூர்வமற்ற அறிவித்தல்கள். வேரோடிக் கிளைத்து விழுதுகள் சொரிந்து காலகாலமாய் வாழ்ந்திருந்த மண்.

அதனை விட்டு எழும்பி இலக்கின்றி ஓடுவது எப்படி? ஆனால் யுத்தம் மக்களின் நிலையை அக்கறைப்படுத்தாது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழகிய மண்ணில் தன் கோரத்தடங்களைப் பதிந்து நடந்தது.

ஷெல்கள் தொடர்ச்சியாய் ஏவப்பட்டன. மக்கள் கூட்டம் திக்கற்றுக் கதறி ஓடிற்று. கோயில்களும் பாதுகாப்பில்லை. ஷெல்கள் எங்கும் விழுந்து வெடிக்கும். சகலமும் தரை மட்டமாகின. மண்தொட்டுக் கண்ணில் ஒற்றி விதைப்புச் செய்கின்ற பூமியை 'மல்ரிபெரல்கள்' தின்னத் தொடங்கின. மக்களின் பேச்செல்லாம் சண்டை பற்றியே. வேறில்லை.

''உது அவங்கடை ஷெல் தான்...''

''ச்சீச்சீ... இவங்கடை... விசில் பண்ணுற விதத்திலை பிடிக்கலாம்...''

ஏதென்றாலென்ன சொந்தமண் சிதறி அழிவது உண்மை. தவறி விட்டோமா? இருப்பதை விற்றுத் திரட்டி வேறுநாடு போனவர்கள் புத்திசாலிகளா? நாட்டின் நிலையை உணர்ந்திருந்தும் 'தப்பியோடும்' புத்தியின்றி இங்கிருந்து எங்கள் தலைகளில் நாங்களே மண்அள்ளிக் கொட்டிவிட்டோமா? பதிலற்ற கேள்விகள் பெருகப் பெருக அனைவர் முகங்களிலும் இருள் மண்டிக் கிடந்தது.

ஒவ்வொரு ஊராய்ப் 'பிரச்சினை' விழுங்கிற்று. சிவத்தார் வாசலையும் தட்டிற்று.

''பயத்தை வயலுக்காக பத்துப்பன்னிரெண்டு பட்டிமாடு செத்துக் கிடக்காம்''

''வயிற்றைப் பிளந்து போய்... காயங்களோடை கொஞ்சம் தப்பி ஓடிட்டுதாம்''

''இவர்... சிவத்தாரின்ரை 'பட்டி' தானே...''

காதினுள் தழல் கொட்டினார்கள். மனம் வெந்தது. என்ன செய்ய முடியும்?

''எழும்பத் தான் வேணுமே...''

சிவத்தாரின் குரல் தீனமாய் ஒலித்தது.

''பின்னை என்ன! இந்தாட்டம் சண்டை வலுக்கத் தான் போகுது...'' யாரோ சொன்னார்கள்.

வீட்டிற்கு அருகாய் மிக அருகாய் ஷெல்கள் விழுந்து வெடிக்கத்தொடங்கின. கைக்குக் கிடைத்தவற்றோடு குஞ்சு குருமன்களும் இளசு பழசுகளும் நடந்தன. உயிர்தப் பலுக்கான நகர்வு. இலக்கற்ற பயணம். பாகுபாடில்லை. போவதெனத் தீர்மானித்தாயிற்று. வண்டிற் காளைகளை அவிழ்த்துவிட்டார். அவரருகில் வந்து தலை ஆட்டின. நெற்றி வருடினார். கழுத்துச் சதங்கைகள் குலுங்கின. இதயம் பிளக்கும் வேதனை. மாட்டுத்தொட்டிக்குள் இழுத்து வைக்கோல் பரப்பினார். நீர் அள்ளித் தொட்டி நிறைத்தார். ஒவ்வொரு தடவையும் ஷெல் கூவ விழுந்து படுத்து.. எழும்பி... வெறுத்துப்போயிற்று.

''சாவதற்காகவே வாழ்க்கை வாழ்வதற்கல்ல'' என்று இந்த மண்ணின் மக்களை சபித்துவிட்ட கொடிய தேவதை எது?

காளை மாட்டின் கழுத்து அணைத்து ஒரு சதங்கையைக் கழற்றினார்.

''தில்லையம்பலப் பிள்ளையாரே! திரும்பி வந்து இந்தச் சதங்கையைக் கட்டுற நாளிலை உனக்குப் பொங்கல் வைக்கிறனப்பா''

கால்நடைகளுக்குப் பிரத்தியேகமான கடவுளுக்கு நேர்ந்து விட்ட திருப்தியோடு புறப்பட்டார்கள். எதையென்று எடுக்க? எதைத்தான் விட...?

''நகையளை எடுத்திட்டியேயப்பா... போற இடத்துல வித்துச் சுட்டுத் தன்னும் சீவிக்கலாம்...'' ராசர் தான் வேலியால் எட்டிச் சொன்னார். 'வித்துச்சுட்டுச் சீவிக்கிற நிலை அவருக்கு வந்திருக்கிறதா? கடுமையான உழைப்பின் பிறகு ஓயும் வயதில் அனைத்தையும் பிடுங்கிக் கொண்டு விட்ட யுத்தம். தளர்ந்த மனைவியோடு நடந்தார்.

''என்னப்பா...'' மனிசிதான்.

''ஒண்டுமில்லை...''

சிலவற்றைச் சொல்லாதிருப்பது சிறப்பு.

கைப்பைக்குள் சதங்கை மெதுவாய்க் குலுங்கிற்று. தொலைத்து விட்ட வசந்தங்களுக்கு இரங்கற்பா சொல்வது போல ஒரு சோர்வு நிறைந்து ஒலித்தது.

''இருந்து பாருங்கோ 'எங்கடை பொடியள்' விடாங்கள்...''

கணேசர் சொல்லிக் கொண்டே நடந்தார். அவருக்கு அரசியலில் வலுத்த ஈடுபாடு. தன்னிரு 'பொடிச்சி'களையும் கனடாவுக்கும் ஒரே ஒரு பெடியனை ஹொலண்டுக்கும் அனுப்பி விட்ட வருமுன் காப்போன்.

''அப்ப... வந்திடுவங்கள் எண்ணுறியளே?'' ஆர்வமாய்க் கேட்ட பொன்னுத்துரையருக்கு 95இல வன்னிக்குள்ள போன



**ஊரெல்லாம் ஒளிவிரித்திருந்த ஒரு சித்திரா பௌர்ணமி அன்று படிக்கப்போன மகன் திரும்பவில்லை. வெறும் பதினேழில் அவன் தானாக முடிவுசெய்த வாழ்வின் பாதை குடும்பத்தையே உலுக்கிற்று.**

மகளையும் மருமகனையும் பேரப்பிள்ளைகளையும் பார்க்கும் தவிப்பு.

''வராமலுக்கு என்னையா? உங்கை தனங்கிளப்பு. மறவன்புலவு, கச்சாய் எல்லாம் நிக்கிறாங்களாம். எனக்குக் கண்டவை சொன்னவை...''

குரல் தழைத்துக் கணேசர் சொல்ல இவருக்கள் ஒரு படபடப்புச் சடுதியாய் முகங் காட்டி மறைந்தது.

''குமரன் - அவரது குட்டி இளவரசனும்... வருவானோ...?''

''மகன் இருந்திருந்தால்...'' மனம் ஏங்கியதை மௌனத்தால் மறைத்தபடி நடந்தார். கால்கள் சோரச் சோர நடந்தார்கள். ஏனோ பழைய நண்பன் முஸ்தபாவின் நினைப்பு மேல் மனதிலேறிற்று. அவனும் அவனைச் சேர்ந்தவர்களுங்கூட ஒருநாள் இப்படித்தான் அனைத்தையும் 'துறந்து' நடந்தார்கள்.

''எல்லா வினையுஞ் சேர்ந்து இப்ப எங்களை வருத்துது போல...'' சற்றே வாய்விட்டு முணுமுணுத்து விட்டார் போல.

ஊரெல்லாம் ஒளிவிரித்திருந்த ஒரு சித்திராபௌர்ணமிஅன்று படிக்கப்போன மகன் திரும்பவில்லை. வெறும் பதினேழில் அவன் தானாக முடிவுசெய்த வாழ்வின் பாதை குடும்பத்தையே உலுக்கிற்று. கண்ணீருஞ் சோறுமாய் வாழ்க்கை கரைந்தது. மனித உரிமைகள் மறுக்கப்படும் சந்தர்ப்பங்கள் அவனை அத்தகைய முடிவிற்கு நெட்டித் தள்ளிற்றோ? அல்லது பெற்ற தாயினும் பிறந்த பொன்னாட்டை மதிக்கச் சொல்லும் 'உணர்ச்சி வசப்பட்ட' பேச்சில் பிரிந்தானோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டில் குறை ஏதுமில்லை. படிப்பிலும் சுட்டிதான். அவ்வாறாயின்... ஏன் அது நிகழ்ந்தது?

ஏன் சில குடும்பங்களின் தலைகளில் மட்டும் 'வரலாறு எழுதும்' கடமைகள் சுமத்தப்படுகின்றன? மூன்று - நான்கு நாட்களின் நிகழ்வுகள் முப்பது வருஷ முதிர்ச்சிக்குரிய தளர்வைத் தந்திருந்தது.

மனிசியும் அழுதபடிதான் நடந்தாள்.

அவள் எதற்காக அழுகிறாள் என்பதை தீர்மானிக்க முடியாதிருந்தது இவருக்கு. யுத்த தாண்டவத்தைச் சகிக்க முடியாது வெளியேறிய பல்லாயிரக்கணக்கான மக்களை வடமராட்சியும் யாழ்ப்பாணமும் ஏற்றுக் கொண்டன.

* * *

இடம்பெயர்ந்து எட்டு மாதங்களின் பின்... மீண்டும் 'சிவத்தார்' வாழ்வில் இடி இடித்தது. மகன் பற்றிய செய்தியாக. ''ஒருவேளை வருவானோ'' என்ற காத்திருப்பை, வாழ்வில் எஞ்சிக் கிடந்த ஒரே ஒரு நம்பிக்கை நுனியை அறுத்து எறிந்தபடி நாளேட்டின் ஒரு மூலையில் ஒதுங்கிய செய்தியாய் அது கிடந்தது.

*'தமிழ் நிலவன்' என்கின்ற சிவசுப்பிரமணியம் சூரியகுமாரன் முல்லைத்தீவுக் கடற்பரப்பில்...*

தொடர்ந்து வாசிக்க முடியாது கண்கள் குளமாயின. மனம் நூறாய் ஆயிரமாய் வெடித்துச் சிதறிற்று.

கொடிய நரகம். சொந்த மகனின் சாவுக்கு வாய்விட்டழ முடியாத துன்பம். வியர்வைத் துளி குழைத்துக் கட்டிய வீடு சிதறியபோது... பட்டி மாடுகளை இழந்தபோது... தோட்டம், வயல், காணிகள் தொலைத்த போது... கூடத் தாங்கிக் கொண்டவருக்கு கடைசி நம்பிக்கையாய் இருந்த மகனும் 'போய்' விட்ட பிறகு வாழ்வில் என்ன இருக்கிறது?

பழைய வசந்த வாழ்வின் சாட்சியாய் இப்போதும் அவர் வசம் கிடக்கின்ற ஒற்றைச் சதங்கை...

அதை எடுத்துக் குலுக்கினார். சதங்கை அவருடன் பேசிற்று. அதனுடன் அவரும் பேசத் தொடங்கினார். அந்த வேளையிற் தான் இவரது தனிமனித உலகிற்கும் உலகிற்கும் இடையிலான சிவப்புக் கோடு கிழிக்கப்பட்டது.

உண்மையில் பைத்திய உலகம் சௌகரியமானது. இந்த நாட்டில் அங்குதான் சுயசிந்தனைகளைப் பேசமுடிகிறது. அடக்கு முறைகளுக்கு எதிராக உரக்கப் பேச முடிகின்றது. திறந்த மனத்தோடு எதையும் விமர்சிக்க முடிகிறது. அந்த சதங்கையைப் பிரிய அவருக்கு மனமில்லை. கையில் கோர்த்து அந்தச் சதங்கையைக் கட்டினார். கையை ஆட்டு கையில் சதங்கை குலுங்கிச் சிரித்தது.

அவர் சிரித்தார். உலகம் அவரைப் பார்த்துச் சிரிக்கத் தொடங்கிற்று.

* * *

தான் காலத்தை வென்றுவிட்டதாய்த் தோன்றிற்று கிழவனுக்கு. சனங்கள் சதங்கைப் பைத்தியத்தை' இனி இலகுவில் மறந்துவிடார்கள். இரக்கத்துடனோ அல்லது பரிகாசமாகவோ அவனை நினைவில் வைத்திருக்கக் கூடும்.

மனிசியும் 'மகன்' வழி போன பிறகு அவனைக் கவனிக்க எவருமில்லை. சதங்கை குலுக்கிக் கைகள் செயலற்றுச் சோரும்போது கண்களை மூடிக் கிடப்பான். கனவுகள் வரும். அன்பு மகனுக்குப் பிண ஊர்வலம் நடத்துவதாய்... மக்கள் கூட்டம் அவனைக் கேலிப்பதாய்... சிலர் அவனது கழுத்தை முறித்துப் போடுவதாய்...

யார்? இத்தனை சாபக்கேட்டுக்கும் பொறுப்பானவர்கள் யார்? என்றோ படித்து மனதில் பதிந்துபோன புகழ்பெற்ற ஈழத்துக் கவிஞரின் வரிகளை அவன் வாய் அரற்றும். மகனின் நினைப்பெழும்.

*''யார் செய்த வேளாண்மை? யார் வெட்டுவார்கள்?*

*யார் நட்ட பனைவடலி? யார் தறிக்கின்றார்கள்?*

*யார் வயலை உழுகிறவன்? யார் விளைச்சல் பெறுவோன்?*

*யார் சேனை நடத்துபவன்? யார் போரில் மடிவோன்?''*

அவனுக்குள் காட்டாறாய் ஒரு கேள்விப் பிரவாகம்.

அவனது வாழ்வின் சிதைவுக்குக் காரணகர்த்தாக்கள் எவர்?

இத்தகைய உளச்சிதைவுகளோடு குருதியும் பிணமும் கசிகின்ற வாழ்வு இன்னும் எத்தனை வருஷங்களுக்கு நீளும்?

உயிர்ப்பயமற்ற... அச்சமற்ற வாழ்வு எப்போது எமக்குரியதாகும்?

கேள்விகள் கேள்விகள் கேள்விகள்... கேட்கும் உரிமை இப்போது அவனுக்குண்டு. பதில்களுக்கான உரிமை எவருக்கும் இங்கு வழங்கப்படவில்லை.

கிழவன் உரக்கக் கேட்பினும் அவனுக்குப் பதிலளிக்கும் துணிச்சலற்றுத் தம் பார்வை நிலந்துளைக்க மக்கள் குறுகி நடந்தார்கள்.

கேள்விகளை அரற்றும் வாய்வழியே எச்சில் வழிந்தது. சதங்கை குலுக்கும் கை செயலற்று ஓயத் தொடங்கியது.

அதிர்ஷ்டவசமாய் அன்றைய நாளில் சதங்கை நிசப்தமாயிற்று. இனி ஒரு போதும் ஒலிக்காதது போல.

சாவெனும் சந்தோஷம் கிழவனின் முகத்திற்கு புதுச்சோபையை அளித்துக் கொண்டிருந்தது. ●



பெர்ட்ராண்ட் ரஸ்ஸல்
– இஸ்ரேல் பற்றி
ஜனவரி 31, 1970இல்
எழுதியது...

மத்திய கிழக்கில் நடந்து வரும் அறிவிக்கப்படாத போரின் கடைசிப்பகுதி, மிகவும் மோசமான தவறின் அடிப்படையில் நடந்து வருகிறது. எகிப்திய பிரதேசங்களின் உள்ளே நடந்துவரும் ஆழமான குண்டுவீச்சுகளால் சாதாரணமக்கள் சரணடைந்துவிடமாட்டார்கள். மேலாக, எதிர்க்கும் வைராக்கியம்தான் உறுதிப்படும். இதுதான் எல்லா வான் வழி குண்டுவீச்சுக்களுக்கும் கிடைத்த பாடம்.

பல வருடங்களாக வியட்நாமிய மக்கள் அமெரிக்காவின் குண்டுவீச்சுக்களை தாங்கிக் கொண்டாலும், சரணடையாமல், மேலும் அதிகமான எதிரி விமானங்களைத்தான் சுட்டு வீழ்த்தினார்கள்.

1940இல் என் நாட்டு மக்கள் ஹிட்லரின் குண்டுவீச்சுக்களை, ஒற்றுமையோடும் வைராக்கியத்தோடும் எதிர்கொண்டார்கள்.

இந்த காரணத்தினாலேயே, இஸ்ரேலின் தாக்குதல்கள் அதன் முக்கிய நோக்கத்தை (சரணடைந்து விடுவார்கள் என்ற எதிர்பார்ப்பை) தோற்கடிக்கும்.

ஆனால் அதே நேரத்தில், இந்தத் தாக்குதல்களை உலகம் முழுவதும் தீவிரமாகக் கண்டிக்க வேண்டும்.

மத்திய கிழக்குச் சிக்கல் வளர்ந்த முறைகள் ஆபத்தானவை. அவை நமக்கெல்லாம் ஒரு பாடம்.

சென்ற 20 வருடங்களில் இஸ்ரேல் தன்னை போர்த் தளவாடங்களால் விஸ்தரித்துக் கொண்டு வந்துள்ளது. ஒவ்வொரு முறையும் தன்னை விஸ்தரிக்கும்போது, அது ''பகுத்தறிவுக்கு'' அழைப்பு விடுத்தும், ''பேச்சுவார்த்தைகள்'' மூலம் தீர்க்கலாம் என்றும் கூறி வந்துள்ளது. இது ஏகாதிபத்திய சக்தியின் வழக்கமான பாணி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**இஸ்ரேல் செய்திருக்கும் ஆக்கிரமிப்பும் தாக்குதலும் கண்டிக்கப்பட வேண்டும். எந்த ஒரு நாடும் இன்னொரு நாட்டை ஆக்கிரமிக்க எந்தவித உரிமையும் இல்லை என்பதால் மட்டுமல்ல, ஒவ்வொரு ஆக்கிரமிப்பும், எந்த அளவு ஆக்கிரமிப்பை உலகம் பொறுத்துக் கொள்ளும் என்று ஆழம் பார்க்கும் சோதனை முயற்சி என்பதால்.**




ஏற்கனவே போர் வலிமையால் அபகரித்ததை உறுதிப்படுத்திக்கொள்ள பேச்சுவார்த்தையை நாடுவது. ஒவ்வொரு புதிய ஆக்கிரமிப்பும், புதிய பேச்சுவார்த்தைகளுக்கு அடித்தளமாக, போர் வலிமைமீது உட்கார்ந்து கொண்டு, 'வாருங்கள் பேச்சுவார்த்தை நடத்தலாம்' என்று அழைப்பு விடுப்பது... இத்தகைய உத்திகளே இஸ்ரேல் வாடிக்கையாக இருக்கிறது.

இப்படிப்பட்ட அழைப்பானது, இதுவரை நடந்த ஆக்கிரமிப்புகளின் அநீதியை உதாசீனம் செய்து வந்திருக்கிறது.

இஸ்ரேல் செய்திருக்கும் ஆக்கிரமிப்பும் தாக்குதலும் கண்டிக்கப்பட வேண்டும்.

எந்த ஒரு நாடும் இன்னொரு நாட்டை ஆக்கிரமிக்க எந்த விதஉரிமையும் இல்லை என்பதால் மட்டுமல்ல; ஒவ்வொரு ஆக்கிரமிப்பும், எந்த அளவு ஆக்கிரமிப்பை உலகம் பொறுத்துக் கொள்ளும் என்று ஆழம் பார்க்கும் சோதனை முயற்சி என்பதால்.

சமீபத்தில் வோஷிங்டன் பத்திரிகையாளரான ஐ. எ.ஃப். ஸ்டோன் அவர்கள் பாலஸ்தீனத்திலிருந்து துரத்தியடிக்கப்பட்ட நூற்றாயிரக்கணக்கான அகதிகளை ''உலக யூத மக்களின் கழுத்தில் தொங்கும் பாறாங்கல்'' என்று குறிப்பிட்டார்.

பெரும்பாலான அகதிகள் இன்று 30 வருடங்களாக சொந்த இடம் மறந்து, தற்காலிக இடங்களில் ஆபத்தான வாழ்க்கையை வாழ்ந்து வந்து கொண்டிருக்கிறார்கள்.

தங்களது நாடு இன்னொரு மக்களுக்குச் சொந்த நாடாக, தொடர்பே இல்லாமல் மற்றொரு நாட்டால் தாரை வார்க்கப்பட்டதுதான் பாலஸ்தீனர்களின் சோகக்கதை.

இதன் விளைவு பல லட்சக்கணக்கான மக்கள் நிரந்தரமாக வீடற்றவர்களாக ஆக்கப்பட்டுள்ளார்கள்.

ஒவ்வொரு புதிய ஆக்கிரமிப்பும் இந்த அகதிகளின் எண்ணிக்கையை அதிகரிக்கிறது.

இன்னும் எவ்வளவு நாள் இப்படிப்பட்ட கொடூரத்தை உலகம் பார்த்துக் கொண்டிருக்கப் போகிறது?

அகதிகள் தங்களது தாய் நாட்டுக்குத் திரும்பும் உரிமை நிச்சயமாக அவர்களுக்கு இருக்கிறது என்பது தெள்ளத் தெளிவான விஷயம். இவர்களுக்கு அப்படிப்பட்ட உரிமையை மறுப்பதுதான் இந்த தொடரும் பிரச்சினையின் ஊற்றுக் கண்.

உலகத்தின் எந்த மக்களும் தங்களது நாட்டிலிருந்து ஒட்டுமொத்தமாக வெளியேற்றப்படுவதை ஒப்புக்கொள்ள மாட்டார்கள். மற்றவர்கள் யாரும் ஏற்றுக்கொள்ளாத ஒரு தண்டனையை பாலஸ்தீன மக்கள் மட்டும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கோருவது எப்படி நியாயமாக இருக்க முடியும்?

மத்தியகிழக்கில் ஒரு உண்மையான தீர்வு வர வேண்டுமென்றால், வெளியேற்றப்பட்ட அகதிகள் தங்கள் இடங்களுக்குச் செல்வதற்கு நிரந்தர அனுமதி வேண்டும் என்பது தான் அதன் அடிப்படையாக இருக்க வேண்டும்.

நாஜிகளால் யூதர்கள் துன்புறுத்தப்பட்டார்கள் என்பதால் நாம் இஸ்ரேலுக்கு பரிந்து பேச வேண்டும் என்று நம்மிடம் அடிக்கடி சொல்லி வருகிறார்கள்.

இந்த காரணத்தால் இன்னும் ஒரு துன்புறுத்தலை தொடர்ந்து செய்ய வேண்டும் என்று ஒரு காரணத்தையும் இந்த அறிவுரையில் என்னால் பார்க்க முடியவில்லை. இப்போது இஸ்ரேல் செய்வது நிச்சயம் மன்னிக்க முடியாதது.




கடந்த காலத்தின் கொடுமைகளின் காரணமாக நிகழ்காலத்தின் கொடுமைகளை நியாயப்படுத்த முடியாது. இது குரூரமான போலித்தனம்.

இஸ்ரேலின் நடத்தையால் பெரும் எண்ணிக்கையில் மக்கள் அகதிகளாக்கப்பட்டது மட்டுமல்ல,

அராபிய நாடுகளில் ராணுவ ஆட்சி தொடர்வதற்கான காரணமாய் இது இருப்பது மட்டுமல்ல,

காலனியாதிக்கத்திலிருந்து விடுதலை பெற்ற நாடுகள் வளர்ச்சித் திட்டங்களுக்குச் செலவிடாமல், வறுமை ஒழிப்புக்குச் செலவிடாமல், ராணுவக் கட்டமைப்புக்குச் செலவிடச் சபிக்கப்பட்டு விடுகிறார்கள்.

மத்திய கிழக்குப் பகுதியில் ஏதும் உடன்படிக்கை ஏற்பட்டால், அதன் அடிப்படைகள் எதிர்காலப் பிரச்சினைக்கும் வழி வகுக்காமல் இருக்கவேண்டும் என்பது அந்த உடன்படிக்கையின் நோக்கமாய் இருக்க வேண்டும்.

ஜுன் 1967இல் இஸ்ரேல் ஆக்கிரமித்த எல்லாப் பகுதிகளிலிருந்தும் வெளியேற வேண்டும் என்பது முதல் படியாய் இருக்க வேண்டும்.

நெடுங்காலமாய் துயருற்ற மத்திய கிழக்குப் பகுதி மக்களுக்கு நீதி கிடைக்க உலக முழுவதிலும் இயக்கம் ஏற்பட வேண்டியது அவசியம். ●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதுவன் கந்த சரதியல்




## வரலாறு செய்த குற்றம் (9)

எம்.எச்.பதி-யுஸ்-ஸமான்

அந்தத் துண்டு காகிதம் கையில் கிடைத்தபோது பொலிஸார் அவமானத்தால் கூனிக்குறுகிப் போய் விட்டார்கள். பயம் அவர்களின் வயிற்றில் புளியைக் கரைத்தது. மேலதிகாரிக்கு என்ன பதில் சொல்வது என்பதுதான் எல்லோர் மனதையும் குடைந்தெடுத்தது.

சரதியல் வரவில்லை என்று சொல்லி மழுப்பி விடலாம். ஆனால் அடுத்து என்ன நடக்கும்? அது எங்கு போய் முடியும் என்ற பயம் திறந்த வாயை மூடச் செய்துவிட்டது.

வேறு வழி இல்லை சொல்லித்தான் தீர வேண்டும் சொல்லிவிட்டார்கள். அவர்கள் சொன்னதைக் கேட்ட பொலிஸ் பொறுப்பதிகாரி சீறிப்பாய்ந்தார். சீறிப் பாய்ந்தவர் கேகாலை உதவி அரசாங்க அதிபருக்கு விஷயத்தை அறிவித்தார்.

அவருக்கு உடம்பெல்லாம் கொதித்தது. என்ன வார்த்தைகள் பாவிக்க முடியுமோ அத்தனையும் பாவித்தார்.

இப்படி மேலிடத்திலிருந்து அடிமட்டம் வரை அன்று திட்டு வாங்குவதிலும் கொடுப்பதிலுமே கழிந்தது.

இது அக்கால புகழ் பெற்ற தேசிய பத்திரிகையான 'லக்விகிரண' பத்திரிகையிலும் பிரசுரமாகியிருந்ததால் சந்தி சிரித்தது. பொலிஸாருக்கு பெரும் தலைகுனிவுதான்.

வேறு ஓரிரு பத்திரிகைகள் ஆரம்பத்திலிருந்தே சரதியலை ஒரு கிளர்ச்சிக்காரனாக கொள்ளைக் காரனாகப் பார்த்து வந்ததால் அவை அவனது செய்திகளை இருட்டடிப்புச் செய்தன.

ஆனால் சரதியல் இதுபற்றி அலட்டிக் கொள்ளவில்லை. அவன் உதுவன் கந்தைக்கு வரவில்லை. அங்கு பொலிஸார் அவனை வலை போட்டு தேடிக் கொண்டிருப்பார்கள் என்று அவனுக்குத் தெரியும். அதனால் அவன் கடுகண்ணாவைப் பகுதியில் நடமாடிக் கொண்டிருந்தான். அங்கு யாரும் அடையாளம் கண்டு கொள்ள மாட்டார்கள் என்று எதிர்பார்த்தான்.

ஆனால் அங்கும் அவனுக்கு வேலை காத்திருந்தது.

வேறு பிரதேசங்களிலிருந்து வந்த வர்த்தகர்கள் கடுகண்ணாவையில் கூடும் வாரச் சந்தைக்கு வந்திருந்தனர். தாங்கள் கொண்டு வந்த கருவாடு, துணிமணிகள், உப்பு போன்றவற்றை கொள்ளை விலைக்கு கொடுத்து கிராமவாசிகளிடமிருந்து கராம்பு, ஏலம், சாதிக்காய், கொக்கோ, கோப்பி போன்ற பொருட்களை அடிமாட்டு விலைக்கு வாங்கிக் கொண்டிருந்தனர். அப்போது வியாபாரம் பண்டமாற்று முறையில்தான் நடந்து கொண்டிருந்தது.

தூரத்திலிருந்து இந்த அநியாய வியாபாரத்தை அவதானித்துக் கொண்டிருந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரதியல் இன்னும் பதுங்கிக் கொண்டிருக்க விரும்பவில்லை. பொறுமையை இழந்து விட்டான். தன்னை யார் என்று அடையாளம் கண்டு கொண்டால் தலைக்கே பெரும் ஆபத்தாக வந்து முடியப் போகின்றதே என்றுகூட அவன் யோசிக்க தயாரில்லை.

இந்த அறியாச் சனங்களிடம் ஏன் இப்படி அப்பிடிப் பறிக்கின்றீர்கள் நியாயமாக நடந்து கொள்ளக் கூடாதா என்று அவன் அவர்களிடம் கேட்டபோது நீ யாரடா? நீ உன் வேலையைப் பார்த்துக் கொண்டு போ என்று அவர்களுக்குத் தலைவன் போலிருந்த ஒருவன் கூறினான்.

சரதியலின் கோபம் எல்லை கடந்து விட்டது. விட்டான் ஒரு உதை. அவர்களின் கருவாட்டுக்கூடை பறந்தது.
அடுத்த உதை உப்புக்கூடை சிதறியது.

ஆனால் அந்த வியாபாரிகள் சரதியலின் மீது பாய்ந்து மல்லுக் கட்டினார்கள். ஒரே நேரத்தில் ஐந்தாறு பேரை சமாளிப்பது சரதியலுக்கு கஷ்டமாக இருந்தது. அதேநேரம் துப்பாக்கி கைக்கு வந்து விட்டது.

**"அசையாதே!" என்ற சத்தத்தோடு அங்கு வந்து குதித்த சரதியல் அவருடைய கழுத்துக்குப் பின்னால் துப்பாக்கியால் அழுத்தினான். அவர் அசையவே இல்லை. அச்சத்தால் வெலவெலத்துப் போனார்.**

அவர்களை விரட்டுவதற்காக குறி பார்க்காமலே சுட்டான். அதனையும் மீறி குண்டு ஒருவரின் காலை பதம் பார்த்தது. சுருண்டு விழ, இரத்தம் பீறிட்டது.

ஏனையவர்கள் அங்கிருந்து தப்பித்தேன் பிழைத்தேன் என்று ஓடினார்கள். ஆனால் அவர்கள் காரியத்தோடுதான். நேரே உதவி அரசாங்க அதிபரிடம்தான் போய் நின்றார்கள். மூச்சிரைக்க இரைக்க எவனோ ஒருவன் வந்து தங்களை தாக்கி, பொருட்களை சேதப்படுத்தியதாகவும் தமது சகபாடி ஒருவரை சுட்டுவிட்டதாகவும் கூறினர்.

உதவி அரசாங்க அதிபர் ரொபட் சோண்டர்ஸுக்கு ஒரு விநாடி கூட தேவைப்படவில்லை அது சரதியல்தான் என்று யூகிப்பதற்கு. உடனடியாக அங்கிருந்த பொது மக்களிடம் வந்திருப்பவன் சரதியல்தான் அவனை உடனடியாக பிடித்து என்னிடம் கொண்டு வாருங்கள் தவறினால் ஊருக்கே தண்டனை தருவேன் என்று இரைந்தார்.

உடனடியாக சில பொலிஸாரை அந்த இடத்திற்கு வந்திருந்த வியாபாரிகளுடன் அனுப்பி வைத்தார்.

அதற்கிடையில் சரதியல் அந்த வியாபாரிகளிடமிருந்து பறித்த பணத்தையும் அவர்கள் கொண்டு வந்திருந்த பொருட்களையும் சந்தைக்கு வந்திருந்தவர்களுக்குப் பங்கிட்டுக் கொடுத்துவிட்டு, இடத்தைக் காலி பண்ணிவிட்டான். யாரும் பயன்படுத்தாத காட்டுப் பாதை வழியாக.

சந்தைக்கு வந்து சேர்ந்த பொலிஸார் சரதியலைத் தேடினார்கள். அவனைக் காணவில்லை. ஆத்திரத்தில் அவனிடமிருந்து துணிமணிகளை பெற்று கையில் வைத்துக் கொண்டிருந்தவர்களை அடித்தார்கள். எவரும் சரதியல் சென்ற திசையை காண்பிக்க முன்வரவில்லை. பொலிஸார் வந்த வழியைக் காண்பித்து இந்த வழியால்தான் ஓடினான் என்று சொல்லி வைத்தாற் போல எல்லோருமே கூறினார்கள்.
வெறுங்கையோடு அடிப்பதை நிறுத்திவிட்டு வேகமாக திரும்பினார்கள் அந்த பொலிஸார்.

வெறுங்கையோடு திரும்பிய பொலிஸாரைக் கண்டதும் அவர்கள் மீது பாய்ந்தார் உதவி அரசாங்க அதிபர்.


கேவலம் கைக்கு கிட்ட வந்த ஒரு பொடிப்பயலை பிடிக்க முடியவில்லையா உங்களால் என்று திட்டினார்.

பொலிஸார் பேசவில்லை. மௌனமாக வாங்கிக் கட்டிக் கொண்டார்கள்.

இந்த சம்பவம் நடந்து ஓரிரு தினங்கள் கழிந்திருக்கும். அன்று ஞாயிற்றுக்கிழமை. உதவி அரசாங்க அதிபர் முன் விறாந்தையில் சாய்வு நாற்காலியில் அமர்ந்து பத்திரிகை படித்துக் கொண்டிருந்தார்.

''அசையாதே!'' என்ற சத்தத்தோடு அங்கு வந்து குதித்த சரதியல் அவருடைய கழுத்துக்குப் பின்னால் துப்பாக்கியால் அழுத்தினான். அவர் அசையவே இல்லை. அச்சத்தால் வெலவெலத்துப் போனார். அவர் முரண்டு பிடிக்க நினைக்கவில்லை. அதனால் எதுவும் ஆகப்போவதில்லையென்ற தீர்மானத்திற்கு வர தாமதிக்கவில்லை.

அரசாங்க அதிபரை நிறுத்தி அருகிலுள்ள ஒரு தூணில் இறுக்கிக் கட்டினான்.



அவருடைய சட்டையை கிழித்து அவருடைய வாயில் திணித்தான்.

விறாந்தையுடன் ஒட்டியிருந்த அறையில் மேசை லாச்சியை திறந்து கைத்துப்பாக்கியையும் ரவைகளையும் எடுத்துக் கொண்டான்.
உன்னை நான் கொல்ல மாட்டேன். என்னை உயிரோடோ பிணமாகவோ பிடிக்கச் சொல்லி உத்தரவிட்டீர்களாமே?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியுமானால் இதோ உங்கள் எதிரில் வந்து விட்டேன், நீங்களே அந்த நல்ல காரியத்தைச் செய்யுங்களேன் என்றான்.

உதவி அரசாங்க அதிபர் தலையைக் குனிந்து கொண்டு எதுவுமே பேசாமல்-பேசமுடியாமல் அமைதியாக இருந்தார்.

சரதியல் தாமதிக்கவில்லை. உடனடியாக பின் வழியால் வெளியேறினான்.

மலைநாட்டில் தேயிலைத் தோட்டங்கள் ஐரோப்பியருக்குச் சொந்தமானவையாகவே இருந்தன. இந்த தோட்டங்களில் பாடுபட்டு உழைக்கும் ஏழைத் தொழிலாளிகளுக்கு மிகக் குறைவான சம்பளத்தையே கொடுத்து அவர்களைச் சுரண்டி




தாம் சுகபோக வாழ்க்கை வாழ்ந்து வருகின்றனர்.

இந்த அக்கிரமத்தை கண்டும் கேட்டும் சரதியல் மனம் நொந்திருக்கின்றான்.

அந்தக் காலத்தில் இத் தோட்டங்களைப் பார்வையிட வரும் தோட்டத் துரைமார்கள் குதிரை வண்டிகளிலேயே வருவார்கள். உள்ளூர் தபால் சேவைகள் கூட இந்த குதிரை வண்டிகள் மூலமே நடைபெற்று வந்தன. இதனை கோச் வண்டி என்றே அழைப்பர்.

தோட்டங்களில் தொழிலாளர்களுக்கு சம்பளம் கொடுக்கப்படுவது அந்தந்த மாதத்தின் இறுதி ஞாயிற்றுக்கிழமைகளிலாகும். அதற்கான பணம் கொழும்பிலிருந்து குதிரை வண்டிகளில் சனிக்கிழமைக்கே வந்து சேர்ந்துவிடும்.

வழக்கம்போல அன்று சனிக்கிழமை பணம் வரும் என்று சரதியல் கோஷ்டியினர் எதிர்பார்த்திருந்தனர். மூன்று தோட்டங்களுக்கு உரிமையாளரான வெள்ளைக்கார துரை ஒருவன் பணத்தோடு குதிரை வண்டியில் வந்து கொண்டிருக்கின்றான் என்ற தகவல் கடுகண்ணாவை, கனேதன்னை பகுதியிலிருந்த சரதியலுக்கு எட்டியது.

குதிரை வண்டிகளின் பயணம் அப்படியொன்றும் குதிரை வேகத்தில் நடப்பதில்லை. வண்டிகள் ஒவ்வொரு இடத்தில் நிறுத்தப்பட்டு அதில் வந்தவர்கள் சாப்பிட்டு இளைப்பாறி ஆறுதலாகத்தான் அந்தப் பயணங்கள் நடக்கும்.

ஆகவே குதிரையை விட வேகமாக தகவல் வருவதற்கும் அந்த வண்டியை மடக்க திட்டமிடுவதற்கும் போதிய அவகாசம் இருந்தது.

சரதியல் கோஷ்டியினர் பஹலகடுகண்ணாவை வளைவில் பதுங்கி நின்று கொண்டிருந்தார்கள். அது மாலை மயங்கும் நேரம். சுமார் 5 மணியிருக்கும். குதிரை வண்டி நெருங்கி விட்டது. அது ஒரு மலையடிவாரம் என்பதால் குதிரையின் வேகமும் குறைந்தது. அது சரதியல் கோஷ்டிக்கு மிகவும் வாய்ப்பாக இருந்தது.

துப்பாக்கியை குதிரை வண்டியின் ஆசனத்தில் அமர்ந்து தன்னை மறந்து தூங்கிக் கொண்டிருந்த துரையின் மார்புக்கு நேரே நீட்டினான்.

டுமீல்... டுமீல்.. வண்டி வீதியை விட்டு விலகி பள்ளத்தில் உருண்டது.

வண்டியிலிருந்த மூவரும் காட்டுக்குள் ஓடி தப்பி விட்டார்கள். துரையின் இடது கையிலிருந்து இரத்தம் பீரிட்டது.

கீழிறங்கி வந்த சரதியலும் அவன் சகாக்களும் தலைகுப்புற விழுந்து கிடந்த வண்டியிலிருந்த பணப் பையை எடுத்துக் கொண்டு மாயமாக மறைந்தனர்.

அடுத்த நாள் இந்த வழிப்பறிக் கொள்ளை பற்றிய தகவல்கள் அரசாங்கத்தின் மேலிடத்தைச் சென்றடைய பகலாகி விட்டது.

இந்த இக்கட்டான சூழலிலும் கூட சரதியல் மூன்று தோட்டங்களுக்கும் சென்று தொழிலாளர்களுக்கு உரிய பணத்தை விட அதிகமாகவே கொடுத்து எல்லா பணத்தையும் தீர்த்துவிட்டு வந்து விட்டான்.

உதவி அரசாங்க அதிபர் சோண்டர்ஸின் கட்டுப்பாட்டிலுள்ள பிரதேசத்தில் இரு இடங்களில் இரு நாட்களில் நடந்த மூன்று சம்பவங்களும் அவருக்கு பெரும் அவமானமாகப் போய்விட்டது. அதைவிட அவமானம் தன்னையே கட்டிப் போட்டு விட்டு துப்பாக்கியை பறித்துக் கொண்டு சென்ற சம்பவம் அரசாங்கம் அவரை ஒரு கையாலாகதவனாக கருதுவதற்கு இந்த சம்பவங்கள் காரணமாகி விடப் போகின்றதே என்று அவன் மிகவும் கலங்கிப் போனான். நான் இதற்கு எப்படிப் பதில் சொல்லப் போகின்றேன் என்ற கேள்விக்கு அவனால் விடை கண்டு பிடிக்க முடியவில்லை.

சரதியலின் வீரதீர சாகசம் கண்டி, கலகெதர, குருணாகல, கேகாலை பகுதிகளில் ஜனரஞ்சமாகியது. வீதிகளிலும் மக்கள் கூடும் சந்தை, களியாட்டங்களிலும் சரதியலைப் பற்றியே மக்கள் பேசிக் கொண்டார்கள்.

எங்கெல்லாம் அநீதியும் அக்கிரமும் நடக்கின்றதோ அங்கெல்லாம் சரதியல் வருவான். அப்படியொரு மாய மனிதன் அவன் என்றெல்லாம் மக்கள் மகிழ்ந்து மகிழ்ந்து பேசிக் கொண்டார்கள்.

சரதியல் வெளியே தலைகாட்டவில்லை. பதுங்கி கொண்டான். அரசாங்கமும் பாதுகாப்புப் படையும் அவனைத் தேடி வலைவிரித்தன. மக்களோ அவனைக் காண ஆசைப்பட்டனர். இதில் எவருடைய கண்ணில் பட்டாலும் ஆபத்துதான் என்பதை அவன் புரிந்து கொண்டான்.

அதேநேரம் சரதியலைப் போன்ற தோற்றமுள்ளவர்கள் கூட வெளியே நடமாடத் தயங்கினர். சில வாலிபர்கள் சரதியல் எனக் கருதப்பட்டு பொலிஸாரால் துன்புறுத்தப்பட்ட செய்திகளும் பரவத் தொடங்கின....

*(தொடரும்)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**காதல்**

இங்கேதான்
சுவனத்துப் பூக்கள்
சூர்யோதயத்தை அவதானிக்கின்றன!

பருவத்தின் மகரந்தவாசம்
புலன்களுக்குப் புத்தாடை கட்டி
அழகு பார்க்கத் தொடங்கும்!

தென்றலின் இரவுகளைப்
பூக்களின் கனவுகள் களவாடும்!

தனிமையின் முற்றுப்புள்ளியும்
இனிமையின் ஆரம்பமும்
இங்கேதான் உற்பத்தியாகின்றன!

கண்களால் கிரகித்து
இதழ்களால் மனமிடும் பாடவிதானம்!

உயிரில் மடல் எழுதி
சுவாசத்தை தூதுவிடும் அழகுஅஞ்சல்!

இந்த யௌவன வெளிச்சத்தை
விலக்கிவிட்டால்
வாழ்வு மயானமாய்த் தோன்றும்:
ஸ்நேகித்தால் பருவம் நந்தவனமாகும்!

**- நியாஸ் முஸாதிக், கிண்ணியா 05.**

**முகாம்களின் முகாரிகள்...**

தவமிருந்தது
வெண்புறாக்களின் வருகைக்கு!
வந்து சேர்ந்ததோ கழுகுக்கூட்டங்கள்.

முகாம்களில்
செயலிழந்த மனித இயந்திரங்கள்
உறுப்புக்களை மட்டுமல்ல
உடமைகளையும் தானம் செய்துவிட்டு
சமாதான உயிலினை
எழுதும் வரை உயிர் வைத்திருக்கிறது

வாழ்க்கையை
வறுமை - குத்தகை எடுத்துள்ளது
எல்லோரும் வாழ்ந்துதான் இறக்கிறார்கள்
நாங்கள் இறந்துகொண்டே வாழ்கிறோம்.

**- அப்துல்மனாப் நபீர், கந்தளாய்.**

**புதுமைகள் புரிந்திட...**

இருண்ட மனங்கள் ஒளி பெற,
வறண்ட நிலங்கள் செழிப்புற,
வன்முறைக்கு தூபமிடும்
வஞ்சகரின் வாழ்வுக்கு
சாவுமணி அடிக்க,
புத்தாண்டே வருக!

மற்றவர்க்காய் குரல் கொடுத்து!
மற்றவர்க்காய் வாழ்ந்து காட்டி!
ஒருவர் துன்பத்தை ஒருவர் சுமந்து!
மனித மாண்புதனை பேணி வாழ!
மனங்களில்
அமைதியும்! சமாதானமும்
பிறந்திட புத்தாண்டே மலர்ந்திடுவாய்!

**- வி.பி. தனேந்திரா, அரியாலையூர்.**

**எல்லாம் நிகழ்ந்திருக்கும்**

வேலை நாட்களிலென்றால்
மேலதிகமாய்
இரண்டு முத்தங்கள் தந்திருப்பேன்
நீ - கைஅசைத்துச் செல்வதற்கிடையில்.

கடும் அவசரத்திலும்
தப்புத்தப்பாகவேனும் ஏதேனும் காய்ச்சி
ஊட்டியும் விடலாம்.

நடு நடுவே வரும்
விடுமுறை தினங்களில்
வாசல் மருங்கின் ரோசாபாத்திகளுக்கு
நீ - நீருற்ற
செடிகளை
அழகு படுத்துவேன் நான்.

அந்தியில்
சேர்ந்து ஒரு கண்காட்சிக்கோ
நண்பியின் வீட்டுக்கோ
சென்று வரலாம்.

இலைகளின் மீது விழுந்து
குதிக்கும் மழைத் துளிகளை ரசித்தபடி
கொறிப்பதற்கு உறைப்பும்
சுடச் சுடத் தேனீரும்
இருவருமே அருந்தியிருப்போம்.

நிலவை நாமும்
நம்மை நிலவும் பருகியபடி
கடற்கரையின் பௌர்ணமிகள்
கழியும் மிக இதமாய்.

எல்லாம் நிகழ்ந்திருக்கும்
ஒரு வேளை ஆளுக்கொரு தேசத்தில்
காலம் நம்மை
(இப்படி) கிழித்துப் போடாதிருந்தால்.

**- அனார்**

**வால் முறுக்கும் நினைவு**

வால் முறுக்கிய மெக்ஷிக்கோ
கன்றுக்குட்டியைப் போல்
உன் நினைவுகள்
என் போர்வைக்குள்

கொழுத்துப்போன மகிழ்ச்சியுடன்
அவுஸ்திரேலிய புல் வெளியாய்
சிரிக்கும் என்
நிகழும் எதிர்காலம்

கொய்யா பழுத்த செய்தி கேட்டு
மரம் தாவும் அணிலாய்
என் வாலிபம்
நீ தாவணிக்கு வந்த
செய்தி கேட்டு

நிலா பொறுக்கி
இதோ உனக்காய் ஒரு
கொட்டில் தாஜ்மஹால்
இல்லை இல்லை
நமக்காய்...

காகமாய் இதயம் இரண்டு
கரைய
மரங் கொத்தியாய்
மனசு கொத்தி...
என்னுள் அடைந்த பறவையே
வா
நீ வரும் நாளில்
என் இதயம் கழன்று
நதியில் குளித்து
சீனடிபோட்டு
உன்னை ஆலாத்தி...

**- ஏ. நஸ்புள்ளா, கிண்ணியா.**

**தெறித்து விழ்ந்த**
**ஒரு நட்சத்திரக் கற்கண்டு**

புத்தம் பதிய வெற்றுத்தாளாய்
சிரிக்கின்றாய்
எத்தனை கோடி வரிக் கவிதைகள்
உயிர்க்கின்றன
நின் புன்னகையில்;
நின் குறுநடையில்;

எத்தனை கோடி நட்சத்திரக் கற்கண்டுகள்
தெறித்து வீழ்கின்றன
என் இதய சமுத்திரத்துள்,

பொம்மைகளும்
உயிர்த்தெழும்புகின்றனவே
நின் மந்திர விழிகளில்...
பண்டமாக்கப்படாது இன்னும்
இருக்கிறது நின் அற்புதப் புன்னகை,
என் செங்குருதி வார்த்துக் காய்ச்சி
சிவந்திருக்கிறாய் நீ,
ஒரு புத்தம் புதிய செவ்வரத்தம் பூவாக-
என் நெஞ்சத்துள்...

**- கல்லூரன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாம்பு

செல்லையாச் சீமானின்
சீரெழுந்த மாளிகையின்
கொல்லைப் புறத்தில்
குழிபறித்துக் குவித்த பெரும்
கல்லுகளின் கீழிருந்து, கூனி உடல்
குறுக்கி
மெல்ல நகர்ந்து மேற்புறத்து வந்து
முற்றத்திலூர்ந்து, முன்வாசற் பக்கம்
கொல்லும் விஷங்கனத்த
கூரெழுந்த தன்னுடைய
பல்லினையுங்காட்டிப் படமெடுத்து ஆடிப்
பயமுறுத்திப்
புல்லிற்குள் ஓடியதோர் பாம்பு!

ஊரெழுந்து கூடியது
ஒவ்வொன்றாய்ப் பேசியது.
'ஓரிரண்டு பாம்புகளால்
உயிர் இருப்பே பாதிக்கும் - ஆதலினால்
மாரி வருமுன் பாம்புகளை மாய்த்தல்
காரியத்தில் வேணும்' என
ஊரின் பெரியர் ஒன்றிரண்டுபேர் உரைக்க,
வேரோடழிப்பமென விண்ணாணம் பேசிக்
காராளசிங்கம் கிளர்ந்தார்.

சாரை, புடையன்
செறி நச்சு நாகம் என்று
பேரை அடுக்கிப் பாம்பை இனங்காண
வீரையா விழைந்து நின்றார்.

சீமான் எழுந்தார்
சினத்துடனே 'நாகம்தான்!
பேமானிப்பாம் பதனைப்
பிடித்தடித்துக் கொல்வம்! '
சாமானியர் அல்ல
நாம்' என்றுரைக்க,
ஆமென்று சொன்னார் அனைவருமே!

'பரமர் வளவுப் பற்றைக்குள்தான் சென்று
பாம்பு ஒளிந்திருக்கும்'
இருமலுடன் சொன்னார்
இரண்டாம் முறை சீமான்.
'பொழுது,
கருக முதல் கொல்வம்' எனக் கூறித்
தடியெடுத்தார்! கூட்டம்
சீறலுடன் பின் நடந்தது!

பொட்டுப் பிரித்துப்
பெரிய குதிகால்கள்
வெட்டியழித்து,
விளைந்த பயிர் முறித்து,
புலவொன்றில் பட்டி புகுந்தது போல்
பரமர் வளவுக்குள்
பட்டாளம் உட்புகுந்து
அரவு பிடிக்க அங்கிங்கு சுற்றியது!

பாம்பு பிடிக்கப் பரமர் எதிர்த்தும்,
வீம்புடனே உட்புகுந்து
சேம்புமுதல் செல்வரத்தை
சீண்டிச்சிதைத்து,
சிறுகுடிலைப் பிய்த்தெறிந்து,
நீண்ட தடிகளுடன் நடமாடி...
....ஆனாலும் பாம்பு அகப்படலை
சீமானுமோயவில்லை....

- ஜெ. பிறேம்குமார், கல்வயல்.

## இதையேனும்

வெட்ட வெளியினிலே
வெண்புறாவொன்று
தாகத்தினால் துடிக்கு தங்கே!
மனிதனைப் போல,

கல்லை தலையனையாய்
கடலை பாயாய்
வானை சோலையாய்
இறைவன் கொடுத்ததால்
எத்தனை இன்பம்?

இரத்தமெனும் வெள்ளம் கண்டு
இங்கிருந்து தப்பி
இறக்கையை விரிக்கத்துடிக்கும்
வெண்புறாவிற்கு - உங்கள்
யுத்த வியர்வையையேனும்
கொடுத்துதவுங்கள் எழுந்து
பறக்கட்டும்...

- N. ஷிப்ரா, ஹட்டன்.

## நம்மாசை நடக்குமா?

எப்ப நடக்கும்? எது நடக்கும்?
எங்கே நடக்கும்? எப்படி நடக்குமோ?
இங்கேயே நடக்குமோ!!
தப்பாய் நடக்குமோ!!
தப்பாமல் நடக்குமோ!!
அப்படியே நடந்தது! இனியும் நடக்கும்!
இனிப்பாகவும் நடக்கும்!!
இனியவை நடக்கும்!!
நப்பாசை நடக்குமோ?
நம்மாசை நடக்குமோ!!!

- சகசு, ஆவரங்கால்.

## விட்டுக்கொடுப்பு

எல்லோரும்
வெற்றிப் பாதையில்
சென்று கொண்டிருக்கையில்
அதே பாதையில்
நானும்
அவனும்
சென்று கொண்டிருந்தோம்
நான் முன்னேறட்டும்
என்று
அவனும்
அவன் முன்னேறட்டும்
என்று
நானும்...

எம் இருவரது
விட்டுக் கொடுப்புக்களாலும்
எல்லோரும் இலக்கை
அடைந்தபின்பும்
நாம் இருவரும்
இன்னும் நடந்து
கொண்டுதானிருக்கிறோம்
இலக்கை அடையாமலேயே...

- குமுதினி சிவானந்தம்,
பொலிகண்டி.

## வரட்சி

வானத்தின் பிடிவாதம்
வரட்சியாய் வெடிக்கின்றது

இயற்கையின் கோபம்
மனிதரை வருத்துகின்றது

வயல்கள் எல்லாம்
வானம் பார்த்து...
மழையைத்தான்
காணோம்...
வாட்டமற்ற மரங்கள்...
வாடி இறக்கும் மந்தைகள்...
மகிழ்ச்சி இழந்த மக்கள்
மண்டை குழம்பும்
நில உரிமையாளர்கள்...
மணமிழந்த பூக்கள்...
வெடித்துப் பறந்திருக்கும்
வெண்தாமரைக் குளங்கள்
புழுதி படிந்த
மேட்டு நிலங்கள்
வெளிச்சம் மடிந்த இரவுகள்
எல்லாம் மழைக்காக
தவமிருக்கின்றன...

மழையை மட்டும்
இன்னும் காணோம்.

- ஏயெம். நபீர், கந்தளாய்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிரிக்கெட்டும் உளவியலும்

- இ. விஜிதன்,
கரவெட்டி.

கனவான்களின் விளையாட்டு எனக் கருதப்படும் கிரிக்கெட்டானது இங்கிலாந்தில் தோன்றியது. இது கனவான்கள் மாத்திரமே விளையாடலாம் என்று ஒரு Imageஐ அக்காலத்தில் தோற்றுவித்திருந்தது.

எனினும் இது காலத்தின் போக்கில் இங்கிலாந்தின் காலனித்துவ ஆட்சியி




னால் அது கீழைத்தேய நாடுகளுக்கும் பரவலாயிற்று. முக்கியமாக இந்தியா, இலங்கை, பாகிஸ்தான், தென் ஆபிரிக்கா, அவுஸ்திரேலியா, நியூசிலாந்து ஆகிய நாடுகளிலும் சிறப்பாக விளையாடப்பட்டு வருகின்றது.

கனவான்களின் விளையாட்டு எனக் கூறப்பட்டு வந்த கிரிக்கெட் இன்று காசு புரளும் சூதாட்டமாக மாறிப் போயிருப்பதென்னவோ வேதனைக்குரியதுதான். மைதானத்தில் ஒரு நேரத்தில் பதினைந்துபேர் பங்குகொண்டிருக்கும் விளையாட்டைப் பார்ப்பதற்கு மைதானத்தை சுற்றிப் பல்லாயிரக்கணக்கானவர்களும், அதற்கப்பால் தொலைக்காட்சிப் பெட்டிகளின் முன்னால் பல லட்சக் கணக்கானவர்களும் குழுமியிருந்து ரசிப்பதில் பெரும்பாலானவர்களுக்கு இது தருகின்ற களிப்பை நாம் அறிந்து கொள்ள முடியும்.

இந்த ஆர்வ ஈடுபாட்டில் கறைபூசிய சம்பவமாக ஆட்டநிர்ணய விவகாரம் அமைந்தது.

இந்த விளையாட்டின் மேல் மக்களுக்கிருக்கும் தீவிர ஈடுபாட்டால், விளையாடும் வீரர்கள் அடையும் பிரபலமும் அவர்கள் அந்த நாட்டின் - மக்களின் நாயகர்களாக்கப்படுவதும் விளம்பரதாரர்களைத் தேடி வரவைக்கிறது. விளம்பர அனுசரணையாளர்களால் வீரர்களுக்கு கிடைக்கும் அபரிமிதமான பணமும் விளையாட்டின் நோக்கத்தையே மாற்றிவிடுகிறது.

இதுதவிர, கிரிக்கெட்டின் மீது அதன் ரசிகர்களுக்கு வளர்ந்து வரும் வெறியால் வீரர்களின் விளையாட்டு மனநிலையும் பாதிக்கப்படுகிறது. இந்திய - பாகிஸ்தான் கிரிக்கெட் போட்டி கிட்டத்தட்ட ஒரு யுத்தமாகவே அந்நாட்டு ரசிகர்களால் பார்க்கப்படுகிறது.

இப்படியாக விளையாட்டுக்குரிய குணாம்சங்களைப் படிப்படியாக குறைத்துக்கொண்டு முற்றாகவே ஒரு சூதாட்டமாக மாறிவிடுமோ என்கிற அச்சம் அந்த விளையாட்டுக் கலையின்மீது மரியாதையான ஈர்ப்பும் ஈடுபாடும் கொண்ட ரசிகர்களுக்கு உண்டு. வெற்றி தோல்விகளுக்கப்பால் அந்த ஆட்டத்தின் கலைநுணுக்கங்களுக்காக கிரிக்கெட் பலபேரால் ரசிக்கப்படுகிறது.

இந்தக் கட்டுரை, கிரிக்கெட்டை எவ்வாறு உளவியலானது பாதிக்கின்றது என்பதைக் கூறுவதுடன், வெற்றி தோல்வி என்பனவற்றை நிர்ணயிப்பதில் அதன் பங்குப்பணி பற்றி ஆராய்வதாகும்.

ஒவ்வொரு அணியும் எவ்வாறு தங்களது வெற்றிகளை தக்க வைப்பதிலும் மற்ற அணிகளைத் தோல்வியுறச் செய்வதற்குமாக அவை பயன்படுத்தும் உளவியல் ரீதியான உத்திகள் (Psychological Tactics) பற்றி ஒவ்வொன்றாகப் பார்ப்போம்.

முதலாவதாக நாணயச் சுழற்சி (Toss). நாணயச் சுழற்சியும்கூட வெற்றியைத் தீர்மானிப்பதில் பெரும்பங்கை வகிக்கும். முதலில் துடுப்பெடுத்தாடு



வதா களத்தடுப்பிலீடுபடுவதா என்பதில் எதிரணியை கட்டாயப்படுத்துவதன் மூலம் ஒரு உளவியல் ரீதியான பாதிப்பை ஆரம்பத்திலேயே ஏற்படுத்திவிட முடியும். வீரர்களின் நிலை, எதிரணியினரின் நிலை, காலநிலை, ஆடுகளத்தின் நிலை என்பனவற்றைப் பார்த்து முதலில் துடுப்பாட்டத்திற்கா களத்தடுப்பிற்கா வாய்ப்புஅதிகம் என்கிற கணிப்பில் ஒரு தீர்மானத்தோடு வருகையில் நாணயச்சுழற்சியில் தோல்வியானது நிச்சயம் பாதிப்பை ஏற்படுத்தும். வெற்றிக்கு வாய்ப்புக்கள் குறைவு என்ற எண்ணத்தோடு விளையாட ஆரம்பிக்கும் வீரர்களிடம் உற்சாகத்தை எதிர்பார்க்க முடியாது.

அதேசமயம் நாணயச்சுழற்சியில் வென்ற அணியினரிடம் தாங்கள் வென்றுவிடுவோம் என்ற உற்சாகமிருக்கும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருநாள் ஆட்டங்களில் களத்தடுப்பில் கட்டுப்பாடு (Field Restriction) இருக்கும். முதல் 15 பந்து பரிமாற்றங்களில் எடுக்கும் ஓட்டங்கள் வெற்றியைத் தீர்மானிப்பதில் ஒரு குறிப்பிட்ட பங்கை வகிக்கும். இந்த 15 பந்து பரிமாற்றங்களில் 100 ஓட்டங்கள் எடுத்தால் ஒரு வசதியான நிலைமைக்கு, அதாவது 280 - 295 ஓட்டங்களுக்கு அணி எண்ணிக்கையை கொண்டுசெல்வதற்கு ஒரு ஊக்கமாய் (Boost) இருக்கும்.

இந்த முதல் பதினைந்து பந்துபரிமாற்றங்களில் ஒரு அதிரடி ஆட்டத்தை அறிமுகப்படுத்திய பெருமை இலங்கை அணித்தலைவர் ஜெயசூரியவையே சாரும். 96 உலக கிண்ணத்தில் இவர் ஆடிய ஆட்டம் மெய்சிலிர்க்க வைப்பவை. இந்த ஆரம்ப அதிரடி ஆட்டம் எதிரணியை நிலைகுலைய வைத்துவிடுவதோடு மிக இலகுவாக ஓட்ட எண்ணிக்கை 250 ஐக் கடந்து விடுவார்கள் என்பதால் சோர்வடையவும் வைத்துவிடும்.

மாறாக, முதல் 15 பந்து பரிமாற்றங்களில் விழும் விக்கெட்டுகளின் எண்ணிக்கை ஆட்டத்தை திசை திருப்புவதில் பெரும்பங்கு வகிக்கும். இதனால் அந்த குறிப்பிட்ட ஓவர்களுக்குள் குறைந்தது இரண்டு மூன்று பேரையாவது ஆட்டமிழக்கச் செய்துவிடுவதில் பந்து வீச்சு அணியினர் மும்முரமாக இருப்பர். எதிரணியினர் மீது உளவியல் ரீதியான தாக்கத்தை மேலும் உண்டுபண்ணுவதற்கு ஆயத்தமாயிருப்பார்.

சாதாரணமாக காலில் பட்ட பந்துகளுக்கே காட்டுக்கத்தலாக Appeal கேட்பார்கள். இது நடுவரை நோக்கியே கேட்கப்பட்டதாயினும் துடுப்பாளனுக்கு வயிற்றைக் கலக்கும். துடுப்புக்கு அருகிலோ, விக்கெட்டுக்கு அருகிலோ பந்து பயணம் செய்கையில் எல்லோரும் 'ஹோ...ஓ..' என்று chorus ஆக கத்துவார்கள்.

வேகப்பந்து வீச்சாளர் தனது paceஐ மாற்றிய வண்ணம் இருப்பார். ஒரு தடவை in-swing எனில் மறுதடவை out-swing. அடுத்த தடவை bouncer என்றால் அடுத்த பந்து yolker. அதிவேகமாக ஓடிவந்து பிறங்கையால் பந்தை உள்விட்டு slow ஆக்குவார்கள். இதனால் எல்லாம் துடுப்பாளனின் மனவுறுதியைக் குலைப்பார்கள்.



சுழல்பந்து வீச்சாளர் எனின் பொதுவாகக் களத்தடுப்பை மாற்றுவார்கள். துடுப்பாளனுக்கு அருகே silly mid-on, silly mid-off இல் களத்தடுப்பை நிறுத்துவர். spin பந்து போட்டுவிட்டு திடீரென அடுத்த பந்தை speed ஆக்கி cutters போடுவார்கள். on side இல் களத்தடுப்பை அமைத்துவிட்டு off இல் பந்தை வீசுவார்கள். full toss போடுவார்கள். அடிக்கடி தலைவருடன் (skipper) உரையாடுவார்கள். wicket keeper உடன் கதைப்பர். உடன்வந்து காதில் ரகசியமாய் wicket keeper கதைப்பார். பின்னர் சென்று விக்கெட்டை நெருக்கியபடி இருப்பார். wicket keeper, bowler இன் பெயரைச் சொல்லி உற்சாகப்படுத்திக் கொண்டே இருப்பார். இலங்கை அணியின் ரொமேஷ் களுவிதாரண இதில் கில்லாடி.


Rough ஆன பார்வையும், வக்கணைப் பேச்சுகளும், நக்கல் சிரிப்பும், தூஷணமும் துடுப்பாளரின் மனச் சமநிலையை மாற்றவல்லன (mental balance). துடுப்பாளரின் மனநிலையை விரக்தி (frustration) அடையச் செய்து அவர் நிதானமிழக்கும் சந்தர்ப்பத்திற்காகக் (chance) காத்திருப்பார்கள்.

மேற்கூறிய உத்திகள் பொதுவாக கிரிக்கெட் ஆடும் எல்லா அணியினரும் பின்பற்றுபவை தான் எனினும் அவுஸ்திரேலியர் இவைகளில் மிகத்தேர்ந்தவர்கள். Shane Warne, Appeal கேட்பதிலும் நடுவரைத் திசைதிருப்புவதிலும் பேர்பெற்றவர். Glen Magrath வக்கிரப்பார்வைக்கும் வக்கணைப் பேச்சுக்கும் பேர் போனவர்.

இந்திய - பாகிஸ்தான் அணியினர் விளையாடும்போதும் ஒருவரையொருவர் முறைத்துக் கொள்வது அதிகமிருக்கும். ஒருசமயம் இந்திய விக்கெட் கீப்பர் எதுவோ சொல்ல, பாகிஸ்தான் துடுப்பாட்ட வீரர் ஜாவிட் மியான்டாட் அவரைப் பார்த்துக் கோபம் கொண்டவராக நாலைந்து முறை துள்ளிவிட்டு, நடுவரிடம் புகார் கூறிக் கொந்தளித்ததை தொலைக்காட்சியிலும் பார்க்க முடிந்தது.

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





இதன் விளைவு அவர் அடுத்தடுத்த பந்திலேயே விரைவாக ஆட்டமிழந்து விட்டது தான்.

அதுபோல பாகிஸ்தான் விக்கெட் கீப்பர் மொயின் கானும், இங்கிலாந்து அணியின் விக்கெட் கீப்பராக இருந்த அலெக் ஸ்டுவர்ட்டும் விக்கெட்டின் பின்னால் நின்று ஆத்திரமூட்டும் விதமாகப் பேசி துடுப்பாட்டக்காரரை நிதானமிழக்கச் செய்வதில் கில்லாடிகள்.

இவ்வாறு சினமூட்டி உசுப்பி விடும் செய்கைகளுக்குத் தங்கள் கவனத்தைத் திருப்பாது, சலனப்பட்டுவிடாது மனஉறுதியோடு ஆடுபவர்களே சிறந்த துடுப்பாட்டக்காரர்களாக மிளிர்கிறார்கள். சச்சின் டெண்டுல்கர், பிறயன் லாரா, ஜக் கலிஸ் போன்றோர் இந்தவகையில் வெற்றிகரமானவர்கள் என்று சொல்லலாம்.

முன்னாள் பாகிஸ்தான் வீரர் ஜாவிட் மியான்டாட், அர்ஜுனா ரணதுங்க, மைக் ஆத்தர்டன், ஸ்ரீவ் வோ போன்றவர்கள் எளிதில் உணர்ச்சிவசப்பட்டு சீண்டுபவர்களின் வலையில் வீழ்ந்து விடுவார்கள். அது அவர்களின் ஆட்ட முடிவுக்கு காலாகிவிடும்.

மாறாக, களத்தடுப்பாளர்களுடன் சிரித்துப் பேசி, அவர்களை வளைத்துப் போட்டுக்கொண்டு துடுப்பாட்டத்தை வெற்றிகரமாக முடித்துவிட்டு வருகிறவர்களாக அஜய் ஜடேஜா, ஜொன்டி ரோட்ஸ் போன்றவர்களைச் சொல்லலாம்.



தென்ஆபிரிக்காவை எடுத்துக் கொண்டால் நக்கல் நளினங்களுக்கு Shane Pollockஐ உதாரணமாக எடுக்கலாம். (Mcgrath, Pollock ஆகியோர் சிறந்த lenght Bowlers என்பது வேறுவிடயம்).

Paceஐ அடிக்கடி மாற்றி மாற்றிப் போடுவதில் பாகிஸ்தானின் Yolker மன்னன் Wasim Akramஐ சிறப்பாகக் குறிப்பிடலாம்.

Cover pointஇல் அதி சிறந்த களத்தடுப்பாளரை நிறுத்துவது இப்போது ஒரு Trendஆக உள்ளது. அவுஸ்திரேலியாவின் Ricky Ponting தென் ஆபிரிக்காவின் Jonty Rhodes cover point களத் தடுப்பில் கைதேர்ந்தவர்கள். இவர்களைக் கண்டதுமே துடுப்பாளர்கள் பந்தை நேராக அவர்களுக்கு அனுப்பி வெகு சீக்கிரமே pavillion திரும்பி விடுவார்கள்.

உளவியல் தெரிந்த விக்கெட் காப்பாளர்களில் ரொமேஷ் களுவித்தாரண, மொயின் கான், அவுஸ்திரேலியாவின் முன்னாள் இயன் ஹீலி போன்றோரைச் சொல்லலாம். எப்போதும் ''முரளி... முர்ளி'' என்று கத்திக்கொண்டே எதை யாவது சொல்லிக் கொண்டிருப்பது 'களு'வின வழக்கம். இது பந்து வீச்சாளருக்கும் களத் தடுப்பாளருக்கும் ஒரு Morale Boosting ஆக இருக்கும். மட்டையாளருக்கு மிகுந்த எரிச்சலூட்டும்.

துடுப்பெடுத்தாட்ட உளவியல் உத்திகளை எடுத்தோமாயின் பந்து வீச்சாளரையும், களத்தடுப்பாளர்களையும் உளவியல் ரீதியாக சலிப்படைய (make weary) வைப்பதில் துடுப்பாட்ட வீரர்கள் முயன்று கொண்டிருப்பாகள். சிறந்த straight batting footworking உள்ள middle order துடுப்பாட்டக்காரர்கள் singles எடுத்துக் கொண்டே இருப்பார்கள். இதனால் சலிப்படைந்த பந்து வீச்சாளர் short ball, weak bouncer என்று போடுவார்கள். தருணம் பார்த்து அவர்கள் அந்தப் பந்துக்குத் தண்டனை கொடுப்பார்கள். இந்தியாவின் Rahul Dravid, இலங்கையின் Attapattu, Jeyawardane, சிம்பாப்வேயின் Andy Flower ஆகியோரை குறிப்பிடலாம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Test ஆட்டங்களில் Off stumpக்கு வெளியே lenght ஆக போடப்படும் பந்துகளுக்கு துடுப்பைத் தலைக்கு மேல் உயர்த்தி leave பண்ணுவார்கள். ஒரு ஓவரில் 6 பந்துகளுக்கும் leave பண்ணும் சந்தர்ப்பங்களும் உண்டு. இது பந்து வீச்சாளர்களுக்கு ஒருவித மன உளைச்சலை (mental



tiredness)ஐ ஏற்படுத்திவிடும்.

வேகப்பந்து வீச்சாளர், நின்றும், பறந்தும் spinம் போடுவார்கள். துடுப்பாட்ட வீரர்கள் ஒன்றிரண்டு மணித்தியாலங்கள் காலை கையை நீட்டி நிமிர்த்தி jogging செய்து நான்/ நாங்கள் களைக்கவில்லையாம் என்று காட்டுவார்கள்.

singles எடுத்துவிட்டு விக்கெட்டுகளுக்கிடையே ஓடாமல் நடப்பார்கள். முன்னாள் இலங்கை அணித்தலைவர் Arjuna Ranatungeவின் நடை பிரசித்தமானது.

ஒருநாள் ஆட்டங்களிலும் சரி, Test ஆட்டங்களிலும் சரி வலது, இடது கை இணையை (Combination) தொடர்ந்து தலைவர் அனுப்பி இணையை அனுசரித்துக் கொண்டிருப்பர். இது உண்மையில் களத்தடுப்பை மாறிமாறி களைக்கச் செய்யும்.

பந்து வீச்சாளரால் எறியப்படும் பந்தை அப்படியே தூக்கி நேரே Mainக்குள் அடிப்பது Bowlerஐ நிச்சயம் சலிப்படைய வைக்கும். இதை அப்பட்டமாக அவர் முகத்தில் காணலாம்.

மற்றும் அடிக்கடி sidescreen ஐ மாற்றுவது பந்து வீச்சாளரை எரிச்சலடைய வைக்கும்.

விளையாடும் போது பந்து வீச்சாளரை சினேகமுகபாவத்துடன் எதிர்நோக்குவது சில நல்ல மட்டையாளர்களின் பண்பாக உள்ளது. இந்தியாவின் Sachin Tendulkar, இலங்கையின் Hashan Tilakaratne, நியூசிலாந்தின் Chris Cairns ஆகியோர் இவ்வாறு பந்தை எதிர்கொள்கிறார்கள்.

மற்றுமொரு விடயம் துடுப்பாளரின் மதிநுட்ப Reverse batting பந்து வீச்சாளரையும் தலைவரையும் சலிப்படைய வைக்கும். அன்டி ஃப்ளவர், ஜொன்டி ரோட்ஸ் இதில் பிரபலமானவர்கள். நல்ல ஒரு இணைத் துடுப்பாட்டம் பின்வரிசை வீரர்களுக்கு நல்ல உளபலத்தை கொடுத்துவிடும். இது இலக்கைத் துரத்துவதற்கு (chase) உதவியாக இருக்கும்.

துடுப்பாளர்களும் சரி, களத்தடுப்பாளர்களும் சரி, பந்து வீச்சாளர்களும் சரி நல்ல உளபொருத்தமாக (mental fitness) இருத்தல் Team work இற்கு அனுசரணை புரியும்.

களத்தடுப்பில் ஒருவரையொருவர் தட்டிக்கொடுத்தல், கட்டிப்பிடித்தல் (body longuage) நல்ல ஒரு ஊக்கமாய் இருக்கும். இவை எல்லாவற்றையும் தவிர ரசிகர்களின் moral support மிகமிக முக்கியமானது. வெளிநாட்டில் kenyaவிடம்






தோற்று உள்நாட்டில் அவுஸ்திரேலியாவைவே வெல்லும் இந்தியா நல்ல உதாரணம்.

இவ்வாறு உளவியலானது கிரிக்கெட்டை பாதிக்கின்றது என்பதை பல்வேறு உதாரணங்கள் மூலம் சொல்லலாம். எனினும் திறமை, உளவியல் என்பவற்றை தவிர சில தனிப்பட்ட நபர்கள் விளம்பரத்திற்காகவோ, பந்தய நிர்ணய ஊழலுக்காகவோ (match fixing) கிரிக்கெட்டில் விளையாட வருவது விசனத்திற்குரியது. கிரிக்கெட்டில் psychology பெரும்பங்கு வகிக்கின்றது என்பது ஒரு வெளிப்படை. ●





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**ஏப்ரல் - காதல் தேவதையான வீனஸின் மாதம் என்பது ரோமர்களின் கருத்து. 'எபரியோ' எனும் இலத்தீன் சொல்லிலிருந்து இது வந்தது. மழைக்காலம், குளிர்காலம் முடிந்து புதுப் பருவம் திறக்கும் மாதம். வசந்தத்தின் திறப்புவிழா.**

1979 04 01 - ஈரான் இஸ்லாமியக் குரயரசாகப் பிரகடனப்படுத்திக் கொண்டது.
1986 04 01 - ''ஸ்பீட் போஸ்ட்'' எனும் துரித தபால் முறை துவங்கப்பட்டது.
1949 04 04 - வட அத்திலாந்திக் ஒப்பந்த அமைப்பு (NATO) பிரஸ்ஸலைத் தலைமையகமாகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டது.
1968 04 04 - அமெரிக்க நீக்ரோக்களின் விடுதலைக்குப் போராடிய மாட்டின் லூதர் கிங் சுட்டுக் கொல்லப்பட்டார்.
1979 04 04 - பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் பூட்டோ தூக்கிலிடப்பட்டார்.
1942 04 05 - ஜப்பானிய விமானங்கள் கொழும்பு நகரில் குண்டுவீசித் தாக்கின.
1850 04 06 - கோஹினூர் வைரம் இந்தியாவிலிருந்து இங்கிலாந்திற்கு எடுத்துச் செல்லப்பட்டது.
1971 04 07 - வியட்நாமிலிருந்து அமெரிக்கப் படைகள் திருப்பியழைக்கப்படும் என்று ஜனாதிபதி நிக்ஸன் அறிவித்தார்.
1973 04 08 - புகழ்பெற்ற ஓவியர் பிகாஸ்ஸோ பிரான்சில் காலமானார்.
1909 04 09 - லண்டனில் முதன்முதல் மாடி பஸ் அறிமுகப்படுத்தப்பட்டது.
1894 04 10 - நியூயோர்க்கில் வில்லியம் ஹண்ட் என்பவர் சே∴ப்டி பின்னைத் தயாரித்தார்.
1924 04 10 - குறுக்கெழுத்துப் போட்டி முதன்முதல் (நியூயோர்க்கில்) அறிமுகப்படுத்தப்பட்டது.
1606 04 12 - இங்கிலாந்தின் தேசியக் கொடியாக 'யூனியன் ஜாக்' ஏற்றுக்கொள்ளப்பட்டது.
1633 04 12 - சூரியனைச் சுற்றியே எல்லாக் கோள்களும் வலம் வருவதாகக் கூறியதற்காக, சமய நீதிமன்றம் கலிலியோவை விசாரணை செய்தது.
1945 04 12 - அமெரிக்க ஜனாதிபதி ரூஸ்வெல்ட் மூளை ரத்தக் கசிவு காரணமாக திடீர் மரணம். ஹாரி எஸ்ட் ரூமன் ஜனாதிபதி ஆனார்.
1961 04 12 - வோஸ் டாக்-1 எனும் விண்ணூர்தி மூலம் ரஷ்யா யூரி ககாரினை முதன் முதல் விண்வெளிக்கு அனுப்பியது. விண்வெளி வீரர் தினமாக கடைப்பிடிக்கப்படுகிறது.
1919 04 13 - பஞ்சாப் மாநில ஜுலியன் வாலாபாக்கில் நூற்றுக்கணக்கானோர் படுகொலை. இரண்டாயிரத்திற்கும் மேற்பட்டோர் படுகாயம்.
1912 04 14 - உலகின் பெரிய சொகுசுக் கப்பலான 'டைட்டானிக்' பனிப்பாறையில் மோதியதால் மூழ்க ஆரம்பித்தது. கப்பலிலிருந்த 2406 பேர்களில் 1403 பேர் பலியானார்கள்.
1865 04 15 - வோஷிங்டனில் நாடகம் பார்த்துக் கொண்டிருக்கையில் ஜோன் வில்க்கெஸ் பூத் என்பவனால் சுடப்பட்ட ஆபிரகாம் லிங்கன் இன்று காலமானார்.
1923 04 15 - முதல் பேசும் படம் நியூயோர்க்கில் பொதுமக்களுக்காக திரையிடப்பட்டது.
1980 04 15 - பிரெஞ்சு சிந்தனையாளரும், நாவலாசிரியருமான ஜீன் போல் சாத்தர் காலமானார்.
1991 04 16 - ஆப்கானிஸ்தானில் ஜனாதிபதி நஜிபுல்லா பதவியிலிருந்து விலக்கப்பட்டார்.
1790 04 17 - பெஞ்சமின் ∴பிராங்ளின் பிலடெல்பியாவில் காலமானார்.
1975 04 17 - கம்போடியாவில் போல்பொட்டின் கெமருஜ் படையினர் ஆட்சியைக் கைப்பற்றினர்.
1980 04 17 - 90 ஆண்டுகால வெள்ளை ஆட்சியிலிருந்து ரொடீசியா சுதந்திரம். பெயர் சிம்பாப்வே என மாற்றப்பட்டு றொபேர்ட் முகாபே முதல் பிரதமராகப் பதவியேற்றார்.
1955 04 18 - சார்புநிலைக் கொள்கையைத் தந்த மேதை அல்பெர்ட் ஐன்ஸ்டீன் காலமானார்.
1824 04 19 - ''பைத்தியம், கொடியவன், ஆபத்தானவன்'' என்று தன் காதலியாலேயே வர்ணிக்கப்பட்ட உலகப் புகழ் பெற்ற ஆங்கிலக் கவிஞர் பைரன் காலமானார்.
1882 04 19 - பரிணாமக் கொள்கை தந்த சார்ள்ஸ் டாவின் காலமானார்.
1951 04 19 - முதல் உலக அழகிப் போட்டி. ஸ்வீடனை சேர்ந்த அழகி (21) தேர்ந்தெடுக்கப்பட்டார்.
1964 04 21 - புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் காலமானார்.
1978 04 21 - நடிகர் T.R. மகாலிங்கம் காலமானார்.
1987 04 21 - கொழும்பில் நடந்த பஸ்நிலையக் குண்டுவெடிப்பில் 100 பேர் பலி.
1616 04 23 - ஆங்கில இலக்கியத்தில் அழியாப் புகழ்பெற்ற வில்லியம் ஷேக்ஸ்பியர் இறந்த நாள். (பிறந்ததும் இதே நாள். 1564ம் ஆண்டு)
1850 04 23 - புகழ்பெற்ற ஆங்கிலக் கவிஞர் வில்லியம் வேர்ட்ஸ்வெர்த் காலமானார்.
1992 04 23 - சிறந்த திரைப்பட இயக்குனர் சத்யஜித்ரே காலமானார்.
1993 04 23 - திரு. லலித் அத்துலத் முதலி கொழும்பில் தேர்தல் கூட்டத்தில் உரையாற்றிக் கொண்டிருக்கும் போது சுட்டுக் கொல்லப்பட்டார்.
1728 04 26 - செய்தித் தாளில் பேட்டி கண்டு எழுதும் முறை முதன்முதல் இங்கிலாந்தில் 'பிரைஸ் வீக்லி ஜேர்ண'லில் அறிமுகப்படுத்தப்பட்டது.
1942 04 26 - சீனாவில் நிலக்கரிச் சுரங்கம் வெடித்து 1580 பேர் இறந்தனர்.
1977 04 26 - எஸ்.ஜே.வி. செல்வநாயகம் அவர்கள் காலமானார்.
1949 04 27 - பிரித்தானிய ஆட்சியின் கீழிருந்த, மற்றும் சுதந்திரம் பெற்ற நாடுகளைக் கொண்ட 'கொமன்வெல்த்' உருவாக்கப்பட்டது.
1942 04 28 - தமிழ்த்தாத்தா உ.வே. சாமிநாதையர் காலமானார்.
1945 04 28 - முஸோலினியும் அவரது காதலி கிளாரா பெட்டாஷியாவும் தப்பியோட முயன்றபோது இத்தாலிய தேசியவாதிகள் கைது செய்து சுட்டுக் கொன்றனர். உடல்களை மிலான் நகர வீதியில் தொங்கவிட்டனர்.
1980 04 29 - திகில் பட மன்னர் அல்பிரெட் ஹிட்ச்கொக் காலமானார்.
1945 04 30 - ஹிட்லரும் அவரது மனைவி இவா பிரௌனும் தற்கொலை செய்து கொண்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


**மே மாதம் - ''மெயா'' எனும் தேவதையின் பெயரால் அழைக்கப்படுகிறது. இந்தத் தேவதை உலகைத் தாங்கி நிற்கும் அட்லஸின் புதல்வி. இவளது புதல்வன் ஹெர்மஸ் - ரோமர்களின் புராணத்தின்படி மெர்க்குரி - அதாவது புதன். ரோம் நகரை நிறுவிய ரோமுலஸ் இவளது பெயரை இந்த மாதத்திற்குச் சூட்டினான்.**



1895 மே 01 - முதல் மின்சார ரயில் வண்டி பயணிகளுக்காக விடப்பட்டது.
1918 மே 01 - மொஸ்கோ செஞ்சதுக்கத்தில் லெனின் முதல் மேதின உரையை ஆற்றினார்.
1945 மே 01 - பேர்லினில் கொயபல்சும் அவரது மனைவியும், தங்களது ஆறு குழந்தைகளையும் விஷம் கொடுத்துக் கொன்றுவிட்டு தாங்களும் தற்கொலை செய்துகொண்டனர்.
1965 மே 01 - கர்நாடக இசையுலகில் கொடிகட்டிப் பறந்த ஜி.என். பாலசுப்பிரமணியம் காலமானார்.
1993 மே 01 - ஐ.தே.க.வின் மேதின ஊர்வலத்தின்போது ஜனாதிபதி பிரேமதாசா தற்கொலைக் குண்டுதாரியால் கொல்லப்பட்டார்.
1519 மே 02 - ஓவியரும் தத்துவ மேதையுமான லியனார்டோ டாவின்சி காலமானார்.
1799 மே 02 - திப்பு சுல்தான் போரில் மரணம்.
1969 மே 03 - சென்னை மாநிலத்திற்குத் 'தமிழ்நாடு' என்று பெயர் சூட்டப்பட்டது.
1927 மே 04 - 'ஒஸ்கார்' விருது வழங்கும் அமைப்பு உருவாக்கப்பட்டது.
1980 மே 04 - யூகோஸ்லேவியாவின் ஜனாதிபதி மார்ஷல் டிட்டோ காலமானார்.
1960 மே 07 - லியோனிட் பிரஸ்னேவ் ரஷ்ய ஜனாதிபதியானார்.
மே 08 - உலக செஞ்சிலுவை நாள்.
1933 மே 10 - நாஜி பிரச்சார அமைச்சர் கொயபல்சின் தூண்டுதலில் ஆயிரக்கணக்கான மாணவர்கள் பேர்லினில் நள்ளிரவில் கூடி ''புத்தக எரிப்புப் போராட்டம்'' நடத்தினர். ஜெர்மன் பண்பாட்டிற்குப் புறம்பான நூல்கள் என்று சுமார் 25,000 நூல்கள் எரிக்கப்பட்டன.
1981 மே 10 - இந்திராகாந்தியின் இரண்டாவது புதல்வர் சஞ்சய்காந்தி விமான விபத்தில் இறந்தார்.
1994 மே 10 - தென்னாபிரிக்க ஜனாதிபதியாக நெல்சன் மண்டேலா பதவியேற்றார்.
1949 மே 11 - சயாம் தனது பெயரை தாய்லாந்து என்று மாற்றிக் கொண்டது.
1948 மே 14 - டெல் அவீவில் ''இஸ்ரேல்'' எனும் புதிய நாடு பிறந்ததாக அறிவிக்கப்பட்டது.
1955 மே 14 - ரஷ்யா, அல்பேனியா, பல்கேரியா, செக்கோஸ்லோவேகியா, ஹங்கேரி, போலந்து, ருமேனியா, கிழக்கு ஜேர்மனி ஆகிய நாடுகள் செய்துகொண்ட ''வார்சா ஒப்பந்தம்''.
1721 மே 15 - லண்டனில் முதன்முதல் இயந்திரத் துப்பாக்கி தயாரிப்பு ஆரம்பிக்கப்பட்டது.
1843 மே 16 - வணிக நோக்குடன் தந்தி அனுப்பும் முறை ஆரம்பிக்கப்பட்டது.
மே 17 - உலக தொலை தொடர்பு தினம்.
1953 மே 18 - அமெரிக்காவில் ஜோயூலின் கோக்ரேன் எனும் பெண் விமானி முதன்முதல் ஒலியை விஞ்சும் வேகத்தில் விமானத்தை ஓட்டிக் காண்பித்தார்.
1974 மே 18 - ராஜஸ்தானில் பொக்ரான் பாலைவனத்தில் இந்திய தனது முதல் அணுகுண்டு சோதனையை வெற்றிகரமாக நடத்தியது.
1498 மே 19 - நான்கு கப்பல்களுடனும் 170 மாலுமிகளுடனும் லிஸ்பனை விட்டுப் புறப்பட்ட போத்துக்கேய கடலோடி வாஸ்கொடகாமா, கள்ளிக்கோட்டையில் கரை இறங்கினார்.
1934 மே 19 - பல்கேரியாவில் ராணுவப் புரட்சி.
1506 மே 20 - அமெரிக்காவைக் கண்டுபிடித்த கொலம்பஸ் ஸ்பெயினில் காலமானார்.
மே 20 - கமரூன் நாட்டு தேசிய தினம்.
1904 மே 21 - அகில உலக கால்பந்துக் கழகம் பாரீஸில் துவங்கப்பட்டது.
1991 மே 21 - ராஜீவ்காந்தி ஸ்ரீபெரும்புதூரில் தற்கொலைக் குண்டுதாரியினால் கொல்லப்பட்டார்.
1885 மே 22 - பிரபல பிரெஞ்ச் எழுத்தாளரும் கவிஞருமான விக்டர் ஹியூகோ காலமானார்.
1972 மே 22 - இலங்கை சுதந்திரக் குடியரசு நாடாகியது.
மே 22 - கயானா நாட்டுத் தேசிய தினம். இலங்கையின் குடியரசு தினம்.
1785 மே 23 - இரு குவியக் கண்ணாடி பெஞ்சமின் ஃபிராங்ளினால் கண்டுபிடிக்கப்பட்டது.
1906 மே 23 - நோர்வே நாட்டு நாடகாசிரியரும் கவிஞருமான ஹென்றிக் இப்சன் காலமானார்.
1973 மே 23 - கவிஞர் கம்பதாசன் காலமானார்.
1543 மே 24 - நிக்கோலஸ் கோப்பர்நிக்கஸ் போலந்தில் காலமானார்.
மே 24 - கொமன்வெல்த் தினம்.
1903 மே 25 - ரேடியத்தைக் கண்டுபிடித்தது பற்றிய தனது ஆய்வுக்கட்டுரையை மேரி கியூரி பாரிஸ் பல்கலைக்கழகத்தில் சமர்ப்பித்தார்.
மே 25 - ஜோர்டான் சுதந்திர தினம். சூடான், ஆர்ஜென்டீனா நாடுகளின் தேசிய தினம்.
1679 மே 27 - ஹேபியஸ் கார்ப்பஸ் சட்டம் நிறைவேற்றப்பட்ட நாள். விசாரணையின்றி யாரையும் சிறையில் வைக்க முடியாது என்பதுதான் இச்சட்டத்தின் பொருள்.
1964 மே 27 - பண்டிட் ஜவஹர்லால் நேரு காலமானார்.
1961 மே 28 - 'சர்வதேச மன்னிப்புக் கழகம்' துவங்கப்பட்டது.
1953 மே 29 - நியூஸிலாந்தைச் சேர்ந்த எட்மண்ட் பேர்ஸிவல் ஹில்லாரியும், ஷெப்பா டென்சிங் நோர்கேயும் எவரெஸ்ட் உச்சியை முதன்முதல் சென்றடைந்தனர்.
1788 மே 30 - ''என் சிந்தனையை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்வதே என் தொழில்'' என்று கூறிய சிந்தனையாளர் வோல்டேர் பாரிஸில் காலமானார்.
1960 மே 30 - ரஷ்யக் கவிஞரும், நாவலாசிரியருமான போரிஸ் பாஸ்டர்நாக் காலமானார்.
1981 மே 30 - பங்களாதேஷ் ஜனாதிபதி ஸியாவுர் ரஹ்மான் படுகொலை செய்யப்பட்டார்.
1859 மே 31 - 'பிக்பென்' கடிகாரத்தின் மணியோசை லண்டனில் ஒலிக்க ஆரம்பித்த நாள்.
மே 31 - உலக புகையிலை மறுப்பு தினம். தென்னாபிரிக்கா குடியரசு தினம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்க்கை ஒரு நாடகமல்ல

மங்களம் விடியவிடிய அழுது கொண்டிருந்தாள். அவளது எண்ண அலைகள் எழுந்து மோதிக் கரைகாணாமல் அலைந்தன.

வாழ்க்கையை மகிழ்ச்சியாக்கிக் கொள்ள அவள் இதுநாள்வரை எடுத்துக் கொண்ட முயற்சிகள் எதுவுமே முற்றுப்பெறாமல் தொடர்ந்தன. தான் பெற்ற இரண்டு பிள்ளைகளையும் அவள் தனியாளாகவே நின்று வளர்த்துப் படிப்பித்து வாழவைப்பதில் அவளுக்கிருந்த கவனத்தால் நாட்கள் நகர்வதை அவள் உணராமலேயே போய்விட்டாள்.

மூத்தவன் பூரணன், இளையவள் பூரணி இரண்டு பிள்ளைகளுமே அவளருகில் எப்பொழுதோ உறங்கிப்போய் விட்டார்கள். காலம் எதனையும் காத்திருந்து பார்க்காமல் அவர்களது வயதையும், வடிவத்தையும் மாற்றிக்கொண்டே கரைந்து செல்கிறது. அவளது கண்கள் இரண்டும் தூக்கம் காணாது தவித்தன.

கண்கள் சொரியும் நீரைத் தடுக்க அவளால் முடியவில்லை.

அவள் நேசித்த உண்மைகள், அவளது வாழ்க்கையின் புனிதமான நாட்களில் தூசிபடியச் செய்ததை எண்ணி வேதனைப்பட்டாள். அவன் அவள் மீது அன்பு செய்வதாகச் சொல்லிய - எழுதிய வார்த்தைகளை நம்பி ஏமாந்து காதல் வசப்பட்டுக் கல்யாணமும் செய்து கொண்டாள்.

அவளையும், பிள்ளைகளையும் விட்டுப் பிரிந்துபோன கணவன் காசிநாதன் வேறொரு பெண்ணோடு வாழ்க்கை நடாத்துகிறான் என்பதைக் கேள்விப்பட்டபோது உள்ளம் உடைந்து போனாள்.

குழந்தைகள் இருவரினதும் இன்ப துன்பங்களைக்கூட எண்ணிப் பார்க்காமல் விலகிப் போனவனை எண்ணும்போதெல்லாம் கோபம் மேலெழுந்தாலும் காசிநாதன் மீது மங்களம் கொண்டிருந்த அன்பு-காதல் மங்களத்தை அவன்மீது அவனது செயற்பாடுகளுக்கு இடையூறாக இயங்க அனுமதிக்கவில்லை.

காதலித்துத் திருமணம் செய்து கொண்ட போது ஏற்பட்ட களிப்பும், திருமணமாகி இரண்டு செல்வங்களுக்குத் தாயானபோது ஏற்பட்ட சிறப்பும் வெகு விரைவில் சீரழிந்து போய்விடும் என்று அவள் எண்ணிப் பார்த்ததில்லை.

உறுதியுடன் பிள்ளைகளின் உயர்வுக்காய் உழைத்தாள். கணவன் திரும்பி வருவான் என்று காத்திருந்த மங்களத்திற்கு இன்று கிடைத்த செய்தி ''காசிநாதன் காலமாகி விட்டான்'' என்பதுதான்.

அமைதி குலைந்தவள், தூக்கம் கெட்டுப் போக விடியும்வரை விழித்திருந்தாள்.

கணவன் இறந்த செய்தியைக் கொண்டு வந்த சுப்பையரோ, காசிநாதனின் மரணச் சடங்கில் மனைவி மங்களத்தையும், பிள்ளைகளையும் சேர்த்துக் கொள்ள வேண்டுமே என்று விரும்பினார்.

இத்தனை ஆண்டுகள் மனைவி மங்களத்தையும், பிள்ளைகளையும் வெறுத்திருந்த காசிநாதனுக்கு இறுதிக் கிரியைகளைச் செய்யும் வகையில் புது மனைவியால் ஒரு வாரிசும் பிறக்கவில்லை.

இறுதிக் கிரியைகளை மகன் பூரணன் செய்வதே சிறப்பென்பதாய்க் கூறிப்போன சுப்பையரின் வார்த்தைகளில் மங்களத்திற்கு ஒரு உரிமை இருப்பதாய் உணர்ந்திருந்தாள். ஆனால் மரணச் சடங்கில் அதுவும் தனது வாழ்வைப் பிரித்த 'அந்த' வீட்டில் நடக்கும் மரணச் சடங்கில் கலந்து கொள்வதா?

அறிவு தெரிந்த நாள் முதலாய் தந்தையின் அன்பையோ, அரவணைப்பையோ அறியாமல் போன மகன் பூரணனால் அதனை ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

''அம்மா, எனக்கு நடிக்கத் தெரியாதம்மா? என்னால் இந்தச் செத்தவீட்டிற்கு போக முடியாது!..''

இத்தனை காலங்கள் கணவன் மனைவியாக வாழாமல் தனித்திருந்த மங்களத்தைப் பூரணன் தாயாகக் கண்டான். ஆனால் தந்தையாக வாழாத காசிநாதனின் மரணம் பூரணனுக்கு எந்தவித துயர உணர்வுகளையும் ஏற்படுத்தவில்லை.

இந்தச் செத்தவீட்டுககுப் போக வேண்டுமா? செத்த வீட்டின் இறுதிக் கடமைகளை மகன் பூரணன்தான் நிறைவேற்ற வேண்டுமா? என்ற கேள்விகள் பெரிதாக மங்களத்தின் சிந்தனையில் பல கிறுக்கற் கோலங்கள்.

பிரிந்து சென்ற காசிநாதன் ஒருமுறையேனும் மங்களத்தையும், பிள்ளைகளையும் திரும்பிவந்து பார்த்ததில்லை. புதுமணப்பெண்ணே சொர்க்கம் என்று அவளோடு-அவளின் கையசைப்பிற்குள் அடங்கிக் கிடந்தவனின் மரணச் சடங்கிற்குப் போவதா? விடுவதா? ஊருக்காக - உலகத்துக்காக எதனை? எவ்வாறு செய்வது? மங்களம் மனம் குழம்பினாள்.

தனக்குக் கணவனாக வாழாத காசிநாதன் பிள்ளைகளுக்குத் தந்தையாக ஆகிப்போனான் என்பதை அவளால் மறுக்க இயலவில்லை.

தந்தையின் செயற்பாடுகளால் அவமானத்திற்கு உள்ளாக்கப்பட்டுவிட்டதாக உறுதி செய்து கொண்ட பூரணன். ஊரார் தன் தந்தையின் மரணத்தைக் குறைகூறிய போதெல்லாம் அவை தன்னை ஏளனம் செய்வதாக எண்ணி வெட்கித்துப்போவான். அப்பா என்று ஒருமுறையேனும் அழைத்து மகிழ அந்தத் தந்தையை தன் தாயாரின் அருகில் அவன் அறிவறிந்த நாள்முதலாய்க் கண்டதில்லை.

''எனக்கு நாடகம் ஆடத் தெரியாதம்மா?'' என்று உறுதியாகக் கூறிவிட்டு உறங்கிப் போன பூரணனின் வார்த்தைகளால் மங்களம் உறக்கம் குலைந்து சிந்தனைச் சேற்றுக்குள் மூழ்கிக் கிடந்தாள்.

விடிந்ததும் தாயின் வேண்டுதலைப் புறக்கணிக்க முடியாமல் விழித்துக் கொண்ட பூரணன், தாயைப் பிரிந்து வாழ்ந்த தந்தையின் மரண ஊர்வலத்தில் கொள்ளிக்குடம் சுமந்தபடி இப்பொழுது நடந்து கொண்டிருக்கிறான்.

மங்களத்தின் உணர்வுகளில் அவளது வேண்டுதலின் நிறைவில் நடிப்பைக் காணாதவன் பூரணன்.

அன்னையின் அன்பில், அவளின் அரவணைப்பில் ஆறுதல் தந்த அவளின் வார்த்தைகளில் என்றுமே போலியைக் காணாதவன் பூரணன்.

தாயாரின் உணர்வுக்கும், உரிமைக்கும், மகிழ்வுக்கும் மதிப்பளித்து அவன் சுடுகாடு நோக்கி நடக்கும் வேகத்தில் பூரணமான வாழ்வின் நிறைவோடு அன்னையை நினைத்துக் கொண்டான்.

மங்களம் தனது மனையிலேயே தனித்திருந்து மனம்வெதும்பி அழுதாள்.

*''புல்லாய் பூடாய் புழுவாய் மரமாகிப் பல்விருகமாகி பறவையாய் பாம்பாகி.....''*

அந்த இறுதி ஊர்வலத்தைச் சோகமயமாக்கும் திருவாசகம் அந்தப் பாதையில் பரவி ஒலித்தது. ●

- நெடுந்தீவு மகேஷ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அது ஒரு காலம்

— சின்னத்தங்கச்சி —

''கந்தனுக்கு'' ''அரோகரா''
''வேலனுக்கு'' அரோகரா''
''முருகனுக்கு'' ''அரோகரா''
''வெற்றி வேல் முருகனுக்கு'' ''அரோகரா''

செல்வச் சன்னதி தேர்த்திருவிழா என்றாலே சுற்றியுள்ள அத்தனை கிராமங்களுக்கும் திருவிழா மாதிரித்தான். செல்வச் சன்னதி நோக்கிச் செல்லும் எல்லா வீதிகளும் அரோகரா சத்தத்துடன் கலகலத்துக் கொண்டிருக்கும். காவடிகளும், கரகங்களும், அவற்றைச் சுற்றி சனக்கூட்டமும் என்று அமர்க்களப்படும்.

காவடிகளிலேயே வேல்க்காவடி, பால்க்காவடி, ஆட்டக்காவடி, தூக்குக்காவடி என்று எத்தனையோ வகை. வேல்க்காவடிகளில் பின்னால் செடில் பிடிப்பவர்கள் உரு வந்து ஆடும் காவடிக்காரர்களின் ஆட்டத்துக்கு ஈடுகொடுக்க முடியாமல் தத்தளிப்பது வேடிக்கையாக இருந்தாலும் காவடி ஆடுபவரின் முதுகுத்தோல் பிய்ந்து செடில் பிடிப்பவரின் கையோடு வந்து விடுமோ என்ற பயமும் இருக்கும்.

சின்ன வயதில் இப்பிடிக் காவடிகள் ஆடிமுடிந்து எங்கள் சந்தியை விட்டு நகரும்போது நானும் என் நண்பர்களும் மயிலிறகு தேடி அந்த இடத்தைச் சல்லடை போடுவோம். கிடைத்த மயிலிறகுகள் புத்தகத்துக்குள் வைத்து அவை குட்டி பொரிக்காமல் போனது வேறு விடயம்.

காவடிகளுக்கு உரு ஏத்தும் உடுக்குச் சத்தமும் பறைமேளச் சத்தமும், மாட்டு வண்டிகளின் ஜல் ஜல் சலங்கை ஒலி அணிவகுப்பும், அந்த மாட்டு வண்டிகளின் கீழ்ப் பக்கத்தில் மங்கி எரிந்து ஆடிக்கொண்டிருக்கும் அரிக்கன் லாம்புகளும், இரவில் காவடிகளுக்கு வெளிச்சமூட்டி வரும் பெற்றோமாக்ஸ் விளக்குகளும், பாவாடை சட்டையில் மனதைப் பறிக்கும் விடலைப் பெண்களும், நெற்றியிலும் நெஞ்சிலும் திருநீறும் சந்தனமுமாக வெள்ளை வேட்டி சால்வை கட்டி பக்திப் பழங்களாக ஆண்களும் என்று தேர்த்திருவிழாவோடு சம்மந்தப்பட்டு மனதில் நிற்கும் விடயங்கள் பல.

அன்று பின்னேரம் என் நண்பன் விசயராசாவுடன் திருவிழா செல்லும் திட்டத்துடனிருந்த என்னைப் பாத்து, ''டேய் மேனே தோட்டத்துக்குப் போய் ஒருக்கா ஆடுகளை அவிட்டுக் கட்டிப் போட்டு வா.'' என்று சொன்ன அப்பையாவின் மேல் கோபமாகத்தான் வந்தது. இருந்தாலும் ஓடிப்போய் ஓடி வந்துவிட்டேன்.

ஏதோ பக்தி முத்தி முருகனைத் தரிசிக்கும் ஆவலில் திருவிழாவுக்குப் போக வெளிக்கிட்டவனல்ல நான். வேறென்ன வேடிக்கை பாக்கத்தான். இதையும் பச்சையாகச் சொன்னால் சரக்குப்பாக்க. பெட்டைகளை சைற்றடிப்பதற்கு எழுபத்தாறு எழுபத்தேழுகளிலான சங்கேத மொழி அது.

அப்ப எங்களுக்குப் படிப்பிச்ச மதியாபரணம் மாஸ்ரர் சொல்லுவார் ''நீங்கள் என்னடா கும்பிடவே கோயிலுக்குப் போறனீங்கள். பெட்டையளைப் பாக்கவும் நெரிபடவும்தானே''. மாஸ்ரருக்கு இல்லை என்று மறுத்தாலும் உண்மை அதுதான். விடலைப் பருவத்தில் இதற்கு விதி விலக்காய் யாருமிருந்தால் ஆச்சரியம்தான். எனக்கு அப்போது பதினெட்டு வயது நடந்து கொண்டிருந்தது.

மாஸ்ரர் சொன்னது போல் திருவிழாக் காலத்தில் சன்னதி கோயிலின் ஒரு வீதியில் நிண்டால் ஆற்றில் அடித்துச் செல்லப்படும் மரத்துண்டு மாதிரி அடுத்த வீதிக்கு நாங்கள் நடக்காமலே நெரிசலில் இழுத்துச் செல்லப்படுவோம்.

திருவிழாவுக்கு வேட்டி கட்டிப் போனால்தான் அழகு. கட்டைக் காற்சட்டையில் காலங்கழிக்கும் எனக்கு வேட்டிக் கட்டும் ஆசை வந்திருக்கக் கூடாதுதான். அழகாக மடித்து வைக்கப்பட்ட அப்பையாவின் எட்டு முழ வேட்டியை அக்காக்களின் துணையோடு சுத்திக் கட்டி பின்னர் நடந்தால்... எங்கே காலைத் தூக்கி வைக்க முடியவில்லை. பின்னர் அதை இரண்டாக மடித்து நாலு முழமாக்கி ஒருவாறு கட்டி முடித்தாலும் இடுப்பில் நிக்க மாட்டேனென்று அடம் பிடித்தது. வேறு வழியில்லாமல் சணல் கயிற்றால் கட்டி சேட்டை மேலால் விட்டுக்கொண்டு வெளிக்கிட்டேன். எங்கள் வீட்டு வாசல் படியில் வைத்து சின்னக்கா எதையோ என் வலக்கைக்குள் திணித்தா. என்னவென்று பாத்தபோது கொஞ்சம் சில்லறைக் காசுகள். நான் நிமிர்ந்து அக்காவைப் பாத்தேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



''சிலவுக்குத் தேவைப்படும் வைச்சிரடா'' என்றா.

மற்ற நாட்களிலென்றால் சைக்கிளில் போய்விடலாம். ஆனால் இன்றைக்கு அது சாத்தியமில்லை. தெருவெல்லாம் அடித்து விலகேலாத சனம். நாங்களும் ஏதாவதொரு காவடிக் கும்பலோடு பம்பலாகப் போக முடிவு செய்தோம்.

யாழ்ப்பாண வீதியிலிருந்து சீனி அண்ணையின் கரகக் காவடி வந்துகொண்டிருந்தது. சீனி என்பது சீனியர் என்பதன் சுருக்கம். அவருடைய பெயரே அதுதான். ஒவ்வொரு செல்வச் சன்னதித் திருவிழாவுக்கும் தவறாமல் கரகக் காவடி எடுப்பார். அவரோடு கூட அவரது மனைவி பவளம் அக்காவும் கரகம் தூக்குவா.

சீனி அண்ணையின் கரகம் பாப்பது எம்ஜிஆர் படம் பாக்கிற மாதிரி விறுவிறுப்பா இருக்கும். மனிசன் உரு வந்து நல்லாத் துள்ளித் துள்ளி ஆடும். சனமெல்லாம் அவற்ற கரகாட்டம் பாக்க முந்தியடிச்சு எட்டி எட்டிப் பாப்பினம். சிலபேர் பொன்னர் கடைத் திண்ணையில் நிண்டு பாப்பினம். இன்னும் சில பேர் பக்கத்தில நிக்கிற பெரிய பூவரசில ஏறியிடுவினம்.

பவளமக்காவும் சீனியண்ணைக்குச் சளைக்காமல் ஆடுவா. ஆடிக் கொஞ்ச நேரத்தில சீனியண்ண ஆடியபடியே ஒரு கையால் கரகத்தைப் பிடிச்சுக் கொண்டு மற்றக் கையை ஆவேசமா நீட்டுவார். முறுக்கின கயிற்றுச் சாட்டையோட ஆயத்தமா நிக்கிறவர் அவற்ற கையில சாட்டையால் அடிப்பார். சீனியண்ண இதென்னடா அடி எண்டமாதிரி மீண்டும் மீண்டும் நீட்டுவார். மறு பக்கத்தில் எரிந்துகொண்டிருக்கும் கற்பூரக் கட்டிகளை பவளமக்கா விழுங்கிக் கொண்டிருப்பா.

இந்தக் கரகக்காவடிக்குப் பின்னால் நாங்களும் நடையைக் கட்டி செல்வச் சன்னதி வந்து சேர்ந்துவிட்டோம்.

அங்கிங்கு கண்களைப் பாய விட்டு சன வெள்ளத்தோடு அடிபட்டு கோயில் வீதிகளும் கடை வீதிகளும் உலாத்திக் களைத்த நிலையில் ஓரிடத்தில் போய் அமர்ந்தோம். எங்களைச் சுற்றி குடும்பம் குடும்பமாக கூட்டம் கூட்டமாக சனக்கூட்டம் வெள்ளை மணல் வெறுந்தரையில் அமர்ந்திருந்தது.

எங்கு பாத்தாலும் அரோகராக் கோசமும், உடுக்கு, தாளம், சலங்கை, பறைமேளச் சத்தமும் இடைவிடாமல் கேட்டுக் கொண்டிருந்தது. ஒலிபெருக்கியில் இன்னார் இன்னாரைத் தேடுகிறார் இன்ன பெயருடைய குழந்தையைக் காணவில்லை. கண்டவர்கள் ஆலயக்காவல் நிலையத்துக்கு அழைத்து வரவும் அறிவித்தல்கள் ஓய்வின்றி ஒலித்துக் கொண்டிருந்தன. ஏராளமான ஆண் பெண் பக்தர்கள் பிரதான ஆலயத்தைச் சுற்றியுள்ள கரகரப்பான மண் வீதியில் அங்கப் பிரதட்சணம் செய்து தங்களை வருத்திக் கொண்டிருந்தது மனதுக்கு வலித்தது.

வாங்கிய கச்சான் சரையைப் பிரித்து கச்சானை உடைத்து சாப்பிட்டுக் கொண்டிருந்தபோது என் நண்பன் கேட்டான்.

''பாத்தியேடா?''

''என்னத்தையடா?''

''அந்தா அதிலயிருக்கிற அந்தக் கறுத்தப்பெட்டை உன்னைப் பாக்கிறாளடா.''

நண்பன் சிரித்துக் கொண்டே சொன்னான்.

எனக்குப் பருவத்தின் உந்துதல் இருந்தாலும் பெட்டைகளை ஏறெடுத்துப் பாக்க பயப்படுவேன். அன்றைக்கொருநாள் பள்ளிக்கூடம் விட்டு நடந்து வரும்போது மெதுவாக என்னை விலத்திக் கொண்டிருந்த ரூர் பஸ் ஒன்றில் முழுவதும் பெட்டைகள். ஓடும் பஸ்தானே என்ற துணிச்சலில் அதிலுள்ள ஒருத்தியைப் பாத்துக் கை காட்டினேன். அவள் ''தூ உன்ர மூஞ்சைக்கு'' என்று என்னை வெருட்டிப் பத்திரம் காட்டி பஸ்சோடு பறந்தாள். அதற்குப் பிறகு என்ற மூஞ்சை காதலிப்பதற்குத் தகுதியானதில்லையாக்கும் எண்ட சந்தேகத்தோடிருந்தேன்.

தயங்கியபடி நண்பன் சொன்ன திசை நோக்கிப்பாத்தேன். ஆண்களும் பெண்களுமாக ஐந்தாறு பேர் கொண்ட குடும்பத்தோடு அவள் இருந்தாள். கறுப்பெண்டாலும் அழகிதான். அல்லது அந்த வயதுக் கண்களுக்கு அப்படித் தெரிந்ததோ!

எனக்கென்றால் அவள் என்னைத்தான் பாக்கிறாளென்று உறுதி செய்ய முடியவில்லை. அந்த சந்தேகத்தை நண்பனிடம் தெரிவித்தேன்.

அவன் சொன்னான்.

''நான் முதல்லயிருந்தே கவனிச்சேன் மச்சான். என்னைத்தான் பாக்கிறாளாக்குமெண்டு நினைச்சு நான் அவளைப் பாத்தால் அவள் என்னை வெட்டி விட்டிட்டு உன்னைத்தானடா பாக்கிறாள். சந்தேகமெண்டால் நீ கொஞ்சம் தள்ளிப்போய் இருந்து பார் தெரியும்.''

அவன் சொன்னது சரிதான். நான் தள்ளி இருந்தபோது அவள் பார்வை என்பக்கம் திரும்பியது. அட என்னையும் ஒரு பெட்டை பாக்கிறாளே என்று தலை கால் புரியாத மகிழ்ச்சி எனக்கு. மேற்கொண்டு என்ன செய்வதென்று விளங்கவில்லை. எனது நண்பன் காதல் கணையெறிதல்களில் ஏற்கனவே அனுபவப்பட்டவன். அவனுடைய உதவியோடுதான் காயை நகர்த்த வேண்டும் என்று தீர்மானித்து மீண்டும் அவனிடம் வந்தேன்.

''நீ சொன்னது உண்மைதான் மச்சான்.''

''நான் சொன்னால் பிழைக்குமேயடா! இப்பிடி எத்தனை பெட்டையளைப் பாத்தனான்.'' அதற்குள் அவனுக்கு வீறாப்பு.

''சரி இப்ப நான் என்னடா செய்ய வேணும்? கண்ணடிச்சுப் பாக்கட்டேயடா?'' அந்த நேரத்து ஆவலில் அப்படிக் கேட்டேன்.

''என்ன கண்ணடிக்கப் போறியோ? எங்கயோ காட்டானாக்குமெண்டு நினைச்சு உன்னைப் பாக்கிறதையே விட்டிடுவாள். அதோட நீ கண்ணடிக்கிதை பக்கத்தில இருக்கிற அவளின்ர தமையன் பாத்தால் உன்ர கண்ணுமிருக்காது...'' பழம் திண்டு கொட்டை போட்டவன் போல் சொன்னான்.

பிறகும் அவன்தான் சொன்னான்.

''நீயும் சாடைமாடையா அவளைப் பாரடா. ஆனால் யாருக்கும் சந்தேகம் வராமல் பார். அதோட மெல்லிசா ஒருக்காச் சிரிச்சுப்பார். அவளும் பதிலுக்குச் சிரிச்சால் லைன் கிளியர் எண்டு அர்த்தம்.''

''பிறகு?''

''டேய் ஒவ்வொண்டாத்தான் சொல்லித் தரலாம். முதலில சொன்னதைச் செய்.''

**தெருவெல்லாம் அடித்து விலகேலாத சனம். நாங்களும் ஏதாவதொரு காவடிக் கும்பலோடு பம்பலாகப் போக முடிவு செய்தோம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் அவளுடைய முகத்தைப் பாத்தேன். அவளும் கண் வெட்டாமல் என்னைப் பாத்தாள். எனக்குள் நான் அறிந்திராத ஏதேதோ புதிய மாற்றம்... மனதுக்குள் பொங்கிப் பொங்கி வருவதாக இன்பம். ஆகா ஒரு பார்வை என்னை என்னவாய் களிப்பூட்டுகிறது!

மென்மையாக புன்னகைத்தேன். பதிலுக்கு அங்கிருந்தும் ஒரு மொட்டு பூவாகியது. பாரதிராஜா படங்களில் வருவதுபோல் அப்போது ஆயிரம் புறாக்கள் சிறகடித்தன.. வெள்ளைநிற தேவதைகள் இறங்கி வந்தனர்... அடடா இதுதான் காதலா?...

''மச்சான் சிரிச்சிட்டாளடா''. ஏதோ நூறுமீற்றர் ஓடிக்களைத்தவன் போல் சந்தோச உச்சத்தில் வார்த்தைகள் துண்டு துண்டாய் விழுந்தது.

''டேய் இதுக்கே இப்படிச் சந்தோசப்படுகிறா அங்க பாரேன் இன்னும் என்னென்ன நடக்குதெண்டு.''

அவள் தனக்குப் பக்கத்தில் உள்ளவளின் குழந்தையை வாங்கி வைத்திருந்தாள்.

என்னைச் சாடையாகப் பாத்தபடியே அந்தக் குழந்தையைக் கொஞ்சினாள். அதன் கன்னங்கள், நெத்தி என்று மாறி மாறி அன்போடு அழுத்திக் கொஞ்சினாள்.

''விளங்குதேயடா என்ன நடக்குதெண்டு? என்னுடைய நண்பன் கேட்டான்.

''என்ன நடக்குது அவள் குழந்தையைக் கொஞ்சிறாள்.'' நான் அப்பாவியாகச் சொன்னேன்.

''அவள் குழந்தையைக் கொஞ்சேல்லயடா மடையா உன்னைத்தான்.''

''என்னையோடா?''

''பின்ன உன்னை நேரடியாகக் கொஞ்ச முடியுமே?''

நண்பன் இப்படிச் சொன்ன பின்னர் அவள் குழந்தையைக் கொஞ்சும்போது என் உடம்பெல்லாம் கூசியது. நான் பட்டும் படாமலும் அந்த முத்தங்களை அனுபவிப்பதுபோல் பாசாங்கு செய்ய குழந்தைக்கு மேலும் மேலும் முத்தங்கள் கிடைத்தன. முத்தத்தில் திண்டாடிய குழந்தையை 'இண்டைக்கு இவளுக்கு என்ன நடந்தது!' என்று அவளை வினோதமாகப் பாத்தபடியே பறித்தாள் அதன் தாய்.

எனக்கென்றால் நம்ப முடியவில்லை. இத்தனை இலகுவாய் என்னை ஒருத்தி பார்ப்பாள் எண்டதையும், ஒரு பெண்ணே முன்வந்து இப்படியெல்லாம் நடந்து கொள்வாள் எண்டதையும்.

''என்ன மச்சான் பெட்டையள் எல்லாத்துக்கும் வெக்கப்படுவாளவை எண்டு கேள்விப்பட்டிருக்கிறேன். இவள் என்னடா இப்படி இருக்கிறாள்?'' சந்தேகத்தை நண்பனிடம் கேட்டுவிட்டேன்.

''பொம்பிளையளட்ட வெக்கம் இருக்கிறது உண்மைதானடா. அதேநேரத்தில ஆம்பிளையளை விட பொம்பிளையள்தானடா துணிச்சல்.'' ஏதோ பெண்களைப் பற்றி பி.எச்.டி செய்தவன் போல விளக்கம் தந்தான்.

பார்வை, புன்முறுவல், பின் தொடர்தல் என்று அவளைச் சுற்றியே அந்த இரவு விரயமானது.

அவளும் அவளைச் சார்ந்தவர்களும் வீடு செல்வதற்காக பஸ்சில் போய் அமர்ந்தாகிவிட்டது. போதுமான பயணிகள் சேர்ந்ததும் பஸ் புறப்பட்டுவிடும்.

இந்தக் காதல் இந்த இரவுடனே முடிந்துவிடுமோ? இந்த பஸ் புறப்பட்டதும் அதோடு சேர்ந்து என் காதலும் பறந்து விடுமோ? அவள் யார்? எந்த ஊர்? என்ன பேர்? எதுவுமே தெரியாது. எங்கே அவளை நெருங்க முடியாமல்தான் அவளுடைய குடும்பம் அரணாக இருக்கிறதே!

ஏன்தான் பெட்டையளோடு அவர்களுடைய குடும்பத்தினரும் வந்து கழுத்தறுக்கிறார்களோ என்று எரிச்சலாக இருந்தது.

பெண்களை சுதந்திரமாக விட்டால்தான் என்ன என்ற புரட்சிகர எண்ணம்கூட அப்போது தோன்றியது.

பஸ் புறப்படுவதற்கு முன்னர் அவளுடைய பெயரையாவது கேட்டுவிட வேணுமே என்று தவிப்பாக இருந்தது. அதை நண்பனிடம் சொன்னபோது,

''ஏன்ரா ஒட்டகப்புலத்துக்குப் போய் புக்கை கட்டப் போறியே? நீ அவளட்டப் பேரைக் கேட்டால் பக்கத்தில இருக்கிற அண்ணன் உன்ர பல்லை உடைப்பான்.''

''டேய் பகிடி விடாமல் ஏதாவது உருப்படியாச் சொல்லடா.''

''அதெல்லாம் சின்ன விசயம் மச்சான். உன்ர அட்ரசை அவளட்டக் குடுத்தால் கடிதம் போடுவாள்தானேயடா.''

''அட்ரசைக் குடுப்போம் மச்சான் ஆனால் என்ர வேண்டாம்.''

''ஏன்ரா?''

''அவளின்ர கடிதம் வீட்ட வந்தால் மீசை முளைக்க முதல் காதலோ எண்டு கேட்டு அப்பரிட்ட அடிதான் வாங்க வேணும்''.

''சரி அப்ப என்ரயைக் குடுப்போம். என்ர கடிதத்தை வீட்டில ஒருதரும் உடைக்க மாட்டினம்.''

முகவரி எழுதப் பேனை வேண்டுமே. சன்னதி கோயிலுக்கு வருபவர்கள் யார் பேனை கொண்டு வரப்போகிறார்கள்! பக்கத்தில் நின்றவர்களிடம் விசாரித்தபோது எங்களை ஒரு மாதிரிப் பார்த்தார்கள். என் நண்பன் சுழியன். பஸ் கொண்டக்டரிடமிருந்து ஒரு மாதிரி பென்சில் இரவல் வாங்கிவிட்டான். பேப்பர் கிடைப்பது அதிகம் சிரமமாக இருக்கவில்லை. நிலத்தில் எங்கும் கச்சான், பூந்தி சரை கட்டிய பேப்பர்கள் சிதறிக் கிடந்தன.

அவள் யன்னலோர இருக்கையில்தான் அமர்ந்திருந்தாள். முகவரி எழுதிய துண்டை அவளிடம் கொடுப்பதற்கான லாவகமோ துணிச்சலோ என்னிடம் இல்லை. அதனால் என் நண்பனே அதையும் செய்தான். அவளும் எங்களுடைய எண்ணத்தை தெரிந்தவள் போல் யன்னலுக்கு வெளியே கைகை நீட்டியது அவனுடைய வேலையை இலகுவாக்கியது.

அவளைக் கொண்டு பஸ் ஓடியது. இதயம் போகுதே என்று பாடியபடி என் மனது அதன் பின்னால் ஓடியது.

அவள் கடிதத்தை எதிர்பாத்து அங்கலாய்த்தபடியே நான்கு நாட்கள் நகர்ந்து விட்டன. ஐந்தாவது நாள் வாயில் புன்னகையும் கையில் கடிதமுமாக என் நண்பன் வந்தான். ஒதக்குப்புறம் தேடி பின் வளவுக்கு ஓடினோம்.

கடிதத்தைக் கையில் வாங்கும்போது உடம்பு புல்லரித்தது. ஒரு பெட்டை கடிதம் போடுவதென்றால் சும்மாவா!

**பள்ளிக்கூட பிரதான வாசலுக்கு எதிர்ப்புறமிருந்த தேத்தண்ணிக் கடையின் திண்ணையில் அவள் வரவுக்காகத் தவமிருந்தோம். கடைக்காரர் ஒரு நமட்டுப் பார்வை பார்த்தார்.**






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கடிதத்தை விரித்தபோது...

அதில் குண்டு குண்டாக அழகான எழுத்துகள். பெண்களுக்கு எப்படித்தான் இப்படி அழகான கையெழுத்து வாய்க்கிறதோ!

அவளுக்கு என்னைப் பாத்தது சந்தோசமாம். மத்திய மகா வித்தியாலயத்தில் எட்டாம் வகுப்பு படிக்கிறாளாம். என்னை மேலும் சந்திக்க விரும்புகிறாளாம். இது தான் கடிதத்தின் சாரம்.

அடுத்த நாள் மாலை. இருவரும் ஒரு சைக்கிளில் அந்தப் பள்ளிக்கூடம் நோக்கிப் பறந்தோம். பாடசாலை விடுவதற்கு ஒரு மணித்தியாலம் முன்னதாகவே போய்விட்டோம். பள்ளிக்கூட பிரதான வாசலுக்கு எதிர்ப்புறமிருந்த தேத்தண்ணிக் கடையின் திண்ணையில் அவள் வரவுக்காகத் தவமிருந்தோம். கடைக்காரர் ஒரு நமட்டுப் பார்வை பார்த்தார்.

''என்ன தம்பிமார் பெட்டையளைப் பாக்க நிக்கிறியளோ?'' கடைக்காரக் கிழவன் இங்கிதமில்லாமல் நேரடியாகவே கேட்டுவிட்டார்.

''இல்லையப்பு எங்கட ஒரு சினேகிதனைப் பாத்துக்கொண்டு நிக்கிறோம்.''

''டேய் டேய் எனக்கு புலுடா விடாதயுங்கோ உங்களை மாதிரி எத்தனை பேரைப் பாத்திருக்கிறேன்.''

'பேசாமல் கிடவடா கிழவா.' எண்டு சொல்லத்தான் வாய் உன்னியது. ஆனால் அவளை நாம் பாப்பதற்கும் அவள் இலகுவாய் எங்களைக் கண்டு கொள்ளவும் ஏற்ற இடம் அதுதான் என்பதால் கிழவனோடு கொழுவாமல் அடக்கி வாசித்தோம்.

பள்ளிக்கூடத்தின் கடைசி மணி அடித்தது. இவளவு நேரமும் நிலாக்கால கடல் போல் அமைதியாக இருந்த பள்ளிக்கூடம் புயலில் பொங்கியெழும் கடலின் ஆர்ப்பரிப்பாக மாறியது. ஒரே சிரிப்பும் கும்மாளம் கூச்சலுமாக மடைதிறந்த வெள்ளம் போல மாணவ கூட்டம். இடையிடையே தெட்டம் தெட்டமாக ஆசிரியர்கள். சீறிப் பறக்கும் சைக்கிள்களிலிருந்து இடைவிடாத மணிச்சத்தம் காதுகளைப் புண்ணாக்கியது.

மற்றவர்களின் சந்தேகப் பார்வை எங்கள் மீது விழுந்துவிடுமோ என்ற சங்கடத்தோடு ஒவ்வொரு முகமாகப் பாத்து அவளைத் தேடினோம். எல்லாப் பெட்டைகளும் வெள்ளை நிறச் சட்டையில் கும்பல் கும்பலாக எம்மைக் கடக்கும்போது எல்லா முகங்களையும் ஒரே நேரத்தில் கவனிக்க முடியாமல் திணறிப் போனோம்.

''மச்சான் உனக்கு அவளின்ர முகம் ஞாபகம் இருக்குத்தானேயடா?'' என் நண்பனிடம் கேட்டேன்.

''ஏன்ரா அவள் உன்னைத்தானேயடா பாத்தவள் உனக்கு ஞாபகமில்லையோ?''

''ஒரே ஒரு நாள் தானேயடா பாத்தது. அதால சரியா ஞாபகமில்லையோ எண்டு சந்தேகமா இருக்கடா. எந்தப் பெட்டையைப் பாத்தாலும் இவளா இருக்குமோ எண்ட எண்ணம் வருகுது'' என்று நான் சொல்லிக்கொண்டிருக்கும் போது அவள் வந்து கொண்டிருந்தாள். அவளோடு அவளொத்த சில மாணவிகளும் நல்ல பருத்த தேகம் கொண்ட ஒரு ஆசிரியையும்...

அவளும் எங்களைப் பார்த்துவிட்டாள். மெல்லிதாக ஒரு புன்னகை வெளிவந்திருக்க வேண்டுமென்று நினைக்கிறேன். சரியாக அனுமானிக்க முடியவில்லை. எங்களைக் கடந்து அவள் அவர்களோடு நடந்துகொண்டிருந்தாள்.

'அடிப்பாவி வாறதுதான் வந்தாய்... அதுக்கு ரீச்சரோடயோ வருவாய்' என் மனம் அவள் மேல் செல்லமாக கோபித்தது.

அவர்களை சிறிதுதூரம் போக விட்டு பின்னால் நாம் சைக்கிளில் தொடர்ந்தோம். நண்பன் சைக்கிள் ஓட நான் முன்பக்க பாரில் உட்காந்திருந்தேன். மெதுவாக ஓடியும்கூட சைக்கிள் அவர்களுக்குச் சமீபமாக போய்விட்டது. அவள் சட்டென்று திரும்பி மெல்லிதாக ஒரு புன்னகையை என்மீது வீசிவிட்டு மீண்டும் நல்ல பிள்ளைபோல் ரீச்சரோடு முன்நோக்கி நடந்தாள். நாம் சைக்கிள் என்பதால் அவளைக் கடந்து சொல்ல வேண்டிய நிர்ப்பந்தம்.

''என்னடா இவ்வளவுதானேயடா? எப்பிடியும் அவளோட கதைக்க வேணுமே மச்சான்.''

''எதுக்கும் கொஞ்சத் தூரம் போயிட்டு திரும்பி வருவோமடா. சிலவேளை அவளோட கூடவாறவை இடையில போயிட்டால் கதைக்கவும் சந்தர்ப்பம் கிடைக்கலாம்.'' நண்பன் நம்பிக்கை தெரிவித்தான்.

சிறிதுதூரம் போய் திரும்பிவந்தோம். அவளோடு வந்த மாணவிகளில் சிலர் குறைந்திருந்தார்கள். ரீச்சர் இன்னும் கூட நடந்து கொண்டிருந்தார். இரண்டு மூன்று தடவை இப்படிப் போய்ப் போய் வந்து கொண்டிருந்தோம். கதைப்பதற்கான சந்தர்ப்பம் வாய்க்கவில்லை.

ஆலமரத்தடியில் நின்று பம்பலடித்துக் கொண்டிருந்த கொசப்புக் கூட்டத்துக்கு எங்கள்மேல் சந்தேகப் பார்வை விழுந்து விட்டதுபோல் தோன்றியது.

''மச்சான் அவங்கள் கண்டிட்டாங்கள் போல கிடக்கடா. பேசாமல் திரும்பிப் போவோமா?''

''டேய் இதுக்கெல்லாம் பயந்தால் ஏலுமேயடா?'' நண்பன் துணிவாகக் கதைத்தான்.

''மச்சான் இவங்கள் பொல்லாத ஆக்கள். பிறகு அடிவாங்கக் கட்டாதடா.'' எனக்குப் பயம் பிடித்துக் கொண்டது.

நான்காவது தடவையாக நாம் திரும்பி வந்துகொண்டிருந்தபோது அவளுடன் ஒரே ஒரு மாணவி மட்டும் மிச்சமிருந்தாள். இதுதான் தருணம் என்று நினைத்தபோது பிள்ளையார் கோயில் பக்கமிருந்த நடை பாதையில், பிரதான வீதியைவிட்டு இறங்கி நடந்தார்கள். ஆகா இது இன்னும் நல்ல சந்தர்ப்பமடா என்று எமக்குள் கதைத்தபடி சைக்கிளை அவர்கள் பின்னே செலுத்த முற்பட்ட போது பின்னால் நான்கைந்து பேர் கைதட்டிய சத்தம் கேட்டது.

திரும்பிப் பார்த்து, மலைத்துப் போனோம். ஆல மரத்தடியில் நின்ற அதே தடியன்கள் எங்களைக் கை காட்டிக் கூப்பிட்டார்கள்.

''மச்சான் நிலமை பிழையடா, திருப்படா சைக்கிளை'' என்று நான் சொல்லி முடிப்பதற்குள் நண்பன் சைக்கிளைத் திருப்பிவிட்டான். முன்னால் இருந்த நானும் இடது காலால் பெடலை மிதித்துக் குடுக்க சைக்கிள் பறக்கத்தொடங்கியது.

''இனிமேல் இந்தப் பக்கம் உங்கட தலைக் கறுப்புத் தெரியக் கூடாது.'' என்று அவர்கள் கத்திச் சொன்னது தேய்ந்தபடி எங்கள் காதில் விழுந்தது. ●

**அவர்களை சிறிது தூரம் போக விட்டு பின்னால் நாம் சைக்கிளில் தொடர்ந்தோம். நண்பன் சைக்கிள் ஓட நான் முன்பக்க பாரில் அமர்ந்திருந்தேன்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமுது குறுக்கெழுத்துப் போட்டி-01

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | 2 | | 3 | 4 | 5 | | ■ | 6 |
| | ■ | | ■ | 7 | | | ■ | 8 | |
| 9 | | | 10 | | ■ | | ■ | 11 | |
| | ■ | ■ | 12 | | 13 | | 14 | ■ | ■ |
| 15 | | 16 | | ■ | 17 | | | 18 | ■ |
| ■ | ■ | | ■ | 19 | | | ■ | 20 | 21 |
| 22 | 23 | | 24 | | ■ | ■ | 25 | | |
| 26 | | | | | ■ | 27 | | | |
| | ■ | | ■ | 28 | | | | ■ | |
| 29 | | | | ■ | ■ | 30 | | | |

அமுதின் முதல் குறுக்கெழுத்துப் போட்டி இது. ஆதலால் மிகச் சுலப மாக இதை அமைத்திருக்கிறோம். கட்டங்களை நிரப்பி மே மாதம் 20ம் திகதிக்கு முன்னதாக எமக்குக் கிடைக்கும்படி அனுப்பி வையுங்கள். சரியாக நிரப்பி அனுப்பியோரின் பெயர் விபரத்தைப் பிரசுரிப்போம். உங்கள் உற்சாகத்தைப் பொறுத்து இனிவரும் போட்டிகள் உங்கள் சிந்தனைக்கு மேலும் மேலும் சவாலாக அமையும்படி அமைத்துக் கொள்ளலாம். ஐமாயுங்கள்!



### இடமிருந்து வலம்:

1. ஒளி கொடுக்க உருகுவது மெழுகுவர்த்தி
ஒருகுடைக்கீழ் உலகாளுவது ---
8. உறவின் அடக்கம் திரு
உயிரின் தொடக்கம் ---
9. கொள்ள வேண்டாம் ஆத்திரம்
அள்ள, வேண்டும் ---
11. தொடர்ந்து வெல்ல முன்னேறியது படை
தோடுடைய செவியன் ஏறியது ---
12. வயலை உழுபவன் கமக்காரன்
வாழ்க்கைத் துணை இழந்தவன் ---
15. நீரின்றி அமையாது உலகம்
நெற்றியில் இடுவது ---
17. பிறர் மனம் நோகச் சிரியாதே
பெரியோர்க்குத் தரவேண்டும் ---
25. எங்களிடையேயும் சுத்தல்காரர் மயம்
இதை எடுத்துச் சொல்லவும் நமக்கு ---
27. கடித்தால் இனிக்கும் கரும்பு
கண்ணே நீ என்னை ---
30. காதலித்தால் இவ்வுலகம் இன்பம்
கைகூடாமல் போய்விட்டால் ---

### வலமிருந்து இடம்:

20. இளமையின் வேகம் தெரி
இரும்பையும் விழுங்கி ---
28. வீட்டுக்கு வருவது விருந்து
நோய்க்குத் தருவது ---

### மேலிருந்து கீழ்:

1. மனம் விட்டுச் சிரிக்க வைத்தால் முசுப்பாத்தி
மாவைப் பிசைந்து வாட்டி எடுத்தால் ---
2. பசுமலம் எரியுண்டால் விபூதி
பார்வை இருளுண்டால் ---
3. வாத்தியார் அடிப்பதற்கு பிரம்பு
வயலைப் பிரிப்பதற்கு ---
6. சொல்லிய கருமம் துணிய மூதுரை
பள்ளிச் சிறுவர் அணிய ---
8. மண்ணும் கடலும் சேர்ந்ததுதான் புவி
மரத்துக்கு மரம் தாவுவது ---
10. ரூபாவில் நூறு சதம்
பாதையில் ஓடுவது ---
13. அனுமன் நெஞ்சில் வைத்தது ராமரை
ஆதவன் வந்தால் மகிழ்வது ---
16. எண்ணெயும் இளநீரும் உடைத்தூற்று(ம்)
என்னை இறைவா நீ ---
18. விழுந்தவுடன் வளர்வது விதையின் வீரியம்
விழுந்தாலும் எழ நமக்கு வேண்டும் ---
19. உடைந்ததை ஒன்றாய் பொருத்து
வளைந்தது வாழை ---
21. ரகசியம் வெளியானால் அம்பலம்
சிவந்த மண் நிலமானால் ---
22. மூளையில் உதிப்பது எண்ணம்
முடியோ கறுப்பு ---
23. குருவை பணி
கோபத்தை ---
25. மழையில் நனைந்தால் வருவது தடுமன்
உடம்பு கொழுத்தால் வருவது ---
27. உழவுக்கு கிடைத்தது எருது
திறமைக்கு கிடைத்தது ---


### தலைகீழாக வருவது:

4. மண்ணில் இறங்குவது வேர்
மண்ணாய் இறுகியது ---
14. உனைப் பார்த்த பிறகு ஊன் வேண்டேன்
உற்றாரும் பெற்றாரும் --- வேண்டேன்
24. வம்படிப்பது வாயாடிகள் வேலை
--- பிடிப்பது முத்தெடுக்கத் தேவை

### குழம்பி வருவது:

5. ஆண்டிகளின் வீடுகளில் தரித்திரம்
அரசர்களின் வாழ்க்கைதானே ---
7. வாய்க்கு ருசிப்பதற்கு அரிசிச் சம்பா
வானரசன் ரசிப்பதற்கு அழகு ---
19. நாலு காலில் நிற்கும் கதிரை
நாலு காலில் பறக்கும் ---
22. உனக்கும் எனக்கும்தான் பொருத்தம்
இதில் எத்தனை கண்களுக்கு ---
26. மூத்தண்ணன் மனைவி மூத்தண்ணி
தேநீரோ நம் பேச்சில் ---
29. சுறுசுறுப்பானது எறும்பு
சுட்டிப்பையனோ ---


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நான் சினிமா இயக்குனர் ஆனபோது...



**ஜெயகாந்தன்**

''என்னுடைய ஸ்கிரிப்ட்டை எக்ஸிகியூட் செய்வதற்கான திறமை எனக்கு போதாது. அதற்கான பொறுமையும் கிடையாது என் பது டைரக்ஷன் செய்து நான் பெற்ற அனு பவம். சினிமாவில் நானும் காலடி வைத் தேன். my first step! இதைதமிழில் 'முதல் அடி' என்றும் மொழி பெயர்க்கலாம். அந் தத் துறையிலே அடி நானும் வாங்கினேன், கொடுத்தேன். அதைப் பற்றியெல்லாம் இப் போது நினைத்து பார்த்தால் சந்தோஷப்பட வும் பகிர்ந்து கொள்ளவும் நிறைய விஷ யங்கள் இருக்கின்றன.



சிறு வயதிலே கூட நான் சராசரியான சினிமா ரசிகனாக இருந்ததி ல்லை. படங்களை தேர்ந் தெடுத்து தான் பார்ப்பேன், ரசிப் பேன். கம்யூனிஸ்ட் கட்சியினுடைய தலை மை அலுவலகம் அன்று தரமான ஆங்கிலப் படங் களைத் திரை யிடும் ஒரு தியே ட்டரின் அருகில் இருந்தது. நல்ல நல்ல படங்கள் வரும். "Gone with the wind" பட த்தை அங்குதான் பார்த்தேன். அதுபோல் எத்தனையோ நல்ல படங்களை பார்க்கும் வாய்ப்பு அங்கே எனக்கு கிடைத்தது. அவை எல்லாம் மேனாட்டுப் படங்கள். பிரிட்டிஷ் படங்கள், அமெரிக்கப் படங்கள். எப்போதே னும் இத்தாலியப் படங்கள் வரும். அப்படி ஒரு அந்நிய சினிமா மோகம் ஒரு காலத் தில் எனக்கு ஏற்பட்டது. அதுபோல அவற் றுடன் தமிழ் சினிமாவை ஒப்பிட்டுப் பார்த்த போது எனக்கு வெட்க உணர்ச்சியே மே லோங்கியது...

நல்ல சினிமா என்பது நல்ல புத்தகம் போல என்பது என் கருத்து! நல்ல படங் களைப் பார்த்து தான் படம் சம்பந்தப்பட்ட என் அறிவை வளர்த்துக் கொண்டேன். எனது அறிவு புத்தகங்கள் படித்து வந்தது இல்லை. ஷேக்ஸ்பியரையும் சார்ள்ஸ் டிக் கன்ஸையும், ஆஸ்கார் வைல்டையும், டென் னசி வில்லியம்ஸையும், ஆர்தர் மில்லனை யும் நான் படங்கள் வழியேதான் பயின் றேன். ஏனென்றால் எனது இளமைக்காலம் படங்களின் யுகமாக இருந்தது. ஆனால் தமிழ் சினிமா அன்றும் இன்றும் அதே கீழ் நிலையிலேயே இருக்கிறது. நமது சரித்தி ரப் பெருமையையோ நம் மண்ணின் கலா சாரப் பெருமையையோ அவை எடுத்துச் சொல்ல முன்வந்ததில்லை. அதைப்பற்றி நமது தமிழ் சினிமா ஏதாவது பேசியிருக்கு மேயானால் அவை வெற்றுப் பம்மாத்துக்க ளாகவே இருக்கின்றன...

தமிழ் சினிமாவைப் பொருத்தவரை ஒரு விமர்சகனாகத் தான் இருந்தேனே தவிர, அதன் மீது மோகம் கொண்டவனாகவோ அதனோடு சம்பந்தப்பட வேண்டும் என்ற உந்துதல் உணர்ச்சி உடையவனாகவோ நான் என்றும் இருந்ததில்லை. ஆனால் ஒரு வேலையில்லாத இளைஞன் எதற்கும் ஆசைப்படுவான் அல்லது அவனை எதற்கு வேண்டுமானாலும் அனுப்புவதற்கு யாரேனும் உந்தித் தள்ளிக் கொண்டே இருப்பார்கள். அப்படி என்னைத் தள்ளியபோது ஒரு பதி னேழு, பதினெட்டு, பத்தொன்பது வயதில் நாடகம் சினிமா என்ற அரங்கங்களுக்குள் நான் திரிந்ததுண்டு. நாடகத்தில் வேஷம் போட்டதுண்டு, நடிக்க வரவில்லை. நடிப்பு ஒரு விசித்திரமான கலை என்று நான் கண்டு கொண்டேன்.

மற்ற கலைகளை போல அதற்கொன்றும் இலக்கணம் இல்லை, அவனவன் விதித்தது தான் இலக்கணம் இங்கே. மேனாடுகளில் எல்லாம் அதற்கும் இலக்கணம் வைத்திருக் கிறார்கள். இந்தப் பள்ளியிலேயிருந்து இவர் கள் வந்தவர்கள் என்று கூட ஒரு படத் தைப் பார்த்து சொல்லிவிட முடியும்...

சி னி மா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதாரணமாக ஸ்டானிலாவ்ஸ்கி ஸ்கூலிலிருந்து வந்தவர்கள், ஷேக்ஸ்பியரின் ஸ்கூலிலிருந்து வந்தவர்கள்... இந்த நாட்டின் இந்தப் பள்ளியிலிருந்து வந்தவர்கள் இவர்கள் என்றுகூட ஒரு படத்தைப் பார்த்து சொல்லி விட முடியும். நடிப்பதை ஒரு கலையாக்கி, அதற்கு இலக்கணம் வகுத்து பயிற்சி தந்து என்று பல துறைகளிலும் விஞ்ஞான பூர்வமாகச் சினிமா அங்கு வந்திருப்பது அங்கே நேர்ந்த வளர்ச்சியின் பயன்கள்.

அப்பொழுது முன்னணியிலிருந்த ஒரு டைரக்டர், 'நீங்கள் அற்புதமாக கதை எழுதுகிறீர்கள். அதுபோலல்ல சினிமா. வெள்ளைக் காகிதத்தில் பேனா பிடித்து கறுப்பு ஆக்குவது போல அல்ல சினிமா! உங்கள் கதையையே நீங்கள் சினிமா எடுத்துப் பார்த்தால் தெரியும் அந்த அனுபவம்' என்றார். அப்படியா செய்யலாமே! என்று யோசித்தேன். எனக்கு நண்பர்கள் உண்டு. எனது நண்பர்கள் எனக்காக என்ன வேண்டுமானாலும் செய்வார்கள். ஆறேழு நண்பர்கள் சேர்ந்து ஒரு லட்ச ரூபாய் வசூலிப்பது என்று தீர்மானித்தோம். என் நண்பர்களில் பண வசதி உள்ளவர்கள் அதிகம் கிடையாது. அப்படியொரு பெரிய தொகை திரட்டுவது சிரமம்தான். படம் எடுக்க வேண்டும் என்ற தாகம் எப்போது பார்த்தாலும் என்னிடம் பல்லை இளித்து கொண்டே இருந்தது.

அப்போது ஒரு பெரிய புரெடியூசர் என்னைப் பார்க்கும் போதெல்லாம் சொல்லுவார். நீங்க மட்டும் டைரக்ட் பண்றதுக்கு முடிவு பண்ணிங்கன்னா ரொம்ப நல்லா இருக்கும்...

ஐயையோ, டைரக்ஷன் பத்தியெல்லாம் எனக்கு ஒண்ணும் தெரியாதே. கதை வேணும்னா எழுதித் தரேன் என்று நான் சொன்னேன். அந்த நம்பிக்கை எனக்கு பிறிதொரு சமயம் வந்தது. 'உன்னைப் போல் ஒருவன்' என்ற ஒரு கதை எழுதினேன் ஆனந்தவிகடனிலே. ஏற்கனவே ஒருவர் சினிமா எடுத்துப் பார் என்று எனக்கு சவால் விட்டதும், டைரக்ட் செய் என்று இந்த புரொடியூசர் நம்பிக்கை தந்ததும்... சினிமாவை மனதில் கொண்டே அந்தக் கதையை எழுதி வைத்தேன். எல்லாக் கதையையும் நான் அப்படி எழுதுவதில்லை. அந்தக் கதையை அந்த பெரிய புரொடியூசரிடம் போய் சொன்னேன். ஆகா அற்புதமான கதையாச்சே! செய்ய வேண்டியதுதான் என்றார்.

ஒரு வேலை என்றால் நான் ராட்சசன் மாதிரி செய்வேன். இரவு பகலாக உட்கார்ந்து ஸ்கிரிப்ட் எழுதினேன். அதைப் படித்துக் காட்டும்படி சொன்னார்கள். படித்துக் கொள்ள வேண்டியதுதானே? படித்துக் காண்பிப்பதென்ன? சரி அப்படித்தான் பழக்கம் என்றால் என்ன செய்வது? வேறொருவரை படிக்கச் சொன்னேன்.

கேட்டால்தானே? இட்லி சாப்பிடுவதென்ன? காப்பி குடிப்பதென்ன? சிகரட் பிடிப்பதென்ன? இந்த கூத்தில் ஸ்கிரிப்ட் படிப்பது வேறு! It is an insult! இது ஒரு அவமதிப்பே! அந்த பெரிய புரொடியூசர் சாப்பிட்டுக் கொண்டே கதை கேட்டதுமல்லாமல், படம் பூராவும் சமைப்பதும் சாப்பிடுவதுமாக இருக்கிறதே என்று வேறு சொன்னார். அடடே. அப்படியா? இந்த வாழ்க்கையின் லட்சியமே அதுதானே! என்றேன்...


இந்தக் கதையை நம்பி நான் பணம் போட்டா, அதை நான் திருப்பி எடுக்கணுமில்லை? என்று கேட்டார். ரொம்ப அர்த்தமுள்ள கேள்வி. ''சந்தோஷம் வருகிறேன்'' என்று பெரிய கும்பிடு போட்டுவிட்டு புறப்பட்டு விட்டேன்.

'உன்னைப் போல் ஒருவன்' திரைப்படம் தயாரிப்பதற்காக நண்பர்கள் துணையுடன் எண்பதினாயிரம் ரூபாய்தான் திரட்ட முடிந்தது. செலவு பண்ணினால் இடிக்கும் போலிருந்தது. ஆயிரம் ரூபாய்க்கு மேல் நான் யாருக்கும் கொடுக்கவில்லை. நடிகர்கள், டெக்னீஷியன்கள் எல்லோருக்கும் தலா ஆயிரம் ரூபாய்தான். அதுவும் இரண்டே மாதத்தில் கொடுத்தேன். யாருக்கும் பாக்கியெல்லாம் கிடையாது. சேரிக்கு சென்று படம் எடுப்பதற்கு பதிலாக நான் ஸ்டுடியோவிற்குள்ளேயே ஒரு சேரியை உருவாக்கினேன். பிறகு புரிந்தது அது அவசியம் இல்லையென்று. உண்மை மாதிரித்தான் இருக்க வேண்டுமே ஒழிய உண்மையே கலை அல்ல.

முதல் ஷுட்டிங்கின் போது எல்லாம் ரெடி உங்களுடைய ஆர்டருக்காகக் காத்திருக்கிறோம் என்றார்கள். எப்படி ஆர்டர் செய்வது என்ன ஆர்டர் செய்வது என்று எனக்குப் புரியவில்லை. டைரக்டராக நடிக்க ஆரம்பித்தேன். என்னுடைய உதவியாளரைக் கூப்பிட்டு take the shot என்று ஆர்டர் கொடுத்தேன். ''லைட்ஸ் ஆன்.... கிளாப் - இன்... ஸ்டார்ட் கேமரா.... ஆக்ஷன்.... கட்....'' என்றார். முடிந்தது.

டைரக்ஷன் என்பது இவ்வளவுதானா? இவ்வளவு மட்டும் இல்லை. இவ்வளவுதான் என்றால் சினிமா இப்படித்தான் இருக்கும்".

***- திரைப்பட கருத்தரங்கு ஒன்றில் ஜெயகாந்தன் பேசியதிலிருந்து...***




பொன்னம்பலம் 'அம்மையப்பன்' படத்தில் கதாநாயகனாக நடித்ததைத் தொடர்ந்து சண்டை இயக்குனர் கனல்கண்ணன் 'டியூப் லைட்' என்ற படத்தில் கதாநாயகனாக நடிக்கிறார். 'சேரன் பாண்டியன்' படத்தில் சண்டை இயக்குநராக அறிமுகமானவர் கனல்கண்ணன். தெருக்கூத்து கட்டியகாரன் வேடத்தில் படம் முழுக்க நகைச்சுவை பாத்திரமாக வருகிறாராம். ஜோடி புதுமுகம் சந்தோஷி. முழுக்க முழுக்க திரைப்படக் கல்லூரி மாணவர்களின் கூட்டு முயற்சி இது.



மர்மதேசம், ரமணி vs ரமணி, நிம்மதி உங்கள் சாய்ஸ் அண்ணாமலை... பல சின்னத்திரை தொடர்களில் நடித்த தேவதர்ஷினி மற்றொரு சின்னத்திரை நடிகரான சேத்தனை திருமணம் செய்துகொண்டிருக்கிறார். பொள்ளாச்சியில் மர்மதேசம் ஷுட்டிங் நடந்து கொண்டிருந்த போதே காதலிக்க ஆரம்பித்த இருவரும் பின்னர் தொலைபேசிக்கூடாக காதலை வளர்த்து திருமணம் செய்து கொள்வது வரை வந்திருக்கிறார்கள். தேவதர்ஷினி குடும்பம் ஆந்திராவைச் சேர்ந்தது. சேத்தன் குடும்பம் கர்நாடக மாநிலத்தைச் சேர்ந்தது. ஆனாலும் வெகுகாலமாக தமிழ் நாட்டிலிருக்கும் இரு குடும்பமும் இவர்கள் காதலுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை. டும் டும் டும் கொட்டி விட்டார்கள். சேத்தனின் அண்ணன் ஒருவர் லண்டன் பெண் ஒருவரை காதலித்து கல்யாணம் செய்தவராம்.

## ஆனந்த் பக்ஷி



பிரபல ஹிந்தித் திரைப்படப் பாடலாசிரியர் ஆனந்த் பக்ஷி மார்ச் 30ம் திகதி காலமானார். 1958ல் 'பலா ஆத்மி' படத்தில் ஆரம்பித்து இன்றைய 'யாதே', 'மொஹபத்' வரைக்கும் அவர் எழுதிய பாடல்கள் நாலாயிரத்துக்கும் மேலாம். 'ஆராதனா', 'மிலன்' போன்ற படங்கள் இவரை காதல் கவிஞராக உலகுக்கு பறைசாற்றின. அந்தக் காலத்தில் காதல் மன்னனாக கருதப்பட்ட ராஜேஷ் கன்னா தன்னுடைய படங்களில் ஆனந் பக்ஷியின் பாட்டுக்கள் இருக்க வேண்டுமென்று பிடிவாதமாக இருப்பாராம். 60களில் இவரது பாட்டு ஒன்றாவது இடம்பெற்றால் போதும் அந்தப் படம் சூப்பர் ஹிட்டாகும் என்ற நம்பிக்கை பாலிவூட்டில் இருந்தது. 1920ல் பாகிஸ்தானில் பிறந்த இவர் சுதந்திரத்திற்கு முன் ராணுவத்தில் கடமையாற்றியவர்.



சி னி மா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்




☛ அர்ஜுன் இயக்கி நடிக்கும் 'ஏழுமலை' படத்தில் அறிமுகமாகிறார் கஜாலா. இவர் 'யூனிவர்சிட்டி' என்ற படத்திலும் நடித்து வருகிறார். இதற்கு முன் தெலுங்கில் இரண்டு படங்களில் நடித்து ஆந்திர ரசிகர்களின் கனவுக்கன்னியாக திகழ்பவர். மும்பையை சேர்ந்த கஜாலாவுக்கு ஆந்திராவில் தெருவுக்குத்தெரு ரசிகர் மன்றம் உண்டாம். 'ஏழுமலை' படத்தின் கதாநாயகி சிம்ரன். மும்தாஜ், விஜயகுமார், ஆஷிஸ் வித்யார்த்தி ஆகியோர் நடிக்கிறார்கள். ஆந்திராவில் எழுபது வருடகால சரித்திரத்தை முறியடித்து சாதனை படைத்த 'நரசிம்மா நாயுடு' என்ற படத்தின் ரீமேக்தான் 'ஏழுமலை'.

☛ பஞ்ச தந்திரத்தைத் தொடர்ந்து 'அன்பே சிவம்' படத்தில் நடிக்கிறார் கமல்ஹாசன். மலையாளத்தின் பிரபல இயக்குநர் பிரியதர்ஷன் முதன்முறையாக தமிழில் நேரடியாக இயக்கும் இப்படத்தில் முதல்முறையாக கமலுடன் இணைந்து மாதவன் நடிக்கிறார்.

☛ தங்கர் பச்சான் இயக்கும் அடுத்த படம் 'சொல்ல மறந்த கதை'. கதாநாயகனாக நடிப்பவர் மற்றுமொரு பிரபல இளம் இயக்குநரான சேரன். நாஞ்சில் நாடனின் 'தலைகீழ் விகிதங்கள்' நாவல்தான் படத்தின் கதை. சொல்ல மறந்த கதையை அடுத்து தங்கர் பச்சான் இயக்கப் போகும் படம் 'கோமாளி'. இதில் அவரே ஹீரோவாகவும் நடிக்கிறார். 'அழகி' படத்தைத் தொடர்ந்து அவர் படங்களை வாங்குவதற்கு விநியோகஸ்தர்கள் கியூவில் நிற்கிறார்களாம்.




☛ 'இரவுப் பாடகன்', 'ப்ளஸ்', 'துள்ளுவதோ இளமை', 'கண்ணும் கண்ணும் கொள்ளையடித்தால்', போன்ற படங்களில் இளைஞர்களை உலுப்பப் போகும் கும்தாஜின் சொந்தப் பெயர் லக்ஷ்மியாம். எல்லாம் மும்தாஜ் கலக்கலால் வந்த வினை. கும்தாஜுக்கு ஹொக்கி, கூடைப்பந்து, நீச்சல், குதிரையேற்றம் என்று அனைத்தும் அத்துப்படி. பரிசுகள் கூட வாங்கியிருக்கிறார். மும்பையில் நடனக்குழுவில் ஒருவராக ஆடிக்கொண்டிருந்தவர் தமிழில் மும்தாஜ் லெவலுக்கு உயரும் ஆசையில் கால்பதித்திருக்கிறார்.




☛ 1980ல் நிழல்கள் படத்திலிருந்து 1996ல் புன்னகை மன்னன் வரை தங்கள் இசைக்கூட்டினால் கலக்கிய இளையராஜா - வைரமுத்து கூட்டணி பிறகு கருத்து வேறுபாட்டால் பிரிந்தார்கள். 16 வருடங்களுக்குப் பிறகு தயாரிப்பாளர் ஜீவியின் புதிய படத்தில் இருவரும் இணைகிறார்கள். விஜயகாந்த் கதாநாயகனாக நடிக்கும் இப்படத்தை இயக்கப் போகிறவர் 'சித்தி' சின்னத்திரைத் தொடர் புகழ் சி.ஜே.பாஸ்கர்.

☛ இன்றைய தினத்தில் இளைஞர்களின் தேசிய கீதமாகியிருப்பது 'ஜெமினி' படப் பாடலான 'ஓ... போடு'. இதையே புதிய படம் ஒன்றிற்கு பெயராக வைத்திருக்கிறார்கள். சிம்ரனும் ரீமாசென்னும் நடிக்கிறார்கள். படத்தை தயாரிப்பவர் சமீபத்தில் காலமான மோனல் உட்பட குஷ்பு, மும்தாஜ், அபிராமி, அப்பாஸ் என பல நட்சத்திரங்களுக்கு மனேஜராக இருக்கும் வி.கே. ரியாஷ் அஹமட். இயக்கம் ராம்பிரசாத்.



☛ கறுப்பழகி நந்திதா தாஸ் உலகப்புகழ் கறுப்பழகியாகவும் நடிக்கவிருக்கிறார். அதாவது கிளியோபாட்ரா வேடத்தில் மலையாளப் படம் ஒன்றில் நடிக்கிறார். படத்தின் பெயர். 'கண்ணகி'.

☛ கே. பாலசந்தர் பல நடிக நடிகையரை அறிமுகப்படுத்தியிருக்கிறார். இவரது கவிதாலயம் படநிறுவனம் அமீர்ஜான், விசு ஆகியோரை இயக்குனர்களாக அறிமுகப்படுத்தியது. அவ்வகையில் பாலசந்தர் புதிதாக அறிமுகப்படுத்தும் இயக்குனர் வசந்தபாலன். இவர் ஷங்கரிடம் உதவி இயக்குநராக ஜென்டில்மேன் படத்திலிருந்து முதல்வன் வரை பணிபுரிந்தவர். இவர் இயக்கும் 'ஆல்பம்' பட நாயகன் சூர்யன் ராஜேஸ். தெலுங்கில் பிரபல இயக்குநரான ஈ. வி. சத்யநாராயணனின் மகன். நாயகி அனிதா 'வருஷமெல்லாம் வசந்தம்' படத்தில் நடித்துக் கொண்டிருப்பவர். நகைச்சுவைக்கு 'நந்தா' புகழ் கருணாஸ். இசைக்கு இளையராஜா வாரிசு கார்த்திக் ராஜா.

☛ சினிமா உலகில் பிரபல நடிகர் நடிகைகளின் பெயரில் பத்திரிகை ஆரம்பித்து காசு சேர்த்துக்கொள்வது வாடிக்கைதான். புதிதாக வந்திருப்பது மும்தாஜ் ரசிகன். இது தமிழில் மட்டுமல்ல. தெலுங்கு, ஆங்கிலத்திலும் வரப்போகிறதாம்.

☛ நடிகைகளில் சிம்ரனுக்குத்தான் கார் பைத்தியமாம். சந்தையில் எந்தப் புது கார் வந்தாலும் வாங்கிவிடத் துடிப்பாராம். இருப்பிடத்தை மட்டுமல்ல அடிக்கடி கார்களையும் மாற்றிக்கொள்வாராம். மாருதி, ∴போர்ட், பென்ஸ், இப்போது வாங்கியிருப்பது டொயோட்டா. இதுபோல கமலும் ஒரு கார் பிரியர். 'லாங்கூஸ்' என்ற உயர்ரக சொகுசுக் கார் ஒன்றை வைத்திருக்கிறார். அத்தோடு இப்போது புதிதாக 30 இலட்ச ரூபாவுக்கு 'லூஸிடா' கார் ஒன்றை வாங்கியுள்ளார். இந்தக் காரினுள்ளேயே வீடியோ தியேட்டர் ஒன்றையும் அமைத்து வைத்திருக்கிறார்.




சி
னி
மா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


பிரியா கில்

☛ 'ரெட்' பட நாயகி பிரியா கில் ஆங்கிலத்தில் எழுதி வைத்துக் கொண்டே தமிழ் வசனங்களுக்கு வாயசைத்தாராம். அடுத்த தமிழ் படத்திற்கு வாய்ப்புக் கிடைத்தால் நிச்சயம் தமிழ் கற்றுக் கொள்வேன் என்கிறார்.


'கும்மாளம்' ரத்தி

☛ கும்மாளம் படத்தில் அறிமுகமாகும் ரத்தி, படம் வெளிவருவதற்கு முன்பே பிரபலமாகிவிட்டார். பல பட வாய்ப்புகள் அவரைத் தேடி வந்துவிட்டன. அதில் ஒன்று பாரதிராஜாவின் படம். இப்படத்தில் ரத்திக்கு ஜோடி சபாநாயகர் காளிமுத்துவின் மகன்.

☛ நாசர் தயாரித்து இயக்கி வரும் 'பாப்கார்ன்' படத்தின் கதை கிட்டத்தட்ட இளையராஜாவின் வாழ்க்கை. கிராமத்தில் இசைக்கருவிகளை வாசித்து பிழைக்கும் இளைஞன் சென்னைக்கு வந்து முறைப்படி சாஸ்திரிய சங்கீதமெல்லாம் கற்று மிகப்பெரிய இசையமைப்பாளராவது. இந்த தந்தையின் கதைக்கு இசையமைப்பவர் தனயன் யுவன் சங்கர் ராஜா. மோகன்லால் நாயகனாக நடிக்கும் இப்படத்தில் அறிமுகமாகும் தன் தங்கை ஜோதிக்கு அம்மாவாக நடிக்கிறார் சிம்ரன்.

☛ சாக்ஷி தமிழில் அறிமுகமான படம் பிரபு நடித்த 'மாப்பிள்ளை கவுண்டர்'. அதில் தொடங்கி விட்டுவிட்டு வந்தாலும் அர்ஜுனின் 'வேதம்' படத்துடன் ஒரு நீண்ட சுற்றை முடித்துவிட்டார். ஒல்லிக்குச்சியாக அறிமுகமாகிறவர்கள் இரண்டு படத்திற்குப் பிறகு உப்பிப்போன உழுந்துவடை மாதிரியாகி அக்கா, அண்ணி, அம்மா வேடங்களுக்கு வந்துவிடுவார்கள். ஆனால் சாக்ஷி விதிவிலக்கு. அறிமுகமான அதே உடற்கட்டோடு இப்போது சரத்குமாரின் 'மானஸ்தன்' படத்தில் நடித்து வருகிறார்.

☛ சினிமா வட்டாரத்தில் பார்த்திபனுக்கு பெயர் 'மிஸ்டர் வித்தியாசம்'. இவர் தனது அடுத்த படத்திற்கு வைத்திருக்கும் பெயர் 'இவன்'. பார்த்திபனுக்கு ஜோடிகளாக மீனாவும் செளந்தர்யாவும் நடிக்கிறார்கள். படத்தில் 15 வில்லன்கள். இசை விமர்சகர் சுப்புடு அதே பாத்திரத்திலேயே நடிக்கிறார். ஒளிப்பதிவாளராக பி. சி. ஸ்ரீராமின் உதவியாளர் **பவுஸியா பாத்திமா** அறிமுகமாகிறார். இசை இளையராஜா. 'வித்தியாச' பார்த்திபன், டைட்டில் கார்ட்டில் கதை, திரைக்கதை, **கிறுக்கல்,** இயக்கம் என்று தான் போடப் போகிறாராம்.


சாக்ஷி

☛ பிரியதர்ஷன் இயக்கத்தில் ஷாம், த்ரிஷா ஜோடி நடிக்கும் 'கண்மணி நீ வரக் காத்திருந்தேன்' படத்தின் கதை 'சம்மர் இன் பெத்லகேம்' மலையாள படத்தினுடையதாம்.

☛ வாய்ப்புகள் எதுவுமின்றி இருக்கும் சாக்லேட் பட நாயகி ஜெயாரே, 'ஏ நீ ரொம்ப அழகாயிருக்கே' படத்தில் ஒரு பாடலுக்கு நடனமாடுகிறார்.

☛ பாலிவூட் பக்கம் போய் நீண்டகாலம் தமிழில் காணாமல் போயிருந்த அகத்தியன் தமிழில் இயக்கும் புதிய படத்தின் பெயர் 'அன்பே வா'.

☛ பிரசாந்த் அடுத்து நடிக்கும் 'ஜெய்' படத்திலும் ரவுடி வேடம்தானாம். அதற்காக எக்கச்சக்கமான பயிற்சிகள் செய்து உடம்பை மேலும் ஏற்றியிருக்கிறாராம். படத்தை இயக்கப் போவது அப்பா தியாகராஜன்.

☛ 'காதல் பூவே' படத்தில் கதாநாயகியாக அறிமுகமாகும் பானுவின் ஆசை சில்க் ஸ்மிதா, மும்தாஜ் வரிசையில் இடம் பிடிப்பதுதானாம். இவர் கதாநாயகியாக நடிக்கும் படம் வெளிவருவதற்கு முன்பே ராமராஜனின் 'பொன்னான நேரம்' படத்தில் ஒரு பாடல் காட்சிக்கு கவர்ச்சி நடனமாடினார். அவ்வளவுதான் சூடு பிடித்து விட்டது. இப்போது தெலுங்குப் படங்களில் கவர்ச்சிப் புயல் கிளப்பிக் கொண்டிருக்கிறார். பானுவின் தாயாரும் நடனப் பெண்மணிதான். புலியூர் சரோஜாவின் நடனக் குழுவில் இருந்தவர். அண்ணன் பாபுவும் நடனக்காரர் தான். தனியாக ஒரு நடனக் குழுவை நடத்தி வருபவர்.


பானு





த்ரிஷா

☛ 'வருஷமெல்லாம் வசந்தம்' படத்தில் நடிகர் மனோஜுக்கு டப்பிங் குரல் கொடுப்பவர் சின்னத்திரை நடிகர் விஷ்வா. 'கடல் பூக்கள்' படத்தில் மனோஜுக்கு டப்பிங் குரல் கொடுத்தவர் நடிகர் ரஞ்சித். சொந்தக் குரல் சரிவராததால் தான் டப்பிங் கொடுக்கும் பெண்ணின் காதல் வலையில் விழுந்திருக்கிறார் போலும்.

☛ உடைகள் விஷயத்தில் இயக்குநர் எள் என்றால் எண்ணெயாக இருக்கிறாராம் **'எனக்கு 20 உனக்கு 18'** படத்தின் நாயகி த்ரிஷா. மிகக்குறைந்த உடையோடு காலுக்குமேல் கால் போட்டுக்கொண்டு இவர் படப்பிடிப்பு தளங்களில் இருப்பதைப் பார்த்து யுனிட்டே ஜொள்ளில் மிதக்கிறதாம்.

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மோனல்



ஏராளமான பணம், பொருள், புகழ் மற்றும் ஏனைய எல்லாம் பெற்றிருந்தும் ஏதோ ஒருவகையில் நடிகைகள் அமைதியையும் மன நிம்மதியையும் தேடுகிறவர்களாகவே இருக்கிறார்கள். சராசரிப் பெண்களுக்குக் கிடைக்கின்ற சுதந்திரமும் நிம்மதியும் அவர்களுக்குக் கிடைக்க வாய்ப்பில்லை. நாளும் ஆடிப் பாடி நடித்து அரிதாரம் பூசி சலித்துப் போன அவர்கள், அன்பில் திளைத்து, அந்த அன்பைக் காட்டுபவர்களிடத்தில் அடிமையாக நினைத்ததில் தவறில்லை. அதைப் பயன்படுத்திக்கொள்ளும் சக்திகள் அன்பு காட்டுவதாக நடித்து சில நிர்ப்பந்தங்களையும் மனமுறிவையும் அவர்களுக்கு உண்டாக்குவதன் மூலமாகவும் அப்பெண்கள் காலத்தை முடித்துக்கொள்ளும் நிலைக்குத் தள்ளப்படுகிறார்கள்.



நடிகை ஷோபா, காதல் வலையில் சிக்கி சிற்சில வேண்டத்தகாத நிகழ்வுகளுக்குப் பிறகு தான் ஏமாற்றப்பட்டுவிட்டோமோ என்ற எண்ணத்திலேயே தன் வாழ்க்கையை முடித்துக் கொண்டார்.

சில்க் ஸ்மிதா. தமிழ்த் திரையுலகின் கவர்ச்சிப் பாதையில் தனக்கெனத் தனி இடம்பிடித்து அதனை தான் சாகும் தறுவாயிலும் தக்க வைத்துக் கொண்டிருந்தவர். அவரும் தன் ஆண் துணையுடன் ஏற்பட்ட மனவேறுபாட்டின் காரணமாகவே தற்கொலை செய்து கொண்டார் என்று இன்றுவரை நம்பப்படுகிறது.

பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பு வெற்றிகரமான கதாநாயகியாக இருந்து ஒரு நோயின் காரணமாக இரு கால்களும் செயலற்றுப் போய்விட்ட போதிலும் மனம்தளராது போராடி மீண்டும் இயல்பு நிலைக்குத் திரும்பியவர் நடிகை விஜி. திரும்பி சில படங்களிலும் சின்னத்திரையிலும் மீண்டும் முத்திரை பதிக்கத் துவங்கும் முன்பே தமிழ் இயக்குனர் ஒருவரின் அன்புப் பிடியில் சிக்கி அங்கும் எழுந்த மன வேறுபாட்டால் தூக்கில் தொங்கினார். இரு கால்களையும் இழந்திருந்த காலத்தில் அவருக்கிருந்த மன உறுதியில் துளியேனும் வாழ்க்கையை முடித்துக் கொள்ள அவர் எத்தனித்த நொடியில் அவருக்கு இல்லாமல் போனது வியப்பு.



சிம்ரனின் தாய்

பிரதியுஷா காதல் பிடியில் சிக்கி தான் எதற்கு சாகிறோம் என்று தெரியாமலேயே முடிந்து போனார். இன்று வரையில் அவரின் மரணம் குறித்தான உண்மை கண்டு பிடிக்கப்படவே இல்லை. இந்த முடிவின் ஈரம் காயும் முன்பே நடந்திருக்கிறது அடுத்த அவலம்.

சிம்ரனின் புகழ் நிழலின் உதவியோடு அறிமுகமானார் மோனல். வெற்றிகரமான கதாநாயகியாக இல்லாவிட்டாலும் தன் கவர்ச்சியாலும் முயற்சியாலும் அந்த இடத்தைப் பிடிக்க முனைந்திருந்த வேளையில் அவரின் இந்த திடீர் முடிவுக்குக் காரணம் புரியாமல் திரையுலகம் தடுமாறிக் கொண்டிருக்கிறது.

காதல் கிசுகிசுக்களும் இல்லாத நிலையிலும் சொந்த வாழ்க்கையில் தோல்வி ஏதும் அறியப்படாத நிலையிலும் நிகழ்ந்திருக்கிற அவரின் தற்கொலை, தற்கொலைதானா என ஐயப்பட வைக்கிறது.



சி
னி
மா

☛ தேவயானியின் தம்பி **நகுல்** ஷங்கரின் 'பாய்ஸ்' படத்தில் ஐந்து நாயகர்களில் ஒருவராக அறிமுகமாகிறார். ஏனையவர்கள் **சித்தார்த்** (இவர் மணிரத்தினத்திடம் உதவி இயக்குநராக இருந்தவர்), **பரத்** (மேடை நடனக்குழு ஒன்றில் பிரபல நடனக்காரராக இருந்தவர்), **மணிகண்டன்** (கலா நடனக்குழுவில் இருந்தவர்), **சாய் ரகுமான்** (ஹாரிஸ் ஜெயராஜிடம் ட்ரம்மராக இருந்தவர்). இவர்களுடன் மும்பை இறக்குமதி **ஹரிணி** நாயகியாக அறிமுகமாகிறார். 'பாய்ஸ்' பட துவக்கவிழாவின்போது அப்படத்தில் நாயகர்களாக நடிக்கும் ஐந்து புதுமுக இளைஞர்களும் மேடையில் தத்தம் திறமைகளைக் காட்டினார்கள். தேவயானியின் தம்பி நகுல் 'வராக நதிக்கரை ஓரம்' பாடலைப் பாடினார். விஷேசம் என்னவென்றால் இவர் பாடியபோது மேடைக்கெதிரே அமர்ந்திருந்த ஒரு வி.வி.ஐ.பியின் மகளது கண்கள் இவரையே விழுங்கிக் கொண்டிருந்ததாம். இருவரும் ஒருவரையொருவர் பார்வைகளால் திருடிக்கொண்டார்கள்.



பாடி முடித்ததும் நகுல் கீழே இறங்கி முதல் வேலையாக அந்தப் பெண்ணிடம் சென்று கைகுலுக்கி பாராட்டுக்களை பெற்றுக் கொண்டாராம். இந்தப் பெண்ணின் அக்கா தாடிக்கார இயக்குனரின் மகனை காதலிக்கிறார் என முன்பு செய்தி வந்தது. இப்போது அதிகம் பேசாத இந்தப் பெண் தேவயானியின் தம்பியிடம் மயங்கியிருப்பதாகத் தெரிகிறது. இந்த நால்வருமே ரஜினியின் மனைவி லதா நடத்தும் . தி ஆஸ்ரமம் பள்ளியின் மாணவர்கள். இப்போது தெரிந்திருக்கும். தெரியாவிட்டால் அக்கா பெயர் ஐஸ்வர்யா, தங்கை பெயர் சவுந்தர்யா.



நகுல்

☛ தேவயானியின் அண்ணன் **மயூர்** புதிய படம் ஒன்றில் கதாநாயகனாக நடிக்கிறார்.

☛ ஷங்கரின் 'பாய்ஸ்' படத்தில் ஐந்து ஹீரோக்கள் அறிமுகமாகிறார்கள் என்றால் வசந்தின் 'ஏ நீ ரொம்ப அழகா இருக்கே' படத்தில் ஐந்து இசையமைப்பாளர்கள் அறிமுகமாகிறார்கள். அதிலும் இரண்டு இரட்டையர்கள். ஆகவே மொத்தம் ஏழுபேர். அரவிந்த் - ஷங்கர், முருகவேல், ஸ்ரீநிவாஸ், ராகவ் - ராஜா, ரமேஷ் விநாயகம் ஆகியோரே அந்த எழுவரும். படத்தைத் தயாரிப்பவர் ஜீ.வி.

☛ காதல் மன்னனாக படங்களில் வலம்வந்து கொண்டிருந்த மாதவன் ஆக்ஷன் ஹீரோவாக மாறியிருக்கும் படம் 'ரன்'. கதாநாயகியாக மூன்மூன் சென்னின் மகள் ரெய்மா சென் நடிப்பதாக இருந்தது. இவர் 'அட்ஜஸ்ட்' பண்ணத் தெரியாதவர் என்று ஹீரோவால் குற்றம் சாட்டப்பட்டு நீக்கப்பட்டார். இப்போது அவருக்குப் பதிலாக வயது 18ஐத் தாண்டாத மீரா ஜாஸ்மின் நடிக்கிறார். இந்தக் கேரளக் கிளி மலையாளத்தில் ஒரு படம் நடித்த கையோடு தமிழுக்கு வந்திருக்கிறது. இயக்கம் 'ஆனந்தம்' லிங்குசாமி.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நோயற்ற



எஸ். ஜெகதீசன் எம்.பி.பி.எஸ்

இப்போது நாளுக்கு நாள் புதுப்புது வியாதிகள் பெருகிக் கொண்டு வருகின்றன. இருந்தாலும் அவற்றைக் குணப்படுத்த மருத்துவ சிகிச்சைகளும் நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டு வருகிறது.

சுமார் 30, 35 வருடங்களுக்கு முன்னால் மருத்துவத் துறையில் இருந்த சிகிச்சை முறைகள் மிகவும் குறைவுதான். ரத்தப் பரிசோதனை, சிறுநீர்ப் பரிசோதனை,எக்ஸ்ரே.. என்ற அளவில்தான் அப்போது சிகிச்சை முறைகள் இருந்து வந்தன.

ரத்தப் பரிசோதனையில் கூட 7 அல்லது 8 விதமான சோதனைகளே இருந்தன. ஆனால் இப்போதோ ஏராளமான பரிசோதனை முறைகள் அறிமுகமாகி விட்டன. ரத்தப் பரிசோதனையிலேயே, ஒருவருக்கு வந்திருப்பது என்ன வியாதி என்பதைத் தெரிந்து கொள்ளுமளவுக்கு ரத்தப் பரிசோதனை முறை வளர்ந்துள்ளது.

இதையும் தவிர அதிநவீன எலக்ட்ரோனிக் உபகரணங்களும் வழக்கத்திற்கு வந்திருக்கின்றன. சிகிச்சையில் புதிய முறைகளும், அவற்றிற்கு உதவியாக புதிய கருவிகளும் கண்டுபிடிக்கப்படுவது மேலும், மேலும் அதிகரிக்குமே தவிர, குறைந்து விடாது. இதைப் புரிந்து கொள்பவர்கள் நிச்சயமாக சந்தோஷப்படுவார்கள்.

இப்போது 'Master Health Checkup' - என்ற முறை அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது. இது மிகவும் பயனளிக்கக்கூடியது. சில தனியார்நிறுவனங்கள், தங்கள் நிறுவனத்தில் பணிபுரிபவர்களில் 50 வயதிற்கும் மேற்பட்டவர்களுக்கு, இந்த Checkupஐ செய்து கொள்ளும் வசதியை அளித்து வருகின்றன. இதை உயர்ந்த நோக்கம் என்றுதான் சொல்ல வேண்டும். சரியாகச் சொல்வதென்றால் வருடத்திற்கு ஒரு முறை 2 மணி நேரத்தை இந்தப் பரிசோதனைகளுக்காக செலுத்தினால் போதும். இரத்த பரிசோதனை, சிறுநீர்ப் பரிசோதனை, எக்ஸ்ரே, ஈ.ஸி.ஜி, அல்ட்ராசவுண்ட்... என்று எல்லாவிதமான சோதனைகளையும் செய்து கொள்ள முடியும். இதனால் நமக்கே தெரியாமல் நமது உடலில் மறைந்து கொண்டிருக்கும் வியாதிகளைக் கூட நாம் தெரிந்து கொள்ள முடியும்.

பணிபுரியும் அலுவலகம் ஏற்பாடு செய்யும் என்று எதிர்பார்ப்பதைவிட அவரவர்களும் தாங்களாகவே முன்வந்து இந்த 'Master Health Checkup' சோதனையை செய்து கொண்டால், அது நல்ல பயனைத் தரும். கிட்டத்தட்ட அனைத்து மருத்துவ மனைகளிலும் இந்த வசதி இருக்கிறது.

இந்தச் சோதனைகளை செய்து கொள்பவர்கள், சோதனையைப் பற்றிய விபரங்கள் அடங்கிய '்பைலை' ஜாக்கிரதையாக வைத்திருக்க வேண்டும். அப்படி வைத்திருந்தால், டாக்டரிடம் ஞாபகப்படுத்திக் கொண்டு சொல்வதற்குப் பதிலாக, ்பைலை கொடுத்து விட்டால் அவர் எந்த விதமான பாதிப்பு, எதனால் ஏற்பட்டது என்பதை விரைவாக அறிந்து கொள்ள அந்த ்பைல் குறிப்புகள் உதவிகரமாக இருக்கும்.

Health File என்பதை தனியாகப் பராமரிப்பது நல்லது. அந்த பைலில் முதற்பக்கத்தில், எந்தெந்த மாத்திரைகள் அலெர்ஜியை ஏற்படுத்தும் என்று குறித்துக் கொள்ள வேண்டும். நீரிழிவு நோயுள்ளவர்கள் Diabetic Identification Card ஒன்றை தனியாக வைத்துக் கொள்ள வேண்டும். பலர் அச்சடித்த அட்டையை பையில் வைத்திருப்பதுண்டு. அதில், 'நான் மயக்கமடைந்து விட்டால், எனக்கு இரண்டு கரண்டி சீனி அல்லது இரண்டு சொக்லெட்டுகளைக் கொடுங்கள்' என்று எழுதிவைத்திருப்பார்கள். தனக்கு சிகிச்சை அளிக்கும் டாக்டரின் தொலைபேசி எண்ணையும், அதில் குறித்து வைத்திருப்பார்கள். அது மிகவும் நல்லது.

அதேபோல 'மார்புவலி' (Angina) உள்ளவர்கள், வலி வரும்போது நாக்குக்கு கீழ்ப்புறத்தில் வைத்துக் கொள்ளும் மாத்திரைகளை, பொக்கெட்டில் வைத்து கொள்வது நல்லது. எதிர்பாராத நேரத்தில், திடீரென்று மார்பு வலி எடுத்தால், ஒரு மாத்திரையை நாக்குக்கு அடியில் வைத்துக் கொண்டால், மார்பு வலி நீங்கி விடும். அதன் பிறகு டாக்டரிடம் செல்வதற்குப் போதுமான அவகாசமும் கிடைக்கும்.

பொது நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளும்போது, வேறு யாருக்காவது மார்பு வலி ஏற்பட்டால், அப்போது தங்களிடமுள்ள மாத்திரையை அந்த நபருக்குக் கொடுத்து உதவ முடியும்.

நமக்கு மட்டும் என்றில்லாமல், பிறருக்கும் உதவ முடியும் என்பதால் மார்பு வலி உள்ளவர்கள் இந்த வழக்கத்தைக் கடைப்பிடிப்பது நல்லது.

மருத்துவத் துறையில் நவீனமாக கருவிகள் அறிமுகப்படுத்தப்பட்டு வருவது பெருகி வருவதைப் போலவே, நோய் தீர்க்கும் மாத்திரைகளும் முன்பைவிட அதிகமாக அறிமுகமாகி வருகின்றன.

50 அல்லது 60ரூபாய் விலையுள்ள மாத்திரைகளும் 150அல்லது 200 ரூபாய் வரை விலையுள்ள ஊசி மருந்துகளும் இப்போது கிடைக்கின்றன. மருந்துகள் இந்த அளவுக்கு அதிக விலைக்கு விற்பதற்குக் காரணமிருக்கிறது.

இந்த மருந்துகளை ஆராய்ச்சி செய்து கண்டுபிடிக்கிற நிறுவனங்களுக்கு ஆகிய செலவுகளை, மாத்திரை, மற்றும் மருந்துகளின் மீது வைத்து, சம்பந்தப்பட்ட நிறுவனம் விற்பனை செய்யும். காலப்போக்கில் இந்த மாத்திரைகளின் புழக்கம் அதிகரித்து விட்டால் அவற்றின் விலையையும் அந்த நிறுவனமே குறைத்து விடும்.

இவற்றைப் போலவே வியாதியைக் கண்டறியும் முறைகளும் (Diagnostic methods) அதிகரித்திருக்கின்றன.

ஒரு பக்கம் நாளுக்கு நாள் புதுப்புது வியாதிகள் வருவது என்பது அதிகரித்துக்கொண்டே வருகிறது. மறுபுறம் அவற்றை எதிர்கொள்ளும் வகையில் நவீனமான கருவிகள், புதிய புதிய மாத்திரை, மருந்துகள் வியாதியைக் கண்டறிய புதிய முறைகள், உலக வைத்தியத்துறையின் எல்லாப் பகுதிகளையும் இணைக்கும் வசதி என்று மருத்துவமும் வளர்ச்சியடைந்துகொண்டு வருகிறது.


இதைப் புரிந்து கொண்டு மகிழ்ச்சியடைய வேண்டுமே தவிர, வியாதி வந்து விட்டதே என்று பயப்படக்கூடாது. அதேசமயம் வியாதிகள் வராமல், கூடிய வரை முன்னெச்சரிக்கையுடன் வாழப் பழகிக் கொள்ள வேண்டும். Health is Wealth என்று சொல்வதுண்டு. நோயற்ற வாழ்வுதான் குறைவற்ற செல்வமாகும். ●






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிதர்சனத்தின் புத்திரர்கள்



(நாடக எழுத்துருக்கள்)

**– கந்தையா ஸ்ரீகணேசன்**

10 நாடக எழுத்துருக்கள் இந்நூலில் அடங்கியுள்ளன. இவற்றில் 8, மேடையேற்றப்பட்டு கவனிப்பையும் பாராட்டுதலையும் பெற்றுள்ளன.

நூலின் ஆசிரியர் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் வவுனியா வளாக ஆங்கில விரிவுரையாளர். நாடகத்துறை சார்ந்த பன்முக விற்பன்னர்களிடம் பயிற்சி, கூட்டுச் செயற்பாடு, நட்பு கொண்டவர். ஆங்கில இலக்கியப் பலகணியூடாக உலக புகழ்பெற்ற நாடகங்களின் தரிசனத்தைப் பெற்றவர்.

இலங்கைத் தமிழர் சமுதாயத்தில் நாடகக் கலை அதாவது நடித்துக் காண்பித்து கருத்துச்சொல்லும் முறை காலத்துக்குக் காலம் பல்வேறு வடிவங்களை எடுத்து வந்துள்ளது. தமிழ்தேசிய உணர்வு மேலோங்கிய பின்னர், கவிதையும் நாடகமும் அதன் இரு கண்களாகின. அதன் வீச்சு இந்நூலிலுள்ள எழுத்துருக்களிலும் காணப்படுவது ஆச்சரியமன்று.

எந்த இலக்கிய வடிவமாயினும் காலத்தைப் பிரதிபலிப்பதுடன் நின்றுவிடாது எதிர்காலப் பயணத்துக்கான தூரதிருஷ்டி வீச்சையும் கொண்டிருப்பது இன்றைய கால அவசிய தேவை என்பதை இந்நூலில் உள்ள நாடகங்களிலும் உணர்த்தி நிற்கின்றன.

***வெளியீடு: இணுவில் கலை இலக்கிய வட்டம், வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டம்***

***பக்கங்கள்: 112 விலை: 150/-***

## மணல் வெளி அரங்கு



(சிறுகதைகள்)

**- இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதன்**

யாழ்ப்பாணத்தின் மண் செழுமையும் இலக்கியச் செழுமையும் எழுத்தாளப் பாரம்பரியச் செழுமையும் (தந்தையார் இணுவையூர் த. சிதம்பரநாதன்) கொண்ட திரு. சிதம்பர திருச்செந்திநாதன், ''எங்கள் இனத்தின் வீரியம் மிக்க சமகால விடுதலைத் தடத்தில் நடக்கும் பாக்கியத்தினைப் பெற்று'', ''1995ல் அக்டோபரில் எல்லோரையும் போலவே நாங்களும் எங்களது இயல்பான வாழ்விடத்தினை விட்டு இடம் பெயர்ந்து வன்னிக்கு வந்து, பல்வேறு முள்முடிகளைச் சுமந்தோம்'' (ஆசிரியரின் என்னுரை) என்பது அவரது கதைகளின் உள்ளடக்கத்தினை ஓங்கி ஒலிக்கும் முகப்புக்குரல். 10 கதைகள் கொண்ட இத்தொகுதியை 'நூறு பூக்கள் மலரட்டும், நூறு கருத்துக்கள் முட்டிமோதட்டும்' என்ற பதாகையின் கீழ் (மா ஓ சேதுங் மேற்கோளின்படி) தேசிய கலை இலக்கியப் பேரவை வெளியிட்டுள்ளது பொருத்தமானதே. அதை விளக்குமாப் போல பேராசிரியர் சி. சிவசேகரம் தமது முன்னுரையில், ''கதாசிரியரின் அரசியலுடனோ உலக நோக்குடனோ முற்றாக உடன்பட வேண்டியது இல்லாமலே அவரது கதைகள் அவர் வாழும் சமூகச் சூழலை நேர்மையாக அடையாளப்படுத்துவதை நாம் அறிய முடிகிறது'' எனக்குறிப்பிட்டுள்ளமை அர்த்தபுஷ்டியான விமர்சனமாகவும் அமைகின்றது.

***வெளியீடு: தேசிய கலை இலக்கியப் பேரவை,***

***பக்கங்கள் : 93 விலை: 125/-***

## நூல் ஆய்வு



**- மாணிக்கவாசகன்**

## குறிஞ்சிக் குயில்கள்



(மலையகப் பெண் கவிஞர்களின் தொகுப்பு)

**– தொகுப்பு அந்தனி ஜீவா**

முதன் முதலாக மலையகத்தைச் சேர்ந்த இருபத்தொரு இளம் பெண் கவிஞர்களின் கவிதைகள் தொகுக்கப்பட்டு நூலாக வந்துள்ளது. ஏற்கன்வே 2000ம் ஆண்டு 12 மலையகப் பெண் எழுத்தாளர்களின் சிறுகதைகளைத் தொகுத்து வெளியிட்ட மலையக வெளியீட்டகமே இச்சாதனையையும் புரிந்துள்ளது.

மலையகத் தமிழர்களை திட்டமிட்ட வகையில் இலங்கையின் தேசிய வாழ்வில் இணைக்காமல் இரண்டு நூற்றாண்டுகளுக்கு மேலாக இனவாத முதலாளித்துவ அரசுகள் வைத்திருந்தன. ஆனால் அவர்களது தொடர்ச்சியான தியாகப் போராட்டங்களால் இன்று படிப்படியாகத் தேசிய வாழ்வில் இணைக்கப்பட்டு வருகின்றனர். அதன் முகைகளை காண்கின்றோம். ஒரு வெளிப்பாடே இக்கவிதைத் தொகுதியும். மலையகப் பெண் கவிஞர்கள் தமது சமூகப் பெண்களின் உளவியலை உலகின் முன் வைக்க முயன்றுள்ளனர். நாட்டின் ஏனைய மக்கள், மலையகத்தைப் புரிந்து கொள்ளும் சாளரங்களாக இக் கவிதைகள் திகழும்.

***மலையக வெளியீட்டகம், கண்டி.***

***பக்கங்கள் 31 விலை 50/-***

## தீவகத்து ஊமைகள்

(கவிதைகள்)

**– சு. முரளிதரன்**



தோட்டப் பாட்டாளி மக்களின் துயர்மிகுந்த வாழ்வையும் இடர்மிகுந்த வரலாற்றுச் சுவடுகளையும் தனது வலிமைமிக்க கவிவரிகள் மூலம் உலகின் முன் வைத்துள்ளார் கவிஞர் சு. முரளிதரன்.

வடக்குகிழக்குத் தமிழ் மக்களின் வாழ்வு கடந்த இரு தசாப்தங்களாக கண்ணீரிலும் செந்நீரிலும் தள்ளாடுகின்றது. மலையகத் தமிழ் பாட்டாளி மக்களின் வாழ்வோ ஆரம்பம் முதல் ஆறாத் துயர சமுத்திரத்தில் அமிழ்ந்து கிடக்கின்றது. காலனித்துவ வெள்ளைத்துரையும், சுதேசிய கறுப்புத் துரையும் அவர் தம் ஏவலர்களான பொலீஸ் படையும் ஏன் குண்டர் படையும் கூட அவர் தம் கண்ணீரை மட்டுமின்றி செந்நீரையும் ருசி பார்த்து வந்துள்ள சோக வரலாறு அவர்களது.

அத்தகைய சோக வரலாற்றின் 10 சோகப் பாடல்களை இத் தொகுதியில் கவிஞர் தந்துள்ளார். சோகம் மட்டுமல்ல தம் மக்களின் வீரத்தையும் தியாகத்தையும் கூட இக்கவிதைகள் சுமந்து நிற்கின்றன.

***வெளியீடு: மலையக வெளியீட்டகம், த.பெ.இல. 32, கண்டி.***

***பக்கங்கள்: 40 விலை: 55/-***

## எழுதுகோலும் என் வெள்ளைத்தாளும்

(கவிதைகள்)

**- ஷல்மானுல் ஹரீஸ்**



கிழக்கிலங்கையின் வாழைச்சேனை, கடதாசித் தயாரிப்புக்கு மட்டும் பெயர்போன ஊரல்ல. அதற்கு பல நூற்றாண்டுகளுக்கு முன்னதாகவே தரம்மிக்க கவிஞர்களை அவ்வூர் உருவாக்கி வந்துள்ளது. அதன் தொடர்ச்சியின் படைப்பாக ஷல்மானுல் ஹரீஸ் உருவெடுத்துள்ளார். அவர் தன் முப்பது கவிதைகளை ஒரு சரமாக்கித் தந்துள்ளார் இத் தொகுப்பில்.

'தேனும் பாலும் ஓடிய' மண்ணில் இன்று மரண ஓலங்கள் மலிந்துவிட்ட சூழலில் பிறந்த கவிஞர், தனது வாழ்வின் அனுபவங்களையும், மனஉணர்வுகளையும் வடித்துள்ளார். இக் கவிதைகளின் மத்தியில் இரண்டு கவிதைகள் படிப்பவர் கவனத்தை ஈர்த்து நிற்கின்றன. ஒன்று சல்மான் ருஷ்டி மீதான வசைபாடல் கவிதை. மற்றையது இலங்கையின் இனப்பிரச்சினைக்கு வைத்தியம் பார்க்க இந்திய, இஸ்ரேல் பூசாரிகள், குறளிக்காரர்கள் வரிசையில் வந்திருக்கும் 'நோர்வே' பரிசாரி பற்றிய சந்தேகப்பாடல்.

சிந்தனையைக் கிளறிச் செல்கின்றன.

***வெளியீடு: இளங்கலை இலக்கியப் பேரவை, வாழைச்சேனை.***

***பக்கங்கள் : 76 விலை: 90/-***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தினகரன்

தினகரன் THINAKARAN

உங்கள் தினகரன் பல்வேறு பயன்மிக்க அம்சங்களைத் தாங்கி வருகின்றது.

அதிகளவு செய்திகள், சமகால விடயதானங்கள் அர்த்தபுஷ்டியான கட்டுரைகள்...

தமிழ் பேசும் மக்களின் தேசியக் குரலான தினகரன் வாசகர்களுக்குப் புதிய தரிசனங்களைத் தருவதில் தொடர்ந்தும் முன்னிலையில் நிற்கின்றது.

வாசிப்புக் கலாசாரத்தை வளர்த்தெடுப்போம்!

நிறைவுபெற்ற மனிதர்களாக வாழ்ந்திடுவோம்!

வாழ்வதற்காகவே வாசிப்போம்!




தினகரன் வாரமஞ்சரியின் இலவச இணைப்பிதழ்!

தொலைக்காட்சி கையேட்டுடன்

வயது, பால் வித்தியாசமின்றி உளமறிந்து சகலரையும் அரவணைத்துச் செல்லும் ஒரு பல்சுவை விருந்து!

சகல லேக்ஹவுஸ் முகவர்களிடமும், புத்தகசாலையிலும் பெற்றுக் கொள்ளலாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமுது

## சந்தா விபரம்
### உள்நாட்டு சந்தா
### (ரூபாவில்)

| | 1வருடம் | 6மாதம் | 3மாதம் |
|---|---|---|---|
| நேரடி விநியோகம் கொழும்பு நகருக்குள்) | 360.00 | 180.00 | 90.00 |
| தபால்மூல விநியோகம் | 552.00 | 276.00 | 138.00 |


### வெளிநாட்டு சந்தா
### (அமெரிக்க டொலரில்)

| நாடு | | 1வருடம் | 6மாதம் | 3மாதம் |
|---|---|---|---|---|
| இந்தியா | $ | 10.00 | 5.00 | 3.00 |
| பாகிஸ்தான் | $ | 10.00 | 5.00 | 3.00 |
| மாலைதீவு | $ | 10.00 | 5.00 | 3.00 |
| சிங்கப்பூர் | $ | 12.00 | 6.00 | 3.00 |
| மத்திய கிழக்கு | $ | 12.00 | 6.00 | 3.00 |
| ஹொங்கொங் | $ | 12.00 | 6.00 | 3.00 |
| இங்கிலாந்து | $ | 13.50 | 7.00 | 3.50 |
| அவுஸ்ரேலியா | $ | 13.50 | 7.00 | 3.50 |
| ரஷ்யா | $ | 13.50 | 7.00 | 3.50 |
| அமெரிக்கா | $ | 16.50 | 8.25 | 4.25 |
| கனடா | $ | 16.50 | 8.25 | 4.25 |

**காசோலைகள், அனுப்பப்பட வேண்டிய பெயர்:**
The Associated Newspapers of Ceylon Ltd.

**முகவரி:**

Marketing Manager,
The Associated Newspapers of Ceylon Ltd,
P.o. Box 1198,
Lake House,
Colombo, Sri Lanka.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org